விலை சதம் 25

# சுதந்திரன்
SUTANTIRAN

புத்தகம் 20—திருவள்ளுவர் ஆண்டு 1997 கார்த். திங்கள் 4-ம் நாள் (19—11—1966) சனிக்கிழமை ஷஃ. 5 | இதழ் 24

# தீண்டாமையை ஒழிக்க சட்டம் வரும்

ஆலய வழிபாட்டில் நிலவும் சாதிப் பாகுபாட்டை நீக்கி அனைவரும் ஆலயத்தினுள் செல்வதற்கு ஏற்ற முறையில் புதிதாக சட்டம் வரலாம் என்றும் தற்பொழுது சமூகக் குறைபாட்டிற்கு எதிராக இருக்கும் சட்டத்தில் சில புதிய திருத்தங்கள் செய்யப்படலாம் என்றும் கோப்பாய்ப் பிரதிநிதி திரு. சி. கதிரவேற்பிள்ளை சுதந்திரன் நிருபரிடம் கூறியுள்ளார்.

தமிழ்மக்கள் மத்தியில் ஆங்காங்கே இருந்துவரும் சாதிப் பாகுபாட்டை ஒழிப்பதற்கு ஒரு புதிய நடவடிக்கையாக ஒவ்வொரு தமிழரசு எம்.பி. தலைமையிலும் அவரவர் தொகுதியில் தேனீர்க்கடைப் பிரவேசத்திற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்று சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி.என். நவரத்தினம் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் சாதிப்பாகுபாட்டிற்கு எதிராக நடைபெறவிருந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை கோப்பாய்ப் பிரதிநிதி திரு. சி. கதிரவேற்பிள்ளையும், சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினமும் தலையிட்டு நிறுத்திவைக்க முயற்சி செய்தது தெரிந்ததே. சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதற்கு முன்னர் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி இவர்கள் இருவரும் சத்தியாக்கிரகத் தலைவர்களிடம் விளக்கிக் கூறினர்கள்.

சாதிப் பாகுபாட்டை நீக்குவதற்கு முதலில் தீவிர பிரச்சாரம் தேவை என்றும் அதனை இதுவரை தமிழரசுக்கட்சி செய்துவந்திருக்கிறது என்றும் அவ்வப்போது தமிழரசுக்கட்சி எடுத்துவந்த நடவடிக்கைகளும் அங்கு விளக்கிக் கூறப்பட்டது.

பிரச்சாரத்தின் பின்னர் சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் அதன் பின்னர் இயக்கங்கள் அவசியம் என்றும் இத்தலைக்குப் பின்னரே சத்தியாக்கிரகம் மேற்கொள்ளலாம் என்றும் திரு. கதிரவேற்பிள்ளை அவலரைச் சந்தித்த சத்தியாக்கிரக இயக்கத் தலைவர்களிடம் விளக்கிக் கூறியதாக அறியப்படுகிறது. ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளாது தனியே சத்தியாக்கிரகத்தின் மூலம் சாதிப் பாகுபாட்டிற்கு முடிவுகாண எடுக்கும் நடவடிக்கை இற்றைவரை தமிழரசுக் கட்சி செய்துவந்த பிரச்சாரத்தையும் ஊறுபடுத்திவிடும் என்றும் ஆகவே சத்தியாக்கிரகத்தைக் கைவிடும் வண்ணம் திரு. கதிரவேற்பிள்ளை விடுத்த வேண்டுகோளை சத்தியாக்கிரகத் தலைவர்கள் கவனத்துக்கு எடுத்துக் கொண்டார்கள்.



திரு. கதிரவேற்பிள்ளை சாதிப்பாகுபாட்டை நீக்குவதற்கான சட்டங்களைக் கொண்டுவரும் வண்ணம்

(9-ம் பக்கம் பார்க்க)

## பொய்ச் செய்திக்கு அபிப்பிராயம் வேறு?

—————0—————|—

## "தினபதி"க்குப் பேராசிரியர் கொடுத்த சூடு

'மக்களுக்கு உண்மையான செய்திகளைத் தர வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு இருந்திருந்தால் தமிழ்பல்கலைக் கழகம் பற்றிய செய்தியை, உங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு முன்பே என்னிடம் கேட்டு உண்மை, பொய்யைத் தெரிந்திருக்க வேண்டும். அதைவிடுத்து, பொறுப்பற்றவர்களிடம் எதையாவது கேட்டு, பொறுப்பற்ற முறையில் அதைப் பிரசுரித்துவிட்டுத்தானா என்னிடம் அபிப்பிராயம் கேட்பது? தெருவீதியில் செல்பவன் ஏதாவது கூறினால் நாளைக்கு அதையும் பிரசுரிப்பீர்கள் போலும்! இது தான் உங்கள் பத்திரிகா தர்மமா?'

தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் சம்பந்தமாகத் 'தினபதி வெளியிட்ட செய்தி பற்றி பேராசிரியர் திரு. ஆ. வி. மயில்வாகனத்திடம் தினபதி ஆசிரியர் அபிப்பிராயம் கேட்ட போது தான் இப்படிச் சுடச்சுடப் பதிலளித்ததாக சுதந்திரன்

(9-ம் பக்கம் பார்க்க)

"மெய்கண்டான்"

| | | |
|---|---|---|
| 1. | ஆபிஸ் கலண்டர் (1தத்தி பிளாக்கென் அளவு 5"X7½") | 5-00 |
| 2. | திருக்குறட் கலண்டர் No. 1 ஸ்பெசல் | 2-40 |
| 3. | நன்மொழிக் கலண்டர் No. 2 | 1-35 |
| 4. | மாதக் கலண்டர (பஞ்சாங்கக் கலண்டர்) | -85 |
| 5. | சிங்களக் கலண்டர் (No. 1 கலண்டர் அளவுள்ளது) | 2-15 |
| 6 | சேரின் கலண்டர் (பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன்) | 5-50 |
| 7. | தகரப் படம் (அழகிய பல மாதிரிகள்) | 2-75 |
| 8. | No. 1 பிளாஸ்ரிக்தமிழ்டயறி (பிளாஸ்ரிக்கவருடன்) | 2-75 |
| 9 | No. 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி ,, | 2-20 |
| 10. | No. 3 பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி ,, | 3-60 |
| 11. | No. 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 2-20 |
| 12. | No. 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 1-75 |
| 13 | No. 6 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி A (பக்கம் 1 நாள்) | 3-85 |
| 14. | No. 7 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி B (பக்கம் 2 நாள்) | 3-30 |
| 15. | No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக்கவர்) | 3-55 |
| 16. | பிளாஸ்ரிக் சிங்கள டயறி ,, | 2-20 |
| 17. | பேர்ஸ் சிங்கள டயறி ,, | 3-15 |
| 18. | பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி | 5-50 |
| 19. | No. 1 பேர்ஸ் தமிழ்டயறி (பேர்ஸ்சகிதம் WithPurse) | 3-71 |
| 20. | No. 2 பேர்ஸ் திருக்குறள் டயறி ,, | 3-15 |
| 21. | No. 4 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி ,, | 3-15 |
| 22. | No. 5 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி ,, | 2-75 |
| 23. | No. 6 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1 நாள்) | 4-95 |
| 24. | No 7 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2 நாள்) | 4-40 |
| 25. | No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக்கவர்) | 5-25 |
| 26 | வலற் டயறி (Wallet Diary - மிகச் சிறந்தது) | 6-50 |
| 27 | ஜெம் டயறி (Gem Diary) பிளாஸ்ரிக் | 1-85 |
| 28 | ஜெம் பேர்ஸ் டயறி Gem Purse Diary) | 2-75 |
| 29. | புரொபெஷனல் பிளாஸ்ரிக் (Appointments) டயறி மிகப் பெரிது 7¼"X9½" அளவுள்ளது | 7-00 |
| 30. | புரொபெஷனல் பாக்கெட் பேர்ஸ் டயறி | 4-15 |

தங்கநிற (Rolled Gold) பூட்டுடன் கூடிய பேர்ஸ் டயறிகள்

| | |
|---|---|
| No. 2 திருக்குறள் டயறி (பூட்டுடன் பேர்ஸ்) | 4-25 |
| No. 2 திருக்குறள் சினிமா டயறி ,, | 4-75 |

இன்னும் பல உண்டு.

மெய்கண்டான்
அச்சியந்திரசாலை லிமிட்டெட்
161, செட்டியார் தெரு,
போன்: 79141 கொழும்பு-11

## பொறுப்பதிகாரி ஒருவரை நியமிக்கவும்

இலங்கை மத்திய வங்கியின் தமிழ் மொழி பெயர்ப்புப் பிரிவிற்கு தமிழ் நன்கு தெரிந்த ஒருவரைப் பொறுப்பாக நியமிக்கும் வண்ணம் கிளிநொச்சிப் பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் இலங்கை மத்திய வங்கி ஆளுனருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் மாதாந்த செய்தித்திரட்டு தமிழில் வெளிவரத் தாமதமாவதையிட்டு வங்கி ஆளுனர் அவ்வப்போது முன்னுக்குப்பின் முரணாகக் கருத்துக்களைத் தெரிவித்திருப்பதைப்பற்றி ஆளுனருக்கு எழுதிய கடிதத்திலேயே திரு. இரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மொழி பெயர்ப்புப் பகுதிக்கு தமிழ் நன்கு தெரிந்த ஒருவரைத் பொறுப்பதிகாரியாக நியமித்தால் இப்பிரச்சினைகளுக்கோ வீண் காலதாமதத்திற்கோ இடமேற்படமாட்டாது. ஆகவே ஓர் அதிகாரியை நியமிக்க உடன் நடவடிக்கை எடுக்கவும் என்று அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த இதழ்
தலைநகர்
24-11-66
வெளியூர்
25-11-66

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




# மறைந்தும் மறையாத மாவீரர் ஜோன். எப். கென்னடி

**த. இந்திரலிங்கம்:**

வருடாவருடம், மறைந்து போன ஆபிரகாம் லிங்கனுக்காகக் கண்ணீர் சிந்தும் அமெரிக்கநாடு-ஏன் முழு உலகமுங்கூட- இப்பொழுது, மறைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோன்-பிட்ஜெரால்ட் கென்னடிக்காகவும் கண்ணீர் சிந்துகிறது. உலகிலே பகைவரையும் கவர்ந்து விட்டு, ஒப்பற்ற சமாதான ஒளியை அவர்களிடத்திலும் பரப்பப் பாடுபட்டு மறைந்த ஜோன்--எப்-கென்னடியின் மறைவை உலகம் வருடாவருடம் நினைந்து அஞ்சலிப்பது எவ்விதத்திலும் புதுமையானதல்ல; அது உலக மக்களின் மனித இதய இயல்பாகும்.

பெருமைக்குரிய ஜோன்--எப்-கென்னடி ஒரு சாதாரண அரசியல்வாதி மட்டுமல்ல; அவர் கனல்கக்கும் பேச்சாளர்; சிந்தனையாளன்-அத்துடன் உலகிலே அபிமானம்பெற்ற ஒருஎழுத்தாளருங்கூட. ஒவ்வொரு துறையிலும் மிகுந்து ததும்பிய அவரது திறமையே, அவரை உலகின் செல்வபுரியாகிய அமெரிக்காவுக்கு ஜனாதிபதியாக்கியது என்ருல், அஃது மிகையாகாது. அவரது முகத்திலே ஒரு கள்ளங் கபடமற்ற குழந்தையின் சிரிப்பையும் காணலாம்; கனல்கக்கும் சிந்தனைக்கீற்றுகளையும் நெற்றிச் சுருக்கத்திற் கண்டுவிடலாம்.

1917ம் ஆண்டு மே மாதம் 29-ம் திகதி அமெரிக்காவிலே மாஸாசூஸெட்ஸ் மாகாணத்தில் பொறுமைக்கும், பணிவுக்கும் பெயர்பெற்ற கென்னடி குடும்பத்திலே, ஜோசப் கென்னடிக்கு மகனுகப் பிறந்தார், ஜோன் பிட்ஜெரால்ட் கென்னடி ஒன்பதுசகோதர சகோதரிகளில் ஒருவராக விளங்கினர். கென்னடி மூத்த சகோதரன்-'ஜோ'; ஜோதான் கென்னடிக்கு வழிகாட்டி. அத்துடன் ஜோதான கென்னடி குடும்பத்தின் பொறுப்பாளனுகவும் விளங்கினுன். எனினும் ஜோவுக்கும், கென்னடிக்கும் என்றுமே சமாதானமிருந்ததில்லை. தனையனைச் சந்திக்கும்போதெல்லாம் கென்னடி அவனுடன் சண்டை போட்டுக்கொள்வார். ஆனுல் ஜோ இறந்த பின்னர், கென்னடி ஜனாதிபதியாக வந்த பின் தனது இளமைப் பருவச் செயல்களை எண்ணியபோது அவரின் கண்கள் கலங்கின. தனது குற்றத்தை மனம்விட்டுச் சொன்னுர் அவர்:-'நான் சிறுவயதிலே ஜோவுடன் ஒருபோதும் சந்தோசமாகஇருந்தது கிடையாது; ஏதாவது ஒன்றையெடுத்துச் சண்டை பெடுத்து வாதிடுவேன்! ஆனுல் அவன் இறந்த பிறகுதான் அவனது இன்றியமையாமை எனக்குத் தெரிந்தது...என்னையும், எனது உடன் பிறந்தோரையும் வழிநடத்திச் சென்றவனே அவன்தான்! அவனைப்போல அறிவாளி எனது குடும்பத்திலேயே வேறெவரும் இல்லை.'

கென்னடி தவறுகளை மறைக்க முயலாத அபூர்வ மனிதர்; தவறு தன்னிடமிருப்பினுங் கூறிவிடுவார் இளம் வயதிலே அவர் பொறுப்பற்றுத்தான் திரிந்தார். கல்வியைவிட, விளையாட்டுக்களையே அவர் பெரிதும் விரும்பினுர். ஆனுல் சிறிது காலத்தின் பின்தான் அவர் கல்வியிலே அக்கறை காட்டினுர். உலகிலுள்ள பல பல்கலைக் கழகங்களிலும் படிக்க வேண்டுமென ஆவலுற்ருர். அந்தஆவல், இலண்டனிலே பேராசிரியர் ஹெரால்ட் லொஸ்கியிடம் பொருளாதாரம் படிக்கும் பாக்கியத்தை அவருக்கு அளித்தது.

கென்னடி எழுதிய நூல்களிலொன்ருன 'தீரர்களின் வாழ்க்கை' என்பது மதிப்புமிக்க புலிட்ஸர் பரிசைப் பெற்றது. அதனுலவருக்குக் கிடைத்த 500 டொலர்களை



யும் அமெரிக்க ஐக்கிய நீக்கிரோக் கல்லூரிக்கு அன்பளித்தார் ஜோன்-எப்-கென்னடி;

அழகுமிக்க மங்கையான ஜாகுலின்-லியை, 1953ம் ஆண்டு, 12ம் நாள் (செப்டம்பரில்) மணைவியாகக்கொண்ட கென்னடி, 1961ம் ஆண்டு ஜனவரிமாதம் 20ம் திகதி வாஷிங்டன் நகரிலே ஜனாதிபதியாகப்பிரமாணம்செய்து கொண்டார். அன்று அவர் பேசிய பேச்சு அகில உலக மக்களையும் கவரும் சக்தி படைத்ததாயிருந்ததோடு, அமெரிக்காவின் சுதந்திரக் குரலை அகிலமெங்கும் ஒலிப்பதாயும் இருந்தது. நெற்றி மீதிலே தவழ்ந்து விளையாடும் மயிர்க்கற்றையைமேலே ஒதுக்கியவாறு அழகாக, அமைதியாக, ஆடம்பரமின்றிப் பேசினுர் ஜோன்-எப்--கென்னடி.

அந்தப் பேச்சைக் கேட்ட அமெரிக்க மக்கள் புதிய உணர்ச்சியுடன், உழைக்கும் ஆவலும் வரப்பெற்றார்கள். நீக்கிரோக்களின்மீது இனத்துவேசம் பாராட்டிய வெள்ளையர்பலர் கென்னடியின் பேச்சினுல் மனம் மாறினுர்கள்.

கென்னடி பெண்ணைப் பெண்ணென மதித்தார். மக்களுக்கு ஒரு தலைவனுக வாழ்ந்த அவர் வீட்டிலே ஜாக்குலினுக்கு ஒரு அருமையான கணவனுகவும், கரோலினுக்கும், ஜோனுக்கும் ஒரு அருமையான அப்பாவாகவும் வாழ்ந்தார். அவரது வாழ்க்கைப்படகு அமைதியான நீல நதியிலே ஓடிக்கொண்டிருந்தது. காலப்போக்கில், 1963ம் ஆண்டு நவம்பர்மாதம 22ம் திகதி... ...நீக்கிரோக்களுக்குப், வெள்ளையர்க்கும் இடையேயுள்ள இனவேறுபாடுகளினுலே ஏற்படும் சிக்கல்களுக்கு நிரந்தரமான தீர்வு காண விரும்பிய ஜோன்-எப்-கென்னடி துணைவியுடன் டல்லாஸ் நகரத்திற்குப் பிரயாணமானுர். பலர் தடுத்தபோதிலும் அவர் தனது கடமையுணர்வையே பெரிதென மதித்துச் சென்ற ஜோன்-எப்-கென்னடியின் உடலினிரத்தம், கொலைவெறிகொண்ட லீ-ஹாரவி--ஆஸ்வால்ட் என்பவனின் துப்பாக்கிக் குண்டுகளின் வெம்மையைத் தணித்துக் கொண்டது.

கென்னடி ஜனாதிபதிப் பதவியிலே கடமையாற்றியது சிறிது காலம்தான்; எனினும் தனது கடமை நாட்களிலே செய்த பெரும் செயல்களும், இளமையிலே செய்த துணிகரச் செயல்களும், சமாதானத்தை உலகிடையே பரப்ப எடுத்த முயற்சிகளும், அவருக்கு நிலையான இடத்தைச் சரித்திரத்திலும், மக்கள் உள்ளங்களிலும் பெற்றுக் கொடுத்துவிட்டன.

## யாழ். மாவட்ட மாணவர்களே!

உங்களின் உள்ளத்தைக் கவர்ந்த (யாழ மாவட்ட) உதைபந்தாட்ட வீரர் யார்?

யாழ். மாவட்ட கல்லூரிகளின் உதைபந்தாட்டப் போட்டிகள் முடிவடைந்து விட்டன. ஜே. எஸ். எஸ். ஏ. மைதானத்தில் பல உதைபந்தாட்ட வீரர்களை நீங்கள் கண்டிருப்பீர்கள். இவர்களில் உங்கள் உள்ளத்தைக் கவர்ந்த அந்த உதைபந்தாட்டவீரர் யார்என்பதைக் கண்டுபிடிக்க சுதந்திரன் ஒரு தேர்தலை நடத்தவிருக்கிறது. இத்தேர்தலில் நீங்கள் அனைவரும் கலந்துகொண்டு உங்கள் மனதுக்குப் பிடித்த வீரரைத் தெரிவுசெய்யுங்கள்.

இத்தேர்தலில் கல்லூரி மாணவர்கள் மட்டுமின்றி உதைபந்தாட்ட இரசிகர்களும் வாக்காளர்களாகக் கலந்துகொள்ளலாம்.

**விபரம் அடுத்த இதழில்**

## மாலை நேரம்

—பிறையன்பி—

மாலை நேரம் வருகுது!
மனமும் பறி போகுது!
சோலைக் குயில் கூவுது!
சொகுசாய் மயில் ஆடுது!

வானம் மெல்ல இருளுது!
வண்டும் பறந்து செல்லுது!
வானம்பாடி புள்ளினம்!
விரைந்து கூடு செல்லுது!

மங்கலான நீரிலே!
மீனும் துள்ளி மறையுது!
தங்க நிறத் தாரகை
தரையை எட்டிப்பார்க்குது!

பாம்பும் புற்றுள் நுழையுது!
பாறை இருள் சூழுது!
ஆம்பல் மெல்ல மலருது!
ஆந்தையொன்று அலறுது!

—

## தும்மல் மகாத்மியம்

கொலம்பியாவின் மாஜி ஷெரீப்பான டானி ஹேலெஸ் என்பவருக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னுல் ஒரு பாங்க் கொள்ளையின் போது தலைக்குள் குண்டு பாய்ந்து விட்டது. அப்போது அதை ஆபரேஷன் செய்து வெளியே எடுக்க டாக்டர்கள் பயந்தனர். சில வருடங்களுக்கு முன்பு, இவர் இருமலினுல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார். இவர் ஒரு நாள் பலமாகத் தும்மியபோது, 25 வருடங்களாக இவர் தேகத்திலேயேயிருந்த குண்டு. வெளியே வந்து விழுந்தது. சாதாரணமாய் தும்மலும் இருமலும் மனிதனுக்கு அதிர்ச்சியும் வேதனையுமளித்தாலும் கூட சில சமயங்களில் மனிதனைக் காப்பாற்றவும் செய்கிறது.

ஒரு சமயம் அமெரிக்கர் ஒருவர் தும்மலின் போது கட்டிலிலிருந்து கீழே தூக்கிப் போட்டுவிட்டது. இதனதிர்ச்சியில் இவருடைய கால் விரல்கள் உடைந்து போயிற்று.

இன்னொருவருக்கு தும்மலின் அதிர்ச்சியினுல் மண்டை ஓடே பிளந்துவிட்டது.

இன்னொரு பெண்ணுக்கு தும்மல் அவளுடைய முதுகெலும்பை உடைப்பதற்குக் காரணமாக இருந்தது. தும்மலும் இருமலும் இம்மாதிரி ஆளைக் கொல்லுவதாயுமிருக்கலாம்!

## வினு விடை

பேசும் இயந்திரம் உண்டா?

உண்டு. பாடக்கூடியதும், சில வசனங்களைப் பேசக்கூடியதுமான ஓர் இயந்திரத்தை கேம்பிரிட்ஜிலுள்ள மஸ்ஸ சுசெற்ஸ் நிலையம் செய்தது.

உலகிலே மிகப் பெரிய சுடிகாரம் எங்கே உண்டு? அதன் பெரிய சிறிய முள்ளுகளின் நீளம் என்ன?

நியூயோர்க்கில் உண்டு. பெரிய முள்ளின் நீளம் 27 அடி 3 அங்., சிறிய முள்ளின் நீளம் 19 அடி 8 அங்குலமாகும்.

இத்தாலி மொழியில் மொத்தம் எத்தனை எழுத்துக்கள் உண்டு.

இருபது (20) எழுத்துக்கள் உண்டு.

ஐன்ஸ்டைன் எங்கு எப்போது பிறந்தார்? எவ்வகுப்பைச் சேர்ந்தவர்? எத்துறையில், எவ்வருடம் நோபல் பரிசு பெற்ருர்?

ஐன்ஸ்டைன் ஜேர்மனியில் 1879-ம் ஆண்டு பிறந்தார். யூத வகுப்பைச் சேர்ந்தவர். 1921-ம் ஆண்டு நோபல் பரிசு பெற்ருர். பௌதிகத் துறையில்.

"கஸ்தூரிமான்" எங்கே வசிக்கிறது? அதிலிருந்து என்ன கிடைக்கிறது?

மத்திய ஆசியா, வடகிழக்கு ஆசியா, நேபாளம், சிக்கிம் ஆகிய பகுதியிலுள்ள மலைகளில் இவை வசிக்கின்றன. வாசனைத் திரவியமும், மருந்தானதுமான கஸ்தூரி என்னும் பொருளும் இதிலிருந்து கிடைக்கிறது.

பூனையின் ஆயுள் என்ன?

பதினைந்து (15) வருடங்கள்.

'எலிமெண்ட்ஸ்'(Elements) லுக்குத் தமிழ் பதம் என்ன?

மூலகம் அல்லது தனிமங்கள்.

தொகுத்தவர்:
சா. அன்ரன் ஜெயக்குமார்.

அன்புள்ள மருமக்களே,

வணக்கம். இம்மாதம் 22-ம் திகதி உலக உத்தமர்களில் ஒருவரான கென்னடியின் நினைவு தினம். அதையொட்டி மருமகன் இந்திரலிங்கம் எழுதிய ஒரு கட்டுரை இடம் பெறுகிறது.

நிற்க. அடுத்தவாரம் முதல் மாணவர் மன்றம் பல புதிய அம்சங்களுடன் வெளிவருகிறது. மிஸ்டர் வித்தகரும், வல்லவனும் வாரா வாரம் உங்களுக்கு புதிய விருந்துகள் படைக்க காத்திருக்கிருர்கள். புதிய போட்டிகள் ஆரம்பமாகின்றன.

உங்களுக்கு மகிழ்ச்சிதானே!

அன்புள்ள,
வளர்மதி மாமா.




மு. மகேஸ்வரன்,
மாவிட்டபுரம்.

கே: 'சிங்களத்தீவினிற் கோர் பாலமமைப்போம்' என்று பாரதியார் பாடியிருக்கிறரே பாரதியாரின் இக் கருத்து சரியானது என நீங்கள் நினைக்கிறீர்களா?

ப: இது சரியான கருத்தன்று. சிங்களவர் பெரும்பான்மையேராக வசிப்பதாலும், தொன்னிந்தியாவில் தமிழகம் ஒன்று இருப்பதாலும் இலங்கையைச் சிங்களத் தீவு என்று அவர் குறிப்பிட்டிருக்கலாம்.

ஃ

மு. கருணநிதி,
ஏழாலை மேற்கு.

கே: திரு. பொன்னம்பலத்தின் சுற்றுப் பிரயாணம் இன்னும் முடியவில்லையா?

ப: நாடு ஆறு மாதம் காடு ஆறுமாதம் ஆண்ட விக்கிரமாதித்தனைப் போல இலங்கையில் ஆறுமாதம் அமெரிக்காவில் ஆறுமாதமாக இருக்கப்போகிறரே என்னவோ! இலங்கையில் ஆறுமாதம் லண்டனில் ஆறுமாதமாகக் காலத்தைக் கழிக்கும் ஒரு முன்னள் பிரதமரும் இங்கு இருக்கிறர்.

ஃ

அர்த்தநாரீசுவரன்,
பதுளை.

கே: என்னைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

ப: நீங்கள் பாதி ஆண்—பாதி பெண் என்று நினைக்கிறேன்.

ஃ

எஸ். துரைராஜா.
கொட்டகலை.

கே: இன்று மலையகத்தில் உலவும் ஒரு தினசரிப் பத்திரிகை வரும் காலத்தில், இடது சாரிப் பத்திரிகையாக மாறுமென்று நினைக்கிறேன்!

ப: அது சிங்கள வகுப்புவாதிகளின் தமிழ் ஊதுகுழல். வருங்காலத்திலும் அம் மாதிரியே இருக்கும்.

ஃ

ஆ. கி. மூர்த்தி,
பம்பலப்பிட்டி.

கே: பெரும்பான்மை சிறுபான்மை என்ற ஈரினங்கள் இருக்கும் வரை எந்த அரசாங்கத்தைத்தான் நீதியான அரசாங்கம், என்று சொல்ல முடியும்?

ப: எந்த அரசாங்கத்தையும் நீதியானது என்று சொல்லலாம் ஈரினங்களுக்கும் சம அந்தஸ்தை வழங்கினல்.

வி. பிரான்சிஸ்,
முருங்கன்.

கே: தனக்கு கிடைத்த தங்கப்பவுன் மாலையை பொது நலனுக்காக தானம் செய்த திரு பொன்னம்பலத்தை 'ஈழத்துக் கொடை வள்ளல்' என அழைக்கலாமா?

ப: ஆஹா தாராளமாக அழையுங்கள்! எமக்கு ஆட்சேபமில்லை. வழியிற் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பவர் கொடை வள்ளல்தானே!

ஃ

க. இராஜேந்திரம்.
கைதடி, தெற்கு.

கே: மனித நாகரீகத்திற்கு, சட்டமா சமயமா அவசியம்?

ப: சமயமே அவசியம். நாகரீகத்தைக் காப்பதற்குச் சமயக் கோட்பாடுகளே போதும். அவை சட்டங்களை விட சக்திவாய்ந்தவை.

ஃ

கே: குயுக்தியாரே நான் யார் தெரியுமா? என் நிலைமை உமக்குப் புரியுமா?

ப: நீங்கள் கேள்வி கேட்பவர் என்பது எனக்குத் தெரியும். எனது பதிலை விழுந்து விழுந்து வாசிக்கும் நிலைமையில் இருக்கிறீர் என்பதும் எனக்குப புரியும்.

ஃ

சி. நவம்,
கோண்டாவில்,

கே: எனது நண்பர் ஒருவர் அவசரப்பட்டு என்மீது பகைத்துக் கொள்கிருரே என்ன செய்யலாம்.

ப: அவசரக்காரன் புத்தி மட்டு என்பதை அவருக்கு அவசரப்படாமல் உணர்த்துங்கள்.

ஃ

கே. எம். யூசுப்,
சின்னக்கிண்ணியா-2

கே: தற்போது நடைபெற்று முடிந்த இடைத் தேர்தல் நமக்கு எதை வலியுறுத்துகின்றது.

ப: இனி ஒவ்வொரு இடைத் தேர்தலிலும் வகுப்புவாதத்தைத் தூண்டி விட எதிர்க்கட்சியினர் மறக்கமாட்டார்கள் என்பதனை எடுத்துக் காட்டுகிறது.

ஃ

க. பாலசிங்கம்,
கொழும்பு-13.

கே. இன்று தமிழ் பேசும் மக்களுக்கு வேண்டியது எது?

ப: அவசரமாக வேண்டியது மாவட்டசபை. அடுத்து வேண்டியது தமிழ் பல்கலைக் கழகம்.

ஃ

கண்ணன்,
நீர்கொழும்பு

● கே: இக்காலப் பெண்கள் கால் சட்டைக்காரரை ஏன் விரும்புகின்றனர்கள்?

ப: கைக்குச் சட்டை போட்டால் கைகள் இரண்டும் தனித்தனியாகத் தெரிகிறதல்லவா? அம்மாதிரி கால்கள் இரண்டும் தனித் தனியாகத் தெரியவேண்டுமானல் காலுக்கும் சட்டை போட வேண்டும். கால் சட்டை பின்பக்கத்தை இறுக்கிப் பிடிப்பதால் கால் சட்டைக் காரனின் முன்பக்கம் பின்பக்கம் இரண்டிலுமே பாலுணர்ச்சியைத் தூண்டும் ஒருவித ஆபாசம் சிறிய அளவில் தென்படுகிறது. வேட்டிக்காரனிடம் இது அடியோடு கிடையாது. இதுதான் முக்கிய காரணம் கால் சட்டைக்காரனைப் பெண்கள் விரும்புவதற்கு.

ஃ

க. கரிகாலன்,
கொழும்பு-2.

கே: இலங்கை முஸ்லிம்களின் போதனமொழி விடயத்தில் போ. கட்சியின் நிலை என்ன?

ப: அக் கட்சியின் நிலைபற்றி யாருமே கவலைப்படுவதில்லையே; உங்களுக்கு மட்டும் ஏன் அந்தக் கவலை,

ஃ

திராவிடன்,
பலாங்கொடை.

கே: இல்லறத்தைவிட துறவறமே சிறந்தது என்கின்றேன். யான் தங்கள் கருத்தென்ன?

ப: ஆம், 60 வயதுக்கு மேல்.

ஃ

இ.து.ஐயா
திருகோணமலை.

கே: வருகிற தேர்தலில் தமிழ் நாட்டு தி. மு. கழகம் ஆட்சிக்கு வருமா?

ப: வரக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. ஆனல் சுதந்திரக் கட்சி, சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி, ரஷ்யச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லிம் லீக் ஆகியவற்றுடன் சேர்ந்து தி. மு. க. கூட்டுமந்திரி சபை அமைக்குமா அல்லது அவற்றை விட்டு தனியாக மந்திரி சபை அமைக்குமா என்பது இது வரை தெரியவில்லை.

ஃ

சி. நவம்,
கோண்டாவில்.

கே: எனது சகோதரர் ஒருவரிடம் பொருள் வாங்கப் பணம் கொடுத்தேன், பொருளை வாங்கிய பின் மிகுதிப் பணமும் தந்தார். பின்னர் ஞாபகக் குறைவாக திரும்பவும் மிகுதிப் பணத்தைக் கேட்டேன். அதற்கு கிடைத்த பரிசு 'பண ஆசை' என்ற பட்டம். தவறுகக் கேட்ட எனக்கு மன்னிப்பு அளிக்கக் கூடாதா?

ப: இதே கேள்வியை அவரிடம் கேளுங்கள். மன்னிப்பும் கிடைக்கும், சிக்கலும் தீர்ந்து விடும்.

ஆர். பாலகிருஷ்ணன்,
நெடுங்கேணி.

கே: பச்சை நிறத்திற்கும், நீல நிறத்திற்குமுள்ள வித்தியாசம் என்ன?

ப: டட்லி கட்சிக்கும், சிறிமா கட்சிக்கும் உள்ள வித்தியாசமே.

ஃ

க. இராசையா,
வவுனிக்குளம்.

கே: சிறுபான்மைத் தமிழர்களின் ஆலயப் பிரவேசத்திலும் போ. கட்சி மௌனம் சாதிப்பதேன்?

ப: மௌனம் சர்வார்த்த சாதனம்!

ஃ

ம. கனகலிங்கம்,
சுன்னகம்.

கே: மாவட்டசபைகள் அமைக்கப்படுவதை எதிர்க்கட்சிகள் எதிர்ப்பது ஏன்? போ. கட்சி எதிர்ப்பது ஏன்?

ப: எதிர்க்கட்சிகள் எதிர்ப்பது அவை எதிர்க்கட்சியில் இருப்பதால்— போ. கட்சி எதிர்ப்பது இது தமிழரசுக் கட்சியின் திட்டம் என்பதால்!

கே: சிறுபான்மைத்தமிழரின் உத்தேச சத்தியாக்கிரக போராட்டத்தை போ. கட்சி ஆதரிக்கப் போவதாக பேச்சு அடிபடுகிறதே?

ப: அக்கட்சி சத்தியாக்கிரகத்தை எதிர்க்கிறது. அதே சமயத்தில் ஆதரிக்கிறது. இவ்விரண்டையும் ஏககாலத்திற் செய்வதுதான் அக்கட்சியின் தனித்திறமை!

திருவாளர்
குயுக்தியார்
சே/பா தந்திரன்
த. பெ. இல. 1185
கொழும்பு-13.

● இந்த அடையாளத்தையுடைய கேள்வி கேட்ட வாசகர் மூன்று ரூபா பரிசு பெறுகிறர்.

ஆனந்தசுப்பிரமணியம்,
நீர்கொழும்பு.

கே: சிலர் மனிதர்களை விட தாங்கள் வளர்க்கும் நாய்களுக்கு அதிக அந்தஸ்து கொடுப்பதேன்?

ப: நாய் மனிதனைவிட நன்றியுள்ள மிருகம் என்பதனை அவர்கள் உணர்ந்திருப்பதுதான் காரணம்.

கே: கொழும்பில் ஆண்களின் இரத்தத்தை உறிஞ்சும் ஓர் மர்ம மங்கை (மாயமோகினி) உலாவுகின்றது உண்மைதானு?

ப: உண்மைதான்! இப்போதெல்லாம் அந்த மாயமோகினி ஆண்களின் இரத்தத்தை உறிஞ்சுவதற்குப்பதிலாக அவர்களின் பணப்பையைத்தான் உறிஞ்சுகிறது.

ஃ

இ. இராமலிங்கம்,
நெடுங்கேணி.

கே: நல்லூரர்ச்சிங்கம் நாகநாதனுக்கு அமைச்சர் பதவி கொடுப்பதாக வதந்தி அடிப்படுகிறதே?

ப: அப்படிச் செய்யும்படி ஒருவர் பிரதமருக்குத் தந்தியடித்தாராம். அவர் அடித்த தந்திதான் இப்பொழுது வ-தந்தியாக அடிபடுகிறது:



அகத்தின் அழகு...

வகுப்புவாதம் எதிர்க்கட்சியினரின் முகங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

—இராசமாணிக்கம்.

—'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது தெரியாமலா சொன்னர்கள்?

திருடரும் ஒப்பமார்

நாம் இனவெறியர்கள் அல்ல.

—ஸ்ரீமாவோ.

—உலகில் எந்தத் திருடனும் தன்னைத் திருடன் என்று ஒப்புக்கொள்வதில்லையே!

ஏமாந்த நரிகள்

தமிழரசுக் கட்சி கூட்டரசாங்கவாதிகளுடன் சேர மறுத்ததினல் அவர்கள் குரோதம் அடைந்திருக்கிருர்கள்.

—பண்டிதர் இரத்தினம்.

—எட்டாத திராட்சைப் பழம் புளிப்பது இயல்புதானே!

'கழிசான்' விவசாயி!

விவசாயிகளுக்கு கடன் வசதி அதிகரிக்கப்படும்.

—செய்தி.

—இனிமேல் 'களிசான்' போட்ட பலர் 'விவசாயிகள்' ஆகலாம்.

பஸ் அதிகரிக்க...

1975-ல் இ. போ. ச. பஸ் தொகை 8000 ஆக உயரும்,

—செய்தி.

—அப்போது பஸ் பிரயாணிகளும் இருமடங்கு அதிகரித்து விடுவார்களே!

பாலர் வகுப்பு ஆசிரியைக்கான ஒரு வருடப் பயிற்சித் திட்டம் ஜனவரி'67 ஆரம்பமாகும். சிரேஷ்ட தராதரம் உடைய மாதர்கள் விண்ணப்பிக்கலாம்.
சர்வகலாசாலை போதன கழகம்
த. பெ. இல. 1079
கொழும்பு.

வியாபாரத்திற்கழகு
விளம்பரம் செய்தல்

தமிழ் உலகில் ஒரே ஒரு
சித்திரக்கலண்டர்
● லீலா பஞ்சாங்கச் சித்திரக்கலண்டர்
● லீலா ஆங்கில டயறித் தினிசுகள்
வெகு அண்மையில் வெளிவரும்.
வியாபார அன்பர்களே!
விலைப்பட்டியலைக் கேளுங்கள்
ஆடர் செய்யுங்கள்
யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:
செ. ஆ. செல்லையா அன் கம்பனி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
ஏக விநியோகஸ்தர்கள்:
லீலா ஸ்டோர்ஸ்
249, நொறிஸ் ரோட், கொழும்பு

## 'அமைதியான தேர்தலுக்கு வழி என்ன?

# தேர்தல் சட்டம் மீறப்பட்டால் தோல்வியடைந்தவர்கள் மீதும் வழக்குத் தொடர வேண்டும்

## பாராளுமன்றத்தில் இராசமாணிக்கம்

**"இந்த நாட்டில் அமைதியாக ஒரு பொதுத் தேர்தல் நடைபெற வேண்டுமென்பதை நாம் விரும்பினுல் தேர்தலில் தோல்வியடையும் வேட்பாளர்களும் இந் நாட்டுத் தேர்தல் சட்டங்களை மீறியிருந்தால் அவர்களுக்கு எதிராகவும் தேர்தல் வழக்குத் தாக்கல் செய்யக் கூடிய முறையில் தேர்தல் சட்டங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும்" என்று பட்டிருப்புத் தொகுதிப் பிரதிநிதி திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்கள் பாராளுமன்றத் தேர்தல் சட்டங்களை திருத்துவதற்கான குழுவை நியமிக்கும் மசோதா மீது பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில் கூறினுர்.**

எதிர்க் கட்சியினரின் வகுப்புவாதப்போக்கை வன்மையாகக் கண்டித்த திரு. இராசமாணிக்கம் இம் மசோதா மீது மேலும் கூறியதாவது:

'இச்சபையிலே பேசும் போது அதுவும் முக்கியமான விடயங்களில் விவாதிக்கும் பொழுது எல்லோரும் அறியக்கூடிய மாதிரியாகப் பேசுவது உசிதமானதாக இருக்குமென்பது என்னுடைய கருத்து. ஆனல் இந்த உபதேர்தலின் பின்பு எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து மீண்டும் பாராளுமன்றத்துக்கு வரத் தீர்மானித்ததன் பின்பு, அவர்கள் எல்லோரும் அரசகரும மொழியில்பேசத் தீர்மானித்திருப்பதாக எனக்குத் தெரிகின்றது.

(கலாநிதி என். எம். பெரேரா)

அப்பொழுது நீங்கள் ஏன் தமிழில் பேசுகிறீர்கள்?

திரு: இராசமாணிக்கம்

யட்டியாந்தோட்டைப் பிரதிநிதி(கலாநிதி என்.எம். பெரேரா) போன்றவர்கள் ஆங்கிலத்தில் மிகவும் சிறப்பாகப் பேசக்கூடியவர்கள். நேற்று மிகவும் தட்டுப்பாட்டோடு அரசகரும மொழியில் பேசியதைக் காணக்கூடியதாகவிருந்தது. ஆகவே அவர்கள் என்ன பிரதிக்ஞையை எடுத்திருந்தாலும், நான் தமிழில் பேச வேண்டியது உசிதமாக இருக்கின்றது. எனினும் பாராளுமன்றத்தில்இந்தப் பிரேரணையையிட்டு எனது பேச்சை எல்லோரும் விளங்கக்கூடியதாக இருப்பதற்காக நான் ஆங்கிலத்தில் ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

'கடந்த பொதுத் தேர்தலிலும் அண்மைய இடைத்தேர்தல்களிலும் நமக்குக் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்கு ஒரு குழுவை அமைப்பது மிக முக்கியமானது.

'தேர்தல் சட்டங்கள் கோளாறு உடையனவாக இருந்தால் ஒரு வாக்காளன் தனது வாக்கை சுயமாக உபயோகிக்க முடியாது. அப்படியெனில் சனநாயகம் என்பது தத்துவமாகவே இருந்து விடும். கடந்த கால அனுபவங்களைக் கொண்டு ஒவ்வொரு பொதுத் தேர்தலின் பின்னரும் தேர்தல் சட்டங்களைத் திருத்த வேண்டியது அவசியமாகிறது.

'தேர்தல் வழக்குகள்பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். தற்பொழுது வெற்றியடைந்த வேட்பாளருக்கு எதிராக மட்டுமே தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இம்முறையினுல் அனுவசியமாகவும் பல வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதை நாம் அவ்வப்பொழுது அவதானித்துள்ளோம். சட்டத்தை மீறுகின்ற எந்த வேட்பாளருக்கும் எதிராகவும் அவர் வெற்றிபெற்றவராகவும் இருக்கலாம் -தோல்வி அடைந்தவராகவும் இருக்கலாம் - தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்ய வசதி ஏற்படுத்தபட வேண்டும். அப்பொழுது எவருமே சட்டத்தை மீறயாட்டார்கள்.

'தாலாட்டு நிலையில் இருக்கும் அரசியல் கட்சிகள் பற்றியும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அரசியற்கட்சிகளை அங்கீகரிக்கும் சட்டம் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும். உண்மையான அரசியல் கட்சிகளுக்கு மட்டுமே கட்சி என்ற தகைமை வழங்கப்பட வேண்டும். பத்திரிகைகளில் மட்டும் உயிர் வாழும் போலி அரசியற் கட்சிகளை அங்கீகரிப்பது பற்றி பரிசிலனை செய்வது அவசியம்.'

திரு. சுபசிங்கா: இதனை நீங்கள் சபைத் தலைவருக்குக் கூறுகிறீர்களா?

திரு. இராசமாணிக்கம்: இது தேர்தல் ஆணையாளர் தீர்மானிக்க வேண்டியது. இவ்விடயத்தில் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும். தாலாட்டு நிலையில் இருக்கும் கட்சிகளை அங்கிகரிக்கும் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

உறுப்பினர் ஒருவர்: தமிழ்க் காங்கிரஸ் போன்று!

திரு! இராசமாணிக்கம்: ஆம். குறிப்பிட்ட அளவு உறுப்பினர்கள் இருந்தாலே ஒரு அரசியல் கட்சியைப்பதிவு செய்யலாம் என்று நிர்ப்பந்தித்தால் பலகட்சிகள் அதற்கான தகுதியைப் பெறமாட்டதனவாகும்.

திரு. சுபசிங்கா! வர்த்தக மீன்பிடி அமைச்சரின் கட்சியைப் போன்று...



திரு. இராசமாணிக்கம்: இத்துடன் தவறணைகளை மூடுவதிலும் கவனம் செலுத்த வேண்டும். தற்போதைய சட்டத்தின் பிரகாரம் ஒரு நாளைக்கு மட்டுமே தவறணைகளை மூடமுடியும். இது நோக்கத்தைப் பூர்த்தி செய்யாது. குறைந்தது தேர்தலுக்கு முன் ஒரு வாரத்திற்காவது தவறணைகள் பூட்டப்பட வேண்டும்.

திரு. முஸ்தபா: அப்படியெனில் ஒரு போத்தல் ஐம்பது ரூபா விற்குமே.

திரு. இராசமாணிக்கம்: அது பற்றிக்கவலையில்லை.

'பாராளுமன்றத் தேர்தல் சட்ட விதிகள் மட்டுமல்ல உள்ளூராட்சித் தேர்தல் சட்டவிதிகளும் இதற்கு இணையாகத் திருத்தப்பட வேண்டும். அப்படிச்செய்யத் தவறினுல் உள்ளூராட்சித்தேர்தலில் ஒரு பெரிய மயக்கமான நிலையே உருவாகும்.

'தேர்தல் சட்டத்திருத்தக் குழுவை நியமிப்பதற்கான மசோதா கடந்த இடைத் தேர்தல்களை யொட்டிய மனத்தாங்கல்களையும் கற்பனைகளையும் எடுத்துக் கூறுவதற்கு ஒரு சாட்டாக அமைந்து விட்டது. 1947ம் ஆண்டுச் சம்பவங்களுடன் இன்றைய நிலையினை ஒப்பு நோக்குகையில் குறிப்பிடக்கூடியளவு பெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. இன்று தேர்தல்கள் அமைதியாகவே நடைபெறுகின்றன. மேலும் அமைதியாக நடைபெறவேண்டும் என்பதே எமது விருப்பம்.

'அண்மையில் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் என்ன நடைபெற்றது? அங்கு பேசப்பட்ட பேச்சுக்களும் எழுப்பப்பட்ட கோஷங்களும் மக்களுக்கு ஆத்திரத்தைமூட்டுவனவாகவும், அவர்களைக் கொதித்தெழச் செய்வனவாகவும் அமைந்திருந்தன.

டாக்டர் பெரேரா: நீர் அங்கு நின்றீரா?

திரு. இராசமாணிக்கம்: இத்தனைக்கும் வகாக்காளர்கள் அப்பாவிகளே

திரு. சுபசிங்கா: கற்பனை உலகில் சஞ்சரிக்கிறீர்.

திரு. இராசமாணிக்கம்: நீங்கள் செய்த பிரச்சாரமே அவர்களை ஆத்திரமடையச்செய்தது. கடந்த இடைத்தேர்தலின் போது ஆத்திரமூட்டக்கூடிய சுலோகங்களும் பேச்சுகளும் நிகழ்த்தப்பட்டன. அத்துடன் இனவாத எக்களிப்பு வார்த்தைகள் ஒலிக்கப்பட்டன.

டாக்டர் என் எம். பெரேரா: இவ்விடங்களில் எதற்காவது நீர் சமூகம் கொடுத்தீரா?

திரு. இராசமாணிக்கம்! ஏன்? நான் ஒவ்வொரு விடயங்களையும் பத்திரிகைகளில் படித்தேன்.

டாக்டர் என். எம்: நீர் ஏன் மேடைகளுக்கு வரவில்லை

திரு. இராசமாணிக்கம்! நாங்கள் எங்கள் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தோம்.

டாக்டர் என். எம்: அவர்கள் யார்?

திரு. இராசமாணிக்கம்: உடுவில் தொகுதி பிரதிநிதி அங்கு சமூகம் கொடுத்தார்.

டாக்டர் என். எம்: எங்கே?

திரு. இராசமாணிக்கம்! சாவகச்சேரிப் பிரதிநிதி அவர்கள்.........

டாக்டர் என். எம்: எங்கே?

திரு சேனவிரத்தின: பண்டாரவளை

டாக்டர் என். எம்! அப்படியில்லை

திரு. இராசமாணிக்கம்! உள்ளூராட்சி அமைச்சர் சமூகம் கொடுத்தார்.

டாக்டர் என். எம்: அவர்கள் தனிப்பட்டவர்களுக்குப் பேசியிருக்கலாம்.

திரு. இராசமாணிக்கம்: எப்படியென்ருலும், உமது தனிப்பட்ட முடிவுகளுக்கு அப்பால் நீர் இந்த நாட்டில் வகுப்புவாத உணர்ச்சியைத் தூண்டிவிடுகிறீர்.

டாக்டர்என் எம்: பத்திரிகைகளை நம்பவேண்டாம்.

திரு. இராசமாணிக்கம்! நாங்கள் உமது இனவாத எக்காளங்களை பண்டாரவளை, பெந்தர - எல்பிட்டிய ஆகிய இடங்களிலிருந்து கேட்டோம். இம்மன்றத்தில் கடந்த இரண்டுமூன்று தினங்களாக நிகழ்த்தப்பட்ட உரைகளை அவதானித்ததிலிருந்து எதிர்க்கட்சியினர் தமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப இனவாத போக்கையே ஏதுவாகக் கொண்டுள்ளார்கள் என்பது அப்பட்ட

(9-ம் பக்கம் பார்க்க)


### "வாழ நினைத்தால் வாழலாம்"

சந்தோசமாக வாழநினைப்பின் கல்வி, தொழில், பணம், மணவாழ்க்கை மிகவும் அத்தியாவசியமானது.

இவை நினைத்தவுடன் கிடைப்பது அரிது. இவைகளை பெற்றுக்கொள்வதற்கும் அதில் கஷ்டங்கள் இருந்தால் அவை பனி போல் மறைவதற்கும் எம்முடன் ஆலோசியுங்கள். சகல கஷ்டங்களும் உத்தரவாதத்துடன் நிவர்த்தி செய்யப்படும்.

நேரில் சந்திக்கும் நாட்கள்

ஞாயிறு, திங்கள் ஆகிய இரு தினங்களில் கம்பளையில் மாத்திரமே சந்திக்கலாம்

மஹா மாந்திரீக கலாநிதி

**பி. எம். திசநாயக**

(அரசாங்க பதிவு செய்யப்பட்ட மாந்திரீக வைத்தியர்)

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா.

அருதா எண்ணை காரியாலயம், கம்பளை. போன்: 454

மலச்சிக்கல் மற்றும் அஜீரணக்கோளாறுகளுக்கு

### ரிஷிலேகியம்

66 வருடங்களாகப் புகழ் பெற்றதும் வைத்திய பரம்பரை ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் அவர்களால் தயாரிக்கப்பட்டதுமான அபூர்வ சஞ்சீவி.

ரிஷி லேகியம் நாள்தோறும் மலத்தை ஒழுங்காக வெளியேற்றி, கைகால் அசதி, கை கால் கணுக்களில் வலி, தேககாங்கை, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வாய்வு, வாதம், திரேகமெலிவு, பசியின்மை, கண் எரிச்சல், நெஞ்செரிவு, வாய்ப்புண், சோம்பல், சூதக சிக்கல், உள்மூலம், வெளிமூலம், இரத்த சீழ்மூலம் முதலிய வியாதிகளை அதிவிரைவாக குணப்படுத்துகிறது. ஆப்ரேசனின்றி மூலவியாதியை குணப்படுத்த விரும்புவோர் ரிஷி லேகியம் சாப்பிட்டால்உடன் பலனடைவர். சுகபேதியாகவும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை.

**15 நாள் மருந்து ரூ. 3-50**
**30 நாள் மருந்து ரூ. 6-50**

**ஞானசுந்தர வைத்தியசாலை**

187, செட்டியார்தெரு, கொழும்பு.

# சர்ஜோன் தரகர் வேலை பார்த்தாரா?

## சுதந்திர கட்சியுடன் கூட்டாட்சி நிறுவ முயற்சி நடக்கிறதாம்

"தமிழரசுக்கட்சியை அரசாங்கத்திலிருந்து வெளியேற்றிவிட்டு, அதற்குப் பதிலாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து ஒரு கூட்டரசாங்கத்தை நிறுவும் பொருட்டு தரகராகப் பேச்சுவார்த்தை நடத்த சர். ஜோன் கொத்தலாவலை முன்வந்திருப்பதாக அறியப்படுகிறதென்று கம்யூனிஸ்ட் தினசரியான 'எத்த' (13-1ட-66) ஒரு செய்தியைப் பிரசுரித்திருக்கிறது.

அச் செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

'இவ்விஷயமாகசர்.ஜோன் கொத்தலாவலை சுதந்திரக் கட்சித்தலைவர்கள் சிலருடன் சூசகமாகப் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஐ. தே. கட்சி தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து நடத்தும் இனத்துரோக நடவடிக்கைகளைப் புரிந்துகொண்ட எம். பி. கள் பலர் ஐ. தே. கட்சியில் இருப்பது தங்களுக்குத் தெரியுமென்றும், எந்தச் சநதர்ப்பத்திலும் அவர்கள் சுதந்திரா-சமசமா ஜ-கம்யூனிஸ்ட் கூட்டணியில் வந்து சேர்ந்துகொள்ளமுடியுமென்றும் அந்தத் தலைவர்கள் சர். ஜோனிடம் கூறியிருக்கிறார்களாம்.

அத்துடன், சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் ஐ. தே. கட்கியுடன் சேர்ந்து ஓர் அரசாங்கத்தை நிறுவவேண்டுமானால், திருமதி சிறிமாபண்டாரநாயக்காவின் தலைமையையும், கூட்டணியின் வேலைத்திட்டத்தையும் ஏற்றுக்கொள்ள ஐ. தே. கட்சி தயாராயிருக்கிறதா என்று அவர்கள் சர். ஜோனிடம் கேட்டதாகத் தெரிகிறது,

1960 மார்ச்சில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகும் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவைச் சந்தித்த சர்.ஜோன், சுதந்திரக் கட்சி-ஐ. தே. கட்சி கூட்டாட்சி நிறுவ யோசனை கூறினரெனினும், அந்தயோசனையைத் திருமதி சிறிமாவோ நிராகரித்துவிட்டார் என்பது குறிப்பிடததக்கது.

திருமதி சிறிமாவோ சில காலத்துக்கு முன்பு பெல்கிரேட்டில் ஒரு மாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்தபோது இதே யோசனை சுதந்திரக் கட்சியின் தற்காலிகத் தலைவராகக் கடமையாற்றிய திரு. மைத்திரிபாலசேனநாயக்காவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. நிர்வாகக் குழுவின் ஒரு முடிவுக்குப் பின்னர் அந்த யோசனையை ஏகமனதாக நிராகரித்துவிட்டனர்.

தரகர்வேலை செய்வதில் சர். ஜோன் இவ்வளவு ஆர்வம் காட்டுவதற்குக் காரணம், தரகர் கூலியாக கவர்னர் ஜெனரல் பதவியைப் பெறலாம் என்ற எண்ணமாக இருக்கக் கூடுமென்று கூறப்படுகிறது.'

## சிங்கள இதழ்களில் . . .

### மர்மக் கப்பல் "ஜனதின செய்தி"

'வடக்கே ஊர்காவற்றுறையை அடுத்து கடலில் நங்கூரம் பாய்ச்சியுள்ள ஒரு கப்பலில் தங்கியிருந்து தினசரி அண்மையிலுள்ள கிராமங்களுக்குச் சென்று பௌத்த சமயத்துக்கும், இந்துசமயத்துக்கும் எதிராகப் பிரசாரம் செய்யும் ஒரு குடும்பத்தைப் பற்றிய செய்திகிடைத்திருப்பதாக 'ஜனதின' 12-11-66ந் திகதி ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

இச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:-

'காரைநகர் இராணுவ முகாமிலிருந்து பார்த்தால் தெரியக்கூடிய தூரத்தில் நிறுத்தப்பட்டுள்ள இந்தக் கப்பலுக்குத் தினந்தோறும் மாலையில் பாதிரிகள் சிலர் சென்று பேச்சுவார்த்தைகள் நடத்துவதாக அறியப்படுகிறது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் இப்பொழுது தங்கியிருக்கும் ஒரு தூதராலயத்தின் அதிகாரிகள் சிலரும் இக்கப்பலின் மர்மக்கோஷ்டிக்குப் பல்வேறு விதமான உதவிகளைச் செய்துவருவதாகவும் கூறப்படுகிறது.

ஒவ்வொருநாளும் இந்த மர்மக் கோஷ்டியினர் அண்மையிலுள்ள கிராமங்களுக்குச் சென்று தங்களின் பிரசாரத்தைத் தொடங்குமுன்பு உணவுப்பொருட்கள், சவுக்காரம், மருந்துவகைகள், துணிமணி முதலியவற்றை ஏழைக் கிராமவாசிகளுக்கு விநியோகித்து அவர்களின் ஆதரவைப் பெற முயற்சிசெய்வதாகச் செய்தி கிடைத்துள்ளது.

இந்தக் கப்பல் எந்த நாட்டுக்குச் சொந்தமானது என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இவர்களுக்குக் கிராமங்களுக்குச்சென்று பிரசாரம் செய்ய அனுமதி வளங்கப்பட்டிருக்கிறதா தென்பதும் தெரியவில்லை.'

### அவர்களுக்கு சிங்களம் வேண்டாம்

'ஆங்கிலம், தமிழ் தட்டெழுத்தாளர்களும் சுருக்கெழுத்தாளர்களும் சிங்களத் தட்டெழுத்திலும், சுருக்கெழுத்திலும் ஒருபரீட்சையில் சித்திபெற வேண்டுமென்று முன்பிருந்த கட்டளையை ரத்துச் செய்து திறைசேரி ஒரு சுற்று நிருபம் விடுத்துள்ளது.'

—'எத்த' (13-11-66).

### வழிநெடுகக் கூட்டங்கள்

'பாஷா பெரமுனவால் கொழும்பிலிருந்து அனுராதபுரத்துக்கு நடத்தவிருந்த ஊர்வலம் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டு விட்டதால்கொழும்பிலிருந்துஅனுராதபுரம்வரை எல்லா நகரங்களிலும் பொதுக்கூட்டங்களைநடத்தி இறுதிப் பொதுக் கூட்டத்தை அனுராதபுரம் ருவன்வெலி டாகோபா முன்னிலையில் நடத்தி இனத்தைப் பாதுகாப்பதற்கான பிரதிக்கினைஎடுக்கப்பட வேண்டுமென்று சிங்கள பாஷா பெரமுனவின் நிர்வாகக்குழு முடிவு செய்துள்ளது. பேலியகொட, கிரிபத்கொட, கடவத்தை, யக்கல, நிட்டம்புவ, வரக்காபொல, அலவ்வை, பொல்காவெல, பொத்துஹெர, குருணகல், மல்சிறிபுர, கலேவெல, தம்புல்ல, கெக்கிராவ, மரதன் கடவெல, அனுராதபுரம் ஆகிய இடங்களில் இக் கூட்டங்கள் நடைபெறும்.'

—'தவச' (9-11-66).

### மூன்றும் தமிழர்கள்

'தேசிய வருமான வரித்திணைக்களத்தில் மேற்பார்வை அதிகாரிகள் 8 பேர்கள் புதிதாக நியமனம்பெற்றுர்கள். அவர்களில் அதிகம் பேர் தமிழர்களாவர். நீண்டகால அனுபவமுள்ள நூற்றுக்கணக்கான சிங்களவர்கள் இப்பதவிகளுக்கு மனுச்செய்தும்கூட இரண்டு அல்லது மூன்று வருட அனுபவமுள்ள தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் திணைக்களத்தால் வழங்கப்படும் மேல்படிப்புக்கான மூன்று உபகாரச் சம்பளமும் தமிழர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. ஏனைய திணைக்களங்களைப்போல வருமானவரித் திணைக்களத்திலும் தமிழர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர்

—'ஜனதின' (13-11-66).

### யாழ். போலிசில் தமிழரசு ஆட்சியாம்

#### த. கட்சியின் எதிர்ப்பு

கல்வி மந்திரி பிரதிநிதியாயிருக்கும் குளியாபிட்டியிலும் அண்மையிலுள்ள கேகாலையிலும் கனிஷ்ட பல்கலைக் கழகங்கள் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறதெனினும் மட்டக்களப்புப் பகுதிக்கு அத்தகைய ஒரு கனிஷ்ட பல்கலைக்கழகம் கொடுக்கப்படவில்லை. இதுபற்றி எதிர்ப்பு தெரிவித்து தமிழரசுக்கட்சி உயர்தரக் கல்விச் சபைக்கு தந்தி அனுப்பியுள்ளது.

—'தவச' (14-11-66).

கடந்தகாலத்தில் சிங்களப் போலிஸ் அதிகாரிகளும் போலிஸ்காரர்களும் 100க்குத் 90 பேர்கடமையாற்றிய யாழ்ப்பாணப் பொலிஸ் தலைமை நிலையத்திற்கு அண்மையில் ஏராளமான தமிழ் போலிஸ் அதிகாரிகளும் தமிழ் போலிஸ்காரர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அடுத்த ஜனவரியிலிருந்து அங்கு பணியாற்றும் அனைவரும் தமிழராக இருக்க வேண்டுமென்பதற்காக இடமாற்றங்கள் நடைபெறுகின்றனஎன்றுஅறியப்படுகிறத.' இவ்வாறு எத்த (13-11-67) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

'முன்னுள் அரசாங்கத்தில் உயர்தரப் போலிஸ் அதிகாரியிலிருந்து சாதாரண அதிகாரிவரை சிங்களவர்களாகவே இருந்தனர். இன்றுதமிழரசுக்கட்சியின் கோரிக்கையின்மீது அந்தப் பதவிகள் அனைத்தும் தமிழரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள போலிஸ் இன்ஸ்பெக்டர்கள் 5 பேர்களில் 4 பேர் தமிழர்களாவர். சப் இன்ஸ்பெக்டர்கள் மூவரும் தமிழர்களே. அத்துடன் குற்றப்பகுதி, விதிபோக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பகுதி, போலிஸ் அலுவலகம் முதலிய எல்லாப் பகுதிகளிலும் கடமையாற்றும் ஒவ்வொரு அதிகாரியும் தமிழரே. போலிஸ்காரர்களில் பெரும்பாலோர் தமிழர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. சிங்களப் போலிஸ்காரர்கள் சிலர் அங்கிருந்தாலும், அவர்களும் சிங்களத்தில் கடமையாற்ற முடியாதவர்களாகவே இருக்கின்றனர்' என்று 'எத்த' மேலும் கூறுகிறது.

### தமிழில் எழுதுக!

'எனது தாய்மொழி தமிழ். எனவே என் மூலமாக ஒரு வேலை செய்துகொள்ளவேண்மானுல் சிங்களத்திலோ ஆங்கிலத்திலோ எழுதாமல் தமிழில் எனக்கு எழுதி அனுப்ப வேண்டும்' என்று நாவலப்பிட்டி அரசாங்க ஆஸ்பத்திரியில் மாவட்ட வைத்திய அதிகாரி நாவலப்பிட்டி நகரசபைக்கு அறிவித்துள்ளார். ஒருவரின் மரணப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக நாவலப்பிட்டி நகரசபைக் காரியதரிசி வைத்திய அதிகாரிக்கு இரு கடிதங்கள் அனுப்பிவைத்தார். அக் கடிதங்களைத் தமிழில் எழுதி அனுப்பிவைக்கும்படி வைத்திய அதிகாரி காரியதரிசிக்கு அறிவித்துள்ளார். இவ்வாறு 'ஜனதின' (15-11-66) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

### அங்கும் தமிழரசாம்

'காணி அபிவிருத்தித்திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் நிதிப்பகுதியில் பணியாற்றும் தமிழரசுவாதிகளால்சிங்களஅதிகாரிகளுக்கு பெரிதும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது. முன்னுள் அரசாங்கத்தின் காலத்தில் சிங்களத் தேர்ச்சிபெற்று சிங்களத்தில் கடமையாற்றிய தமிழ்அதிகாரிகள் அனைவரும் மீண்டும் இப்பொழுது ஆங்கிலத்தில் தத்தம் அலுவல்களைச் செய்கின்றனர்.'

—'ஜனதின' (15-11-66).


ஜீ. சீ. ஈ. (சா. த) 1966

மேற்படி பரீட்சைக்கான புதிய/பழைய பாடத்திட்டத்திற்கமைந்த

பயிற்சிக் கோவைகள்

- ★ எண் கணிதம் ரு. 5/-
- ★ குடியியல் ரு. 5/-
- ★ சரித்திரம் ரு. 5/-
- ★ சுகாதாரவியல் ரு. 5/-
- ★ இஸ்லாம் ரு. 5/-
- ★ தமிழ்ப்பாஷை ரு. 5/-
- ★ புவியியல் ரு. 5/-
- ★ 101கட்டுரைகள் ரு. 7-50

தபாற் செலவு -/50

போஸ்டல் ஓடர் அனுப்பவும்

சர்வகலாசாலை போதனு கழகம் (UTI)
540, மருதானை வீதி,
த. பெ இல 1079
கொழும்பு



ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூளைச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனுமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

# மஸ்கெலியா ஓயா நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டம்

# 5000பேர் தவிப்பு: மாற்று வேலை வேண்டும்

## கட்டாய மத்தியஸ்தத்துக்கு இ. தொ. கழகம் இணக்கம்

**மஸ்கெலியாஓயா நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டத்தின் காரணமாக வேலை இழக்கும் சுமார் 5000 தொழிலாளர்களுக்கு மாற்று வேலை கொடுப்பது பற்றிய பிரச்சினையைக் கட்டாய மத்தியஸ்தத்துக்கு விடுவதை இலங்கைத் தொழிலாளர் கழகம் விரும்புகிறது இதனை மத்தியஸ்த விசாரணைக்கு விடுவதை இ. தொ. கழகம் ஆதரிப்பதாகக் கழகம் 14-11-66ந் திகதி தொழில் திணைக்களத்தின் கமிஷனருக்கு அறிவித்துள்ளது.**

மஸ்கெலியா ஓயா நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டத்தின் விளைவாக மஸ்கெலியா கங்குவத்தை நகரங்களும் கோயில்கள் பாடசாலை மற்றும் பல கட்டிடங்களும் நீரில் மூழ்கி விடுவதுடன், சுமார் 2126 ஏக்கர் தேயிலைத் தோட்டங்களையும் நீர் விழுங்கி விடும். மொத்தம் 12 தோட்டங்கள் இத் திட்டத்தால் பாதிக்கப்படும்.

அத் தோட்டங்களில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் 1967 மார்ச் 31-ந் திகதிக்கு முன்பு தோட்டங்களைவிட்டு வெளியேறும்படி வேலை நீக்க அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு போதிய நஷ்டஈடு வழங்கி மாற்று வேலையும் கொடுப்பது பற்றி எதவும் இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படவில்லை.

ஆனல் தோட்டச் சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கு மட்டும் அரசாங்கம் இணங்கியிருப்பதாக அறியப்படுகிறது.

தொழிலாளர்களுக்கு வேறு வேலை கொடுத்தால் மட்டும் போதாது. அவர்களுக்குப் போதிய நஷ்டஈடும் வழங்கப்பட வேண்டும்.

இப் பிரச்சினைகளை ஒரு கட்டாய மத்தியஸ்தத்துக்கு விடுத்து தீர்வு காண தொழில் திணைக்களம் இணங்கியிருப்பதாக அறியப்படுகிறது.

இ.தொ கழகமும் கட்டாய மத்தியஸ்தத்துக்கு விருப்பம்தெரிவித்திருக்கிறது.

### யாருக்குச் சொந்தம்?

—லிங்கதாசன்—

கார் வண்ணத் தன்மேனி கலங்கி நித்தம்
கடுகதியிற் செல்லுகின்றாய் என்ன கோபம்?
தார் பாதை உருகிநித்தம் ஓடுமிங்கே
தலை கூர்ந்து மழைபொழிய மறுத்து நீயும்
ஊர் விட்டுப் போகும் மாயம் யானறியேன்
உண்மையதைச் சொல்லி விட்டுச் செல்லாயோநீ
யார் உன்னைத் தூற்றியது? என்னிடத்தில்
யாவையும் சொல்லாயோ மேகத் தாயே!

நாடு கடத்துவதால் நடு நடுங்கித் தனித்து
நான் போவே னென்றெண்ணி உறவினர்க்கு
வீடு தொறும் வீதி தொறும் சொல்வதற்கோ
விடியு முன் போக நீ எத்தனித்தாய் பெருங்
காடு மலை திருத்திய பின் வீடு கட்டிச் செல்வம்
கரை புரண்டோட மட்டும் உழைத்து விட்டு
நாடு உயர வழி செய்த மலைநாட்டை விட்டு
நான் போகேன் ஓரணுவும் அசையமாட்டேன்.

உரிமைகள் பல மறுத்து ஊரில் பலபேசியிங்கு
உபத்திரவம் செய்வதையும் எண்ணி நொந்து
பெரிய சுமை மனதேற்றுப் பேதலித்த கொடுமையா?
பேசாமல் போகவும் நீ எண்ணினையோ? பேதையர்
அறியவில்லை இங்குள்ளோர் அரிய பண்பை
அதை மீறிக் கட்டளைக்கு அடி பணிந்து
யாரிங்கே போவதற்கு உள்ளோர்? இல்லை;
யாருக்குச் சொந்த மிது? அசைய மாட்டேன்!

ஈழத்தில் தனிப்பெரும் சாதனையை ஏற்படுத்தி ஈடு இணையற்று விளங்குவது

கல்கி பீடி



சிறந்தது, சிக்கனமானது, சிந்தனையூட்டுவது

சோர்வு நீக்கி உற்சாகத்தை அளிப்பது
புகைக்க புகைக்க இன்பம் பயப்பது

786 கல்கி பீடிகளே

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்

சி. சின்னத்துரை அன் பிரதர்,

44, 3ம் குறுக்குத் தெரு கொழும்பு.

தொழிற்சாலை: 79,79/1, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12.

## குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுப்போம்

### இ. தொ. க. தலைவர் பேச்சு

"இ. தொ. கழகம் மலையகத்தில்ஒருசக்திவாய்ந்த சங்கமாக திகழ்ந்து மலையக மக்களின் தொழிற் பிரச்சினைகளையும் அரசியல் பிரச்சினைகளையும் தீர்தது வைப்பதில் ஒருபோதும் பின்நிற்கமாட்டாதென்பதும் பிரஜாவுரிமைபெறும் விடயத்தில் இந்த நாட்டைத் தாயகமாகக் கொண்டு இங்கு நிரந்தரமாக வசிக்க விரும்புபவர்களுக்கு உடனுக்குடன் பிரஜாவுரிமைவழங்க கழகமும் கட்சியும் நடவடிக்கையை மேற்கொள்ளும்". இவ்வாறு இ. தொ. கழகத் தலைவரும் பாராளுமன்றப் பிரதிநிதியுமான திரு. வி. என். நவரத்தினம் தெரிவித்தார்.

பன்விலை கிளாபோக் டமலை தோட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் கழக தேர்தல் கூட்டம் கழகத்தலைவர் திரு. வி. என். நவரத்தினம் எம். பி. தலைமையில் நடைபெற்றது.

அவர் தமது தலைமையுரையில் மேலும் கூறியதாவது:-

'இந்த நாட்டில் வசிக்கும் தமிழ்பேசும் அனைவரும் தமிழ் அரசுக் கட்சியின்மேல் பூரண நம்பிக்கைவைத்திருக்கிறார்கள் மலையகத்தில் எத்தனையோ தொழிற்சங்கங்கள் தோன்றியும் மலையக மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படவில்லை.

மலையகமக்களின் அன்றாட பிரச்சினைகளையும்அடிப்படை உரிமைகளையும தீர்க்கவேண்டுமென்று இ தொ. கழகம் பாடுபடுகின்றது.

இக்கழகத்திற்கு ஒருவரே தலைவராகத் தொடர்ந்து இருக்கவேண்டிய நிபந்தனை கிடையாது. வருடா வருடம் தலைவரை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மலையக மக்களிடம் தங்கியிருக்கிறது.

சிறிமா-சாத்திரி ஒப்பந்தத்தில் மலையக மக்களைப்பாதிக்கக்கூடிய அளவில் சட்டம் அமுலாகுமானல் எமது இ. தொ. கழகமும் தமிழரசுக் கட்சியும்கட்டாயமாக அதை எதிர்த்தே தீரும். இவ்விடயத்தில் அரசாங்கம்கொண்டு வரும் சட்டத்திற்கெல்லாம் ஆமாம் போடுபவர்கள் நாங்களல்ல' இ தொ. கழக இணைப்பொருளாளர் செனட்டர் சு நடராசா பேசுகையில கூறியதாவது:-

'1948ம் ஆண்டு இந்த மலைநாட்டு தமிழ்மக்களின் பிரஜாவுரிமையை பறித்தநேரத்தில் நாங்கள் தமிழ்காங்கிரசைவிட்டு விலகி, அன்று முதல் தமிழ் மக்களுக்காக உழைத்து வருகிறோம். தமிழன் என்ற காரணத்துக்காக நாங்கள் எல்லோரும் சமமாக வாழவேண்டும் என்பதற்காக இக்கட்சியை எழுப்பினோம். உங்கள் மத்தியில் இருக்கும் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்காகவே மூன்றுவருடங்களுக்கு முன்பு நாங்கள் உழைக்கத்தொடங்கினோம்.

'சென்ற 3 வருடங்களாக உங்களுக்காக இயன்றவைகளை செய்திருக்கிறோம பிரஜாவுரிமை பிரச்சினை உங்கள் கையில்தான் இருக்கிறது. நீங்கள் ஒற்றுமைத்து போராடியிருந்தால் உங்களின் உரிமையை பெற்றிருப்பீர்கள்;

'1961ம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணத்தில்உள்ளவர்கள் போராட்டம்செய்து வெற்றிபெற்ற காரணத்தாலே இன்று தமிழுக்கு இடம் இருக்கிறது.

'போராட்ட மூலமாகவே தமிழ் இடம்பெற்று தமிழ் மக்கள் உரிமை பெற்றுஉள்ளார்கள். ஆனல் திரு. தொண்டமான், ஜனப் அஸீஸ் முதலியவர்கள் சேர்ந்து உங்களை இந்த நிலையில் வைத்திருக்கிறார்கள்.

'பலவந்தமாகஇந்நாட்டைவிட்டு போகமுடியாதுஎன்று கூறினல் உங்களை எந்த இராணுவமோ பொலிசோ வந்து அகற்றமுடியாது.

'இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் உங்களை அந்தமான் தீவுக்கு அனுப்புவது பெரிய அநியாயமாகும் நாம் இதை எதிர்க்க வேண்டும்.

'இப்பொழுது நாங்கள் தேசிய அரசாங்கத்தோடு சேர்ந்துள்ளோம். ஆனல் இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு தீங்கு இழைத்தால் அதை அனுமதிக்கமாட்டோம்.'

பன்விலை மாவட்டப் பிரதிநிதி சு மூத்தையாவும் மற்றும் பலரும் பேசினார்கள்.

பின்வரும்வோர் நடப்பு வருடத்திற்கு உத்தியோகஸ்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு.என்.பிச்சை, உபதலைவர்: திரு வீ. ஆறுமுகம், காரியதரிசி: திரு எ. அந்தோனி, உப-காரியதரிசி: திரு. ஆர் முத்துசாமி, தனாதிகாரி: திரு. சே. சண்முகம்.

### செயற் குழு

திருவாளர்கள்: ஆர். வி. தங்கையா, காதர்ஸா, அ. சின்னையா, மு சின்னையா, ஆர். சுப்பிரமணியம், கருப்பையா, எஸ் சித்திரை, கே பதிவனட்டுதேவர்.

### நாடகப்போட்டி

அட்டன் கைலண்ட்ஸ் கல்லூரி வகுப்புக்களிடையே நடைபெற்ற நாடகப் போட்டி அண்மையில் அட்டன் புகையிரத நிலைய உதவி அதிபர் திரு. க. சபாபதிப்பிள்ளை அவர்களின் தலைமையின் கீழ்க் கல்லூரி மண்டபத்தில் நடந்தேறியது. பரிசு பெற்றவர்களுக்கு திரு.யே. போயல் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டது.

# "தமிழரசுக் கட்சியைத் திட்டித் திட்டி தமிழர்களின் அன்பைப் பெற முடியாது"

## எதிர்க்கட்சியினருக்கு பண்டிதர் சாட்டை

"உங்களுடன் கூட்டுச் சேரவில்லையென்பதற்காக தமிழரசுக் கட்சி மீது ஆத்திரத்தைக் கொட்டி வரும் எதிர்க்கட்சியினர், நடந்து முடிந்த இடைத் தேர்தல்களின் பின்பு கடை கெட்ட வகுப்புத் துவேஷத்தை கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியினருக்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன். தமிழரசுக் கட்சியை வைது கொள்வதன் மூலம் உங்களால் தமிழர்களுடைய நட்பை ஒரு போதும் பெற முடியாது. நட்புறவை நட்புறவு மூலம்தான் பெற முடியும்." இவ்வாறு கிளிநொச்சிப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் இம்மாதம் நிகதி பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தமது பேச்சில் மேலும் கூறியதாவது:—

'எனக்கு முன்பு பேசிய கௌரவ கொம்பே பிரதிநிதி (திரு பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க) அவர்கள் தமிழரசுக் கட்சியைப் பற்றியும் அதன் தலைவர்களைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள்; அவர் கூறியவற்றுக்கு மறு மொழி கொடுக்காவிட்டால் எனது கடமையிலிருந்து—தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற முறையில் தவறி விடுவேனென்ற எண்ணத்திலேதான் நான் இங்கே சில கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

'பொதுத் தேர்தல்கள் முடிந்த காலத்தில் தமிழரசுக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன்—கூட்டு ஆட்சியுடன்—சேரவில்லை என்பதற்காகத் தமிழரசுக் கட்சியை—தமிழர்களை அவர்கள் திட்டியும் வைதுகொண்டும் வந்தார்கள்— வடை என்றும் தோசை என்றும் நல்லெண்ணெய் என்றும் இன்னும் பல இழிவான பெயர்களையெல்லாம் சொல்லி வந்தார்கள். நாங்கள் உண்மையிலே அவர்களுடைய சினத்துக்குரிய காரணத்தை அறிந்தோம். உதவியை நாட முயன்றார்கள்; உதவி கிடைக்கவில்லை. அதனால் எங்களை வைகின்றார்கள்.



திட்டுகின்றார்கள் என்ற அதற்குரிய காரணத்தை அறிந்தோம். ஒருவாறு அவர்களுடைய ஆத்திரம் குறைந்த பின்னர் இடைத் தேர்தல்கள் மூன்று நிகழ்ந்தன. இவ் இடைத் தேர்தல்களிலே மீண்டும் இந்நாட்டிலே வகுப்புவாதத்தைக் கிளப்பி, இவ்விலங்கையிலே வகுப்புவாதச் சேற்றுக்குள்ளே புதைக்கின்ற தன்மையிலே அவர்கள் தங்களுடைய பிரசாரங்களைச் செய்து தேர்தலிலும் வெற்றி பெற்றுவிட்டார்கள்;

### மாஜி அமைச்சருக்கு அழகல்ல

'இது தேர்தல் காலக் குமுவலி; அது தேர்தலோடு நின்றுவிடும் என்று எண்ணினோம். அந்தத் தேர்தலிலே கக்கிய விஷத்தை மீண்டும் மீண்டும் இந்தப் பொறுப்பு வாய்ந்த சபையிலே, அதுவும் ஒரு பொறுப்புவாய்ந்த முன்னாள் அமைச்சரொருவர் கக்கியது உண்மையிலே மனிதப்பண்பற்ற ஒரு செயல் என்றுதான் நாங்கள் கருத வேண்டியிருக்கிறது.

'இந்நாட்டிலே எல்லாரும் வாழவேண்டும் இன்று உலகம் ஒன்றேற சிங்கள மக்களென்றும் தமிழ் மக்களென்றும் முஸ்லிம் மக்கள் என்றும் அல்லது நஷ்ய மக்கள் சீன மக்கள் என்றும் வேறுபட்டுவராது இன்று ஓர் உலகமாக ஒற்றுமைப்பாட்டுடன் வாழவேண்டுமென்ற கொள்கை உலகத்திலே இருக்கின்ற நாளிலே, இந்த இலங்கையை நாங்கள் இன்னும் பிரித்துப் பேசுவது மிகவும் அவமானமான செயலாகும். இது மனிதப் பண்புக்கு மாறுபட்டதாகும்.

### இதுதான் பௌத்த தர்மமா?

'அவர்களுக்கு ஆத்திரமிருக்கிறது. இந்தப் பொதுத் தேர்தலிலே மூன்று இடங்களை நாங்கள் வென்று விட்டோம். எனினும் இந்தத் தமிழரசுக் கட்சி எங்களோடு சேர்ந்திருந்தால் நாங்கள் இன்னும் சில தொகுதிகளில் வென்றிருப்போமே என்ற ஆத்திரத்தினால் அவர்கள் தமிழரசுக் கட்சியை எப்பொழுதும் பழித்துக்கொண்டும் திட்டிக்கொண்டும் வருகிறார்கள். அவர்களுடைய ஆத்திரத்திற்குக் காரணம் இதுதான். அதை நாம் மறுக்கவில்லை. ஆனால் ஆத்திரத்தால் மதியிழந்து தங்களுடைய நிலையிழந்து எங்களையே எப்பொழுதும் தூற்றுவதுதான் அவர்களுடைய கொள்கையாக இருந்தால் இது பௌத்த தருமத்துக்கு, மனிதப் பண்புகளுக்குப் பொருத்தமற்ற தென்பதை எடுத்துக் கூற வேண்டியது என்னுடைய கடமையாகும்.

### மன்னிக்க முடியாத குற்றம்

எனவேதான் நாங்கள் சொல்லுகிறோம், சிங்கள மக்கள் நலமாக வாழட்டும்; அவர்கள் தங்களுடைய மூதாதையர்களைப் பின்பற்றி வாழட்டும் ஆனால் தாங்கள் பாராட்டுகின்ற புத்த பகவானின் கருணையையும் அன்பையும் முன் வைத்து அந்தக் கருணையின், அன்பின் அடிப்படையிலே கேட்டுக்கொள்ளுகிறோம். நாங்கள் படித்தவர்கள், பண்புள்ளவர்கள். ஒருவரை ஒருவர் விளங்கிக் கொள்ளாமல், அரசியல் தருமம் என்ன என்று தெரியாமல் ஒருவரையொருவர் இப்படி வைதால் வெளியிலே யிருக்கின்ற மக்கள் என்ன எண்ணுவார்கள்? இந்தத் தேர்தல்களிலேயெல்லாம் அவர்கள் தங்கள் சட்டைப் பைகளுக்குள்ளேயிருந்து 2 ரூபாய்த் தாள்களை எடுத்துக் காட்டி, அவற்றிலே நல்லெண்ணெய் மணக்கிறது என்று பொது மக்கள் மத்தியிலே பேசுகின்ற அளவுக்குப் பிரசாரம் நடந்ததென்றால் அது எவ்வளவு வெட்கப்படக் கூடிய ஒரு காரியமாகும். உலகத்துக்கு அன்பையும் கருணையையும் போதிக்க வேண்டிய ஒரு மதத்தைப் பின்பற்றிக் கொண்டு தம்மோடு வாழுகின்ற ஓர் இனத்தை— தம்முடைய சகோதர இனத்தை—தம்மோடு இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளாக வாழுகின்ற ஓர் இனத்தை நாள்தோறும் பகைத்துக்கொண்டும் திட்டிக்கொண்டும் வருவது என்றும் மன்னிக்க முடியாத ஒரு குற்றமாகும்.

### இதுவல்ல வழி

'பிரதமர் அவர்கள் இந்த நாட்டிலே இன ஒற்றுமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தமிழிலே ஒரு பழமொழி சொல்லுவார்கள் "நாய்க்கு எங்கே அடித்தாலும் காலைத் தான் தூக்கும்' என்று. அது போல எதிலே எதைப் பேசி வந்தாலும் தமிழரசுக் கட்சியையும் தமிழர்களையும் இழிவான முறையில் பழித்துக் கூறுவதுதான் அவர்கள் வேலை. அது ஒரு வெட்கப்படக் கூடிய காரியமாகும். எனவே இங்கே பேசப்படும் இந்த விடயத்துக்கும் தமிழரசுக் கட்சிக்கும் ஒருவிதமான தொடர்பும் இல்லையென்று நான் கௌரவ சபாநாயகரவர்களுக்கு கூற விரும்புகிறேன். அதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களென்றும் நான் நம்புகின்றேன். எந்த நேரத்திலும்

(14-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### எச்சரிக்கை! தமிழினத்தை பிளவுபடுத்த தினசரியின் முயற்சி

ஈழத்தின் தமிழ்த்தினசரிகள் பற்றி தமிழ்ப் பேசும் மக்கள் விழிப்பாகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும். பெரும்பாலான தமிழ்த்தினசரிகள் சிங்கள முதலாளிமார்களின் நிர்வாகத்தில் இருந்தே வெளிவருகின்றன. தமிழ்ப் பேசும் மக்களின் மேற் கொண்ட பாசத்தாலும், பரிவாலும் இவற்றை வெளியிடுகிறார்கள் என்று எண்ணினால் முடிவில் நமக்கு மிஞ்சுவது ஏமாற்றம் தான்.

தமிழ்ப் பேசும் மக்களைக் கூறு போட்டு, அரசியல் ஆதாயம் பெற முன்னிற்கிறது சமீபத்தில் தோன்றிய தினசரிகளிலொன்று. பல வருடகாலமாக வளர்த்து விடப்பட்ட நெல்லிக்காய் மூட்டைகள் போன்று அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சிதறிக் கிடந்த தமிழ்ப் பேசும் மக்களை, இன, மத, வேறுபாடின்றி விட, மூக்கு எற பேதமின்றி ஒன்று சேர்த்து ஒற்றுமையை உருவாக்கி வரும் இச் சந்தர்ப்பத்தில், பிரிவினை வித்துக்களை விதைத்துப் பேரின்பம் காண மனப்

(14-ம் பக்கம் பார்க்க)

## முகமூடி கிழிந்தது

தினபதியின் செய்தித் திரிப்பை அம்பலப்படுத்திய உங்களுக்கு நன்றி.

காத்தான்குடி — எஸ். ஆறுமுகம்,

மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலும் காட்டும் பத்திரிகா சுபாசங்களையும் அவை வெளியிடும் பத்திரிகைகளையும் இலங்கை வாழ் மக்கள் அனைவரும் பகிஷ்கரிக்க வேண்டும்.

கண்டி — ஆர். கே. செல்வராஜ்

தினபதியின் உண்மை உருவத்தை நீங்கள் அம்பலப்படுத்துவதற்கு முன்னரே நாங்கள் நன்கு அறிந்திருந்தோம்.

கிண்ணியா. — ஏ. எச். எம் பாக்ரு

...தமிழ் மக்கள் இன்னும் 'தினபதி'யை ஆதரிக்கலாமா?

கோப்பாய் — ஏ. கந்தசாமி

தினபதி'யை நாம் இனி ஏறெடுத்தும் பார்க்கமாட்டோம். இது சத்தியம்.

தொல்புரம் — செல்லர் இராசையா

எங்கள் கிராமத்தவர்கள் இப்பொழுது 'தினபதி'யைப் படிப்பதில்லை.

உடுவில் — ஜோர்ஜ் செல்வரத்தினம்


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

(போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜா பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,

கொழும்பு-14

சுதந்திரன்
SUTANTIRAN

1966 நவம்பர் மாதம் 19-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் - 3411 த. பெ. 1183

# மனித உரிமைகளை வழங்குக!

சிறுபான்மைத்தமிழர் விழிப்படைந்துள்ளனர். எனவே தீண்டாமை தமிழ் மண்ணில் இனி நீண்டகாலம் உயிர்வாழ முடியாது சிறுபான்மை தமிழர்களில் ஒரு சாரார் ஆலயப் பிரவேசம் கோரி சத்தியாக்கிரகம் செய்யப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

தீண்டாமை தமிழர் சமுதாயத்தினுள்ளேயே பெரும்பான்மைத் தமிழர், சிறுபான்மைதமிழர் என்ற இரு கோஷ்டிகளை உருவாக்கி, ஒருவித 'மறைமுக மோதலை' அவ்விரு பகுதியினரிடையே ஏற்படுத்தியிருக்கிறது. இவ்விரு பகுதியினரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பதால், அந்த 'மறைமுக மோதல் பகிரங்க மோதுதலாக வெடிப்பதற்கு அனுமதித்தல் தவறாகும். பகிரங்கமோதல் ஏற்பட்டால் அதனால் அதிகமாக நஷ்டமடைபவர்கள் சிறுபான்மைத் தமிழர்களாகவே இருப்பர்.

பகிரங்கமோதுதலைத் தவிர்ப்பது எங்ஙனம்? அதற்கான ஒரே வழி பெரும்பான்மைத் தமிழர்கள் என்று கூறப்படுபவர்களிடையே ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்துவதே. அந்த மனமாற்றம் பல நூற்றாண்டுகளாக வேரூன்றியிருந்த ஒரு சமூக அநீதியைக் களைந்தெறியக்கூடிய அளவுக்கு வலுவுள்ளதாக இருத்தல் வேண்டும்.

ஓரிரு நபர்களிடையே இந்த மனமாற்றத்தை ஏற்படுத்திவிட்டால் மட்டும் போதுமா? தமிழர் சமுதாயத்தின் பெரும்பகுதியினரின் மனப்போக்கிலேயே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. அதனைச் செய்வதற்கு ஒரு சக்தி வாய்ந்த இயக்கம் வேண்டும். எவ்வளவு பெரிய இயக்கமாக இருந்தாலும், ஒருசில நாட்களில் அந்த மனமாற்றத்தை உருவாக்கமுடியாது. பல ஆண்டுகள் தொடர்ந்து இயக்கத்தை நடத்திச்சென்றுதான் அது சாத்தியமாகும்.

இச் சீரிய பணியிலே முன்னணியில் நின்று பாடுபட்டவரே கோப்பாய்க்கோமான் திரு.வன்னியசிங்கம். உயர்சாதியினர் என்போரிடையே மனமாற்றத்தை உருவாக்குவதற்காகப் பாடுபட்டு, அதில் ஓரளவு வெற்றியும் கண்டவர் திரு. வன்னியசிங்கம். அவர் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து செய்து வருகின்றனர் தமிழரசுத் தலைவர்கள்.

திரு. வன்னியசிங்கமும், தமிழரசுக் கட்சியும், இதர ஸ்தாபனங்களும், தனிப்பட்ட பெரியோர்கள் சிலரும்செய்த கிளர்ச்சியின் விளைவாக உயர்சாதியினர் என்போரின் மனப்போக்கிலே ஓரளவு மாறுதல் ஏற்பட்டது. அதனால் சைவாலயங்கள் சில சிறுபான்மைத் தமிழர்களுக்குக் கதவுகளைத் திறந்துவிடவும் முன்வந்தன.

நல்லூர் ஆலயம், வண்ணைச் சிவன்கோவில், பெருமாள் கோவில், கைலாய பிள்ளையார் கோவில், மற்றும் சில ஆலயங்கள் சிறுபான்மைத் தமிழர்களுக்குத் திறந்துவிடப்பட்டன. ஏன், பாடல் பெற்ற திருக்கேதீச்சரம் கோவிலிலும் இன்று அனைவரும் எத்தகைய சாதிப் பாகுபாடுமின்றி வழிபடக்கூடியதாக இருக்கிறதே. இவை அனைத்தும் உருவாகி வந்த அந்த மனமாற்றத்தின் விளைவுதான் என்பதில் ஐயமில்லை.

அந்த மனமாற்றத்தை மென்மேலும் தொடர்ந்து வளர்த்துவந்தால் எஞ்சிய ஆலயங்களும், அடுத்து தேநீர்க் கடை முதலியவையும் சிறுபான்மை மக்களுக்குத் திறந்துவிடப்படும் காலம் வெகு தூரத்தில் இருக்கமுடியாது.

மேற்கண்ட ஆலயங்களெல்லாம் சிறுபான்மைத் தமிழர்களுக்குத் திறந்துவிடப்பட்டிருப்பதால், 'ஆலயப் பிரவேசம் தவறு என்றோ, சிறுபான்மைத் தமிழர் கோவில்களில் வழிபடுவது ஆகம—விரோதமான செயலென்றோ" ஆலயப் பிரவேசம் நடைபெறுதிருக்கும் கோவில்களின் எந்த நிர்வாகியும் கூறமுடியாது. ஆகவே ஆலயப் பிரவேசத்தை மறுக்கும் கோவில் நிர்வாகிகளின் பிடிவாதம் நீண்டகாலம் நிலைத்து நிற்கக்கூடியதன்று. காரணம் முக்கிய கோவில்கள் சிலவற்றில் ஏற்கனவே ஆலயப்பிரவேசம் நடந்திருப்பதுதான்.

இந்த இயக்கம் தமிழர் சமுதாயத்தைச் சீர்திருத்தும் ஓர் அமைதிப் புரட்சியாகும். சில ஆண்டுகளாக நடைபெறும் இந்த அமைதிப் புரட்சியைச் சமுதாயச் சீர்திருத்தம் நிறைவுபெறும்வரை வளர்த்துச் செல்லவேண்டும்.

இதில் பலாத்காரம் கடுகளவும் கூடாது. பலாத்காரம் கலந்தால் அது பலாத்காரப் புரட்சியாக மாறிவிடும். பொறுப்பற்றசிலர் சீனாவில்நடந்தபலாத்காரப்புரட்சியைத் தீண்டாமையை ஒழிப்பதற்காக இங்கும் நடத்துவதற்கு முயற்சி செய்கிறார்கள். அன்று சீனாவில் தீண்டாமை இருக்கவில்லை என்பது இவர்களுக்குத் தெரியாது. பலாத்காரம் பிரச்சினையைத் தீர்க்காது. அதனை மேலும் சிக்கலாக்கிவிடும்.

பலாத்காரம் மூலம் மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தமுடியுமா? முடியவே முடியாது. ஒருவரை ஒருவர் பயமுறுத்தும் நடவடிக்கைகள் நமதுஇலட்சியத்தைஅடையமுடியாமற் தடுத்துவிடும்.

சத்தியாக்கிரகம் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டது. அதில் பலாத்காரமில்லையே என்று கூறலாம். உண்மைதான். ஆனால், ஒரு சத்தியாக்கிரக நடவடிக்கை பலாத்காரத்துக்கு வழிவகுக்கும் நிலையிலிருந்தால், அந்த சத்தியாக்கிரகத்தை நடத்தக்கூடாது என்பதுதான் காந்தீயம்.

சத்தியாக்கிரகம் மனமாற்றத்தை உருவாக்கப் பயன்படுமா? சத்தியாக்கிரகம் ஒரு நேரடி நடவடிக்கை. எனவே ஏற்கனவே ஓரளவு உருவாகியுள்ள ஒரு பொது மனமாற்றத்தை நாசமாக்கவும், உயர்சாதி என்போரின் பிடிவாத மனப்போக்கு அதிகரிப்பதற்கும் நேரடி நடவடிக்கை வழிவகுத்து விடுமோ என்றுதான் அஞ்சுகின்றோம்.

சத்தியாக்கிரகத்தில் இறங்குமுன்பு முழுமூச்சுடன் பிரசாரம் செய்து, மனப்போக்கிலே மாற்றத்தை உருவாக்க முயற்சி செய்யவேண்டும். பிரசாரம் ஒரு பலம்வாய்ந்த கருவி. சமூகக் குறைபாடுகளை நீக்கச் சட்டமும்ஓரளவு பயன்படும். தற்போதுள்ள சட்டத்துக்கு அவசியமான திருத்தங்களும் செய்யப்படவேண்டும். இச்சட்டத்தின் கீழ் ஓரிரு முறைப்பாடுகளே இதுவரை செய்யப்பட்டிருப்பதிலிருந்தே இச் சட்டம் மூலையில் தூங்குகிறதென்பது தெளிவாகிறது. இச் சட்டத்தைச் சரிவர அமுல் நடத்தினால், அதுவே ஒரு பிரமாண்டமான பிரசாரமாக அமையும்.

சட்டம், பிரசாரம் முதலியவை பயனற்றுப்போனால், இறுதி நடவடிக்கையாகவே சத்தியாக்கிரகத்தைக் கையாளவேண்டும்.

இறுதி ஆயுதத்தை ஆரம்பத்தில் பிரயோகிப்பது சரியாகாது. தொடக்கத்தில் அதனைப் பிரயோகித்தால் எதிர்மாறான விளைவுகள் ஏற்படலாம். ஆகவே சத்தியாக்கிரகத்தை ஒத்திவைத்தல் பாராட்டத்தக்கதாகும்.

சத்தியாக்கிரகப் பிரகடனம் இயக்கத்துக்குப் புத்துயிரளித்துள்ளது. தலைவர்கள் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கிவிட்டனர் மாநாடுகள் கூட்டங்கள் நடத்தி பிரசாரம்செய்யப்படுகிறது. சாவகச்சேரி போன்ற இடங்களில் தேநீர்க் கடைப் பிரவேசம் நடக்கப் போவதாக ஒரு செய்தி கூறுகிறது. பிரசாரம் சூடுபிடித்துள்ளது. இதுவே சத்தியாக்கிரகத்தின் ஒரு வெற்றி! ஆகவே அமைதிப் புரட்சியைத் தொடர்ந்து நடத்தும்பொருட்டு சத்தியாக்கிரகம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மைத் தமிழர்களுக்கும் ஓர் எச்சரிக்கை! இன்றைய நிலைமை, நியாயம், தர்மம், சிறுபான்மைத் தமிழர்களிடையே காணப்படும் கொந்தளிப்பு ஆகியவற்றைத் தெளிவாக உணர்ந்து, துருப்பிடித்த பத்தாம்பசலிக் கொள்கையில் ஊறிக்கிடக்காமல் தங்களின் சகோதர மக்களுக்கு மனித உரிமைகளை வழங்கத் துணிவுடன் முன்வரும்படி வேண்டுகின்றோம். புதிய சட்டங்களை இயற்றி அதனைச் செய்யும்வரை அவர்கள் ஏன் காத்திருக்கவேண்டும்? பெருந்தன்மையுடன் அவர்களே முன்வந்து தீண்டாமைக்குச் சாவு மணி அடிக்கட்டும்!

# மொழிப் பிரச்சினை:

# இன்றைய நிலையும் தமிழ் மக்கள் கடமையும்

1956 ம் ஆண்டு வரை இந் நாட்டில் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து இருந்து வந்தது. 1956ம் ஆண்டின் நடுப்பகுதியில் பண்டாரநாயக்கா இந்த நிலையை மாற்றி தனிச் சிங்கள மசோதாவைக் கொண்டு வந்தார். அதை தமிழரசுக் கட்சி முழுமூச்சாக எதிர்த்தது. அவர்களுக்குப் பக்கபலமாய் இடதுசாரிக் கட்சிகளும் இதை எதிர்த்தார்கள். ஈற்றில் மசோதா சட்டமாக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் எதிர்ப்பைக் காட்டி வந்தது. அந்தச் சட்டத்தின் விளைவு தமிழையும் தமிழரையும் இரண்டாந்தர பிரஜைகளாக்கி விட்டது. ஆகவே இந்த நிலையை நிவர்த்தி செய்யும் பொருட்டாக தமிழரசுக் கட்சி தமிழ் மக்கள் ஒருவரையும் சிங்களம் படிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டது.

## பண்டா தவறினார்

இந்த எதிர்ப்பின் காரணமாக தமிழ் மொழிச் சட்டம் (விசேட சலுகை) ஒன்றை பண்டாரநாயக்கா 1958 ம் ஆண்டு நிறைவேற்றி வைத்தார். இதன் பிரகாரம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியை ஓரளவு அரச கருமங்களுக்கு பாவிக்கும் நிலைமை ஏற்பட்டது. அந்தச் சட்டத்தின் கீழ் விசேட விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இந்த விதிகளை ஏற்படுத்தாமல் திரு. பண்டாரநாயக்கா 1959 ம் ஆண்டு காலமானார். அவரின் பின் அவருடைய மனைவி ஆட்சி புரியும் காலத்தில் அன்னாரும் இந்த விதிகளை ஏற்படுத்தத் தவறி விட்டார்.

இந் நிலைமை நீடிக்கையில் 1964 ம் ஆண்டு சிங்களத்தைப் படிக்காமல் இருந்த தமிழ் உத்தியோகத்தர்களை வேலையிலிருந்து விலகும்படி, அன்றைய அரசாங்கம் அறிவித்தல் கொடுத்தது. இது மிகவும் இக் கட்டான நிலைமையை ஏற்படுத்தியது. அந்த நேரத்தில் தமிழரசுக் கட்சி சார்பிலே திரு. மு. திருச்செல்வம், திருமதி. பண்டாரநாயக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் பலனாக வேலையிலிருந்து விலகுமாறு கொடுக்கப்பட்ட முன்னறிவித்தல் ஓராண்டு காலத்திற்குப் பிற்போடப்பட்டது.

சுதந்திரன் அரசியல் நிருபர்

இந் நிலையில் அரசாங்கம் மாறிவிட்டது. 1965ம் ஆண்டு மார்ச் மாதம் 23ந் திகதி புதிய அரசாங்கம் நிறுவப்பட்டது. அந்த அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சியும் ஓர் விசேட இடம் பெற்றது. அப்பொழுது அரசாங்கத்துக்கு மொழிப் பிரச்சினையைத் தீர்க்க ஓர் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

## தமிழரசார் செய்த சமரசம்

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழரசுக் கட்சி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசகரும மொழி விடயத்தில் ஒரு சமரசம் செய்து கொண்டது.

அவையாவன:- முதலாவதாக; தமிழ் மொழி விசேட விதிகள் சட்டத்தின் கீழ் தமிழ் மொழி உபயோகத்திற்கு விதிகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த விதிகளின் பிரகாரம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் ஓர் அரசகரும மொழியாக இடம் பெற்றது. அந்த மாகாணங்களில் அரசாங்க தஸ்தாவேஜுகள் எல்லாம் தமிழிலேயே எழுதப்படும். பொதுமக்கள் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளும நடவடிக்கையெல்லாம் தமிழிலேயே செய்யப்படும். (அரசாங்கம் சிங்களத்தில் தஸ்தாவேஜுகளின் நகல் வேண்டுமென்றால் வைத்துக் கொள்ளலாம்.) இதனால்வட, கிழக்கு மாகாணங்களில் இருக்கும் பொதுமக்கள் தங்களுடைய கருமங்கள் எல்லாவற்றையும் தமிழிலே செய்து செய்து கொள்ளலாம்.

இரண்டாவதாக: இலங்கையின் ஏனைய மாகாணங்களில் இருக்கும் தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் தங்கள் மொழியில் கருமமாற்றிக் கொள்ளலாம்.

மூன்றாவதாக: அரசாங்க ஊழியரின் நிலை. அரசாங்க ஊழியர் அனைவரும் வேலையிலிருந்து நீக்கப்படக் கூடிய மோசமான நிலை இருந்து வந்தது. இவர்கள் இரு பிரிவினராகப் பிரிந்து நின்றார்கள். அதாவது 1956 ம் ஆண்டு செப்டம்பர் மாதத்துக்கு முன் அரசாங்கசேவையில் சேர்ந்தவர்கள் ஒருபிரிவாகவும், அதற்குப் பின் சேர்ந்தவர்கள் இன்னொரு பிரிவாகவும் நின்றார்கள். இவர்களைப் பழைய ஊழியர் என்றும் புதிய ஊழியர் என்றும் பிரித்துச் சொல்லலாம்.

## பெரிய வெற்றி

பழைய ஊழியர்கள் ஒருவரும் சிங்களம் படிக்க வேண்டியதில்லை யென்று இப்பொழுது அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. பெரும்பாலும் அவர்கள் முழுப் பேரும் தத்தம் வேலையிலிருந்து அரசாங்கத்தால் நிற்பாட்டப்படும் நிலையில் இருந்தார்கள். இந்த நிலையை மாற்றி அவர்கள் ஒருவரும் சிங்களத்தைப் படிக்க வேண்டியதில்லை என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. இது ஒரு பெரிய வெற்றி.

## புதிய ஊழியர் நிலை

புதியஊழியர்கள் எல்லோரும் சிங்களத்தைப் படிப்பதாக வாக்குப் பண்ணித்தான் வேலையில் சேர்ந்தார்கள். ஆகவே இவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துள் (3வருடங்களுள்) சிங்களம் படிப்பார்கள் என்று தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொண்டது. இதனால் தமிழரசுக் கட்சி அதன் நிலையிலிருந்து ஒரு படி இறங்கித்தான் உள்ளது. அப்பொழுது இருந்த சந்தர்ப்பத்தில் தமிழரசாரால் வேறு ஒன்றும் செய்து கொள்ள முடியாத சூழ்நிலை இருந்தது. இதற்கு தமிழரசார் ஒத்துக் கொள்ளாது விட்டிருந்தால் நூற்றுக்கணக்கான தமிழ் அரசாங்க ஊழியர் வேலையிலிருந்து உடனடியாக நிற்பாட்டப்பட்டு இருப்பார்கள்.

## கொள்கையை விட்டு நழுவவில்லை

தமிழரசுக் கட்சியின் உதவியோடுதான் இப்பொழுது நடைபெறும் தேசிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது என்பது உண்மையே. தமிழரசுக் கட்சி தனியே நடத்துகின்ற ஓர் அரசாங்கமல்ல இன்றைய தேசியஅரசாங்கம். ஆகையால் சமரசம் செய்து கொள்ளும் பொழுது இரு பக்கத்தினரும் தாங்கள்

(9-ம் பக்கம் பார்க்க)

# திருமலை கப்பல் கம்பெனிகளின் முடிவால்

# 3000 தொழிலாளர் வேலை இழப்பர்

## நிவாரணம் கிடைக்க தமிழரசார் நடவடிக்கை

திருகோணமலைத் துறை முகத்தில் உள்ள நான்கு கப்பல் கம்பெனி முதலாளிகளும் தங்கள் கம்பெனிகளை மூடிவிட முடிவு செய்திருப்பதால் திருமலையிலுள்ள சுமார் 3000க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் செய்வதறியாது திகைப்படைந்துள்ளனர். இது சம்பந்தமாக திருமலை எம். பி. எஸ். எம். மாணிக்கராசா 'தமிழரசுத் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன்' திருமலைத் துறைமுகத் தொழிலாளர் கழகத்தினர் ஆகியோர் வர்த்தக, தொழில், தேசிய மய சேவை அமைச்சுக்களுடன் குறித்த கப்பல் கம்பெனி முதலாளிகளையும் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

திருமலைத் துறைமுகத்திலுள்ள நான்கு கப்பல் கம்பெனிகளும் சென்ற அக்டோபர் மாசம் தொடக்கம் ஒன்றாக இணைந்து இயங்கி வந்தன. துறைமுகத் தொழிலாளர்கள் உரிமைகள் சம்பந்தமாக கப்பல் கம்பெனி முதலாளிகளுக்கும் திருமலைத் துறைமுகத் தொழிலாளர் கழகத்துக்கும் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டிருந்தது.

இதற்கிடையில் இலங்கை ஐக்கிய துறைமுகத் தொழிலாளர் சங்கம் (சமசமாஜக் கட்சியின் ஆதிக்கத்திலிருப்பது) வேலை நிறுத்தத்தில் இறங்கியது. இ ஐ து. தொ. சங்கத்தின் வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே வர்த்தக சிப்பந்திகளின் வேலை நிறுத்தமும் சேர்ந்து வந்தது. இந்த வேலை நிறுத்தத்தில் துறைமுகத் தொழிலாளர் கழகம் கலந்து கொள்ளவில்லை. அதன் ஊழியர்கள் வேலைக்கு சென்று வந்தனர். எனினும் வேலை நிறுத்தம் காரணமாக பல கப்பல்கள் திருமலைத் துறைமுகத்தை விட்டு வெளியேறியதுடன், திருமலைத் துறைமுகத்துக்கு வராமலும் சென்று விட்டன. இதன் காரணமாக கப்பல் கம்பெனி முதலாளிகள், நஷ்டம் என்ற காரணம் காட்டி கப்பல் கம்பெனிகளை மூடிவிட முடிவு செய்து தொழிலாளர்களுக்கு வேலை நீக்க அறிவித்தல் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

அதே சமயம் வேலை நிறுத்தத்தின் போது வேலை செய்த துறைமுக தொழிலாளர் கழகத்தினர்க்கு வேலை செய்த நாட்களுக்குரிய சம்பளம், தீபாவளி அட்வான்ஸ் முதலியன வழங்கப்படவில்லையென்றும் தெரிகிறது.

இது சம்பந்தமாக இவ்வாரம் முழுவதும் தொழிலமைச்சரைக் கண்டு நிலைமையை எடுத்து விளக்கி குறித்த தொழிலாளர்களுக்குரிய சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு டாக்டர் நாகநாதன், திரு. சு. ம. மாணிக்கராசா, துறைமுகத் தொழிலாளர் கழகத்தினர் ஆகியோர் ஈடுபட்டிருந்தார்கள்.

அதன் பயனாக குறித்த கப்பல் கம்பனி முதலாளிகளிடமிருந்து துறைமுகத் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு உரிய சம்பளத்தை பெற்றுக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை தொழில் கமிஷனர் மேற் கொண்டுள்ளார் என்றும் தெரிகிறது.

## பொய்ச் செய்தி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிருபரிடம் பேராசிரியர் கூறினார்.

உயர்தரக் கல்விச் சபையின் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகராவுக்கும், தமிழ் பல்கலைக் கழக இயக்கத் தலைவர் பேராசிரியர் மயில்வாகனத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, இலங்கையில் தமிழ் பல்கலைக் கழகம் நிறுவும் சாத்தியம் இப்போதைக்கு இல்லையென திரு. மலலசேகரா கூறிவிட்டதாயும், அதனால் திருமலையில் தமிழ்பல்கலைக் கழகத்துக்கென வாங்கிய காணிகளை விற்றுவிட தமிழ்பல்கலைக் கழக இயக்கத்தினர் ஆலோசித்து வருவதாயும் 8-11-66 'தினபதி' ஒரு முன் பக்கச் செய்தியை வெளியிட்டிருந்தது.

இச்செய்தி பற்றி அன்று மாலை தினபதி ஆசிரியர் பேராசிரியரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அபிப்பிராயம் கேட்ட போதே மேற்கண்டவாறு பேராசிரியர் பதிலளித்தாராம்.

'தினபதி' செய்தி சம்பந்தமாக நமது நிருபர் பேராசிரியர் திரு. மயில்வாகனத்துடன் தொடர்பு கொண்ட போதுதான்' 'தினபதிக்கு, தாம் மேற்கண்ட பதிலை அளித்ததாக அவர் நமது நிருபரிடம் கூறினார். 'எல்லாவற்றையும் குழப்பியடிக்கப் பார்க்கிறது' என்றும் அவர் 'தினபதி' மேல் குற்றஞ் சுமத்தினார்.

ஆதாரமற்ற ஒரு செய்தியை முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுவது, பின் சம்பந்தப்பட்டவர்களிடம் மறுப்பு வாங்கி வெளியிடுதல்; பின் மறுப்புக்கு மறுப்பு; இதுவே தினபதி செய்தி சேகரிக்கும் இலட்சணம் என்பதை பேராசிரியரின் பதிலிலிருந்து ஊகிக்க

## இன்றைய...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த படியிலிருந்து ஒரு படி இரண்டு படி இறங்கியே தீரவேண்டும். இப்படி நடந்ததினால் தமிழரசுக் கட்சி இந்நாட்டில் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து வேண்டுமென்ற தனது கொள்கையைக் கைவிட்டதாகக் கூற முடியாது. அல்லது தனிச் சிங்களச் சட்டத்தை அக் கட்சி ஏற்றுக் கொண்டதென்றும் சொல்ல முடியாது.

தனிச்சிங்களச்சட்டம், தமிழ்மொழி (விசேட விதிகள்) சட்டத்தினால் அதன் வேகத்தை இழந்து விட்டது. இன்று நாட்டிலிருக்கும் நிலை தனிச்சிங்களச்சட்டமல்ல. தமிழ்மொழி (விசேட விதிகள்) சட்டமும் அத்துடன் கூடவேயிருக்கிறது. இதனால் தமிழ்பேசும் மாகாணங்களாக இருக்கின்ற வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து ஏற்பட்டு விட்டது. ஏனைய மாகாணங்களில் ஓரளவுக்கு தமிழ் பாவிக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. ஆகவே தனிச்சிங்களச் சட்டத்தை தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொண்டு விட்டது என்று சொல்பவர்கள் விஷயத்தை விளங்காமல் பேசுகிறார்கள் என்றுகூறவேண்டும். எதிர்க்கட்சிகள் இந்நாட்டில் தமிழுக்கு ஓரிடமும் கொடுக்கக் கூடாது என்று வாதிடும் நேரத்தில் தமிழுக்கு ஓரளவு அந்தஸ்தை வழங்கியிருக்கும் அரசாங்கத்தை விட்டு பிரிவது புத்தியான செயல் என்று இன்று கூற இயலாது.

மேலும் ஓர் விடயத்தை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். சிங்களத்தைத் தமிழ் மக்கள் மீது திணிப்பது தமது கொள்கையல்ல என்று கூறியுள்ளார் திரு. டட்லி சேனநாயக்கா. அரசாங்கத்தில் ஊழியம் புரிய வருகிறவர்கள் மாத்திரம் சிங்களத்தைப்படிக்க வேண்டும், என்பதே அவரின் கொள்கை. அதற்காக புதிய ஊழியர்கள் சிங்களத்தைப் படிப்பதற்குமூன்றுவருடஅவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டே தமிழரசுக்கட்சி தமிழ் பேசும் மக்களிடம் புதிய அரசாங்க உத்தியோகத்தரை தவிர்ந்த ஏனைய தமிழ்மக்கள் சிங்களத்தைப் படிக்க வேண்டாம் என்று கேட்டுள்ளது. அரசாங்க ஊழியத்தேர்வுகளில் எடுபட்டவர்கள் மாத்திரம் தங்கள்பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் குறிக்கப்பட்ட அளவுக்குள் மாத்திரம்சிங்களத்தை கற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த நிலையைவிட்டு தமிழ் மக்கள் எல்லோரும் சிங்களம் படித்துவந்தால், பிற்காலத்தில் இந்நாட்டில் தமிழே இல்லை,தமிழரே இல்லைஎன்ற நிலைதான் வந்து சேரும்.

## தீண்டாமையை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்திற்குஆலோசனை கூறுவார் என்று தெரிகிறது:

சாதிப்பாகுபாட்டை நீக்குவதற்கு தமிழரசுக்கட்சி நாலுஅம்சத்திட்டம்ஒன்றை முன்வைக்கும் என்று திரு. கதிரவேற்பிள்ளையும், திரு. நவரத்தினமும் நமது நிருபரிடம் கூறியுள்ளார்கள். அவையாவன!

1. தற்பொழுது இருக்கும் சட்டம் போதுமானது அல்ல என்ற காரணத்தினால் இதற்கு சில திருத்தங்கள் கொண்டுவர முயற்சித்தல்.

2. ஆலயப்பிரவேசத்திற்கு என்று தனியாக ஒரு புதுச் சட்டம் கொண்டுவர முயற்சித்தல்.

3. தற்பொழுது இருக்கும் சட்டத்தைப் பரீட்சிக்கும் முறையில் வழக்குத் தாக்கல் செய்தல்.

4. தொகுதி தோறும் தேனீர்கடைப் பிரவேசத்திற்கு தமிழரசு எம். பி. கள் தலைமையில் இயக்கம நடத்துதல்.

தீண்டாமை ஒழிப்புச் சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டதற்கு தமிழரசுக்கட்சியின் சாதிப் பாகுபாட்டு ஒழிப்புக்குழு நன்றிபாராட்டியுள்ளது.

## அமைதியான...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகிறது. நாம் முன்னர் பார்க்க முடியாதவற்றை இன்று பார்க்கிறோம். கட்டுக்கம்பளைப் பிரதிநிதியினதும், கொழும்பு தெற்குப் பிரதிநிதியினதும் (திரு. பெர்னாட் சொய்சா) சிந்தையில் பெரும் மாற்றங்களை இன்று நாம் அவதானிக்கின்றோம்.

இப்பாராளுமன்றத்திலிருந்து உங்கள் செய்கைகளிலும், முகங்களிலும் பார்க்கிறோம், கடந்தகால் நூற்றுண்டு காலத்தில் நாம் பார்க்க முடியாதவற்றையெல்லாம் இன்று பார்க்கின்றோம் இவர்களின் இன்றைய அரசியல் தத்துவம் இவர்களை எங்கே அழைத்துச்செல்லும் என்பதை என்னால் கூறமுடியாது. இப்பிரச்சினைகளைப் பற்றியும் அவர்களின் எதிர்கால அரசியல் பாதை பற்றியும் தீர்மானிக்கும் விடயத்தை கலாநிதி அவர்களிடமும் முதிர்ந்த அரசியல்வாதிகளிடமும்விட்டுவிடுகிறேன். இலங்கை பல இனங்களைக் கொண்ட நாடு, இன்றைய அரசாங்கமாயினும் சரி நாளைய அரசாங்கமாயினும் சரி தமிழர்களின் தலையுடனேயே காரியங்களை ஆற்ற வேண்டும்.


**தமிழ்க் கவிதை உலகில் புரட்சி**

ஈழத்துப் பெருங் கவிஞர்

**மஹாகவி**

எழுதும்

**தொடர் காவியம்**

**ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்**

டிசம்பர் 4-ம் திகதி இதழில்

ஆரம்பமாகிறது.

★ பிறந்தமை முதல் இறந்தமை வரை உள்ள ஒவ்வொரு திருப்பங்களையும்— அங்கங்களையும் மஹாகவி தனக்கே உரித்தான குறும்புத்தனத்துடன் இக்காவியத்தில் வடித்திருக்கிறார். அவர் கருத்துக்கு அமைந்த படங்களையும் ஓவியர் "சௌ" வரைந்துள்ளார். ஒவ்வொரு அத்தியாயத்துடனும் "சௌ"வின் படங்களும் வெளியாகும்.

**உங்கள் பிரதிக்கு இன்றே முந்துங்கள்**





# யார் குற்றவாளி?

ஓட்டமாவடி சாலிஹ்

எமது சிறுகதை

பிரதான வீதியில் பெயர் பெற்ற சந்தியில் எழுந்தருளி அந்தக் கிராமத்தின் பெயருக்கும், பெருமைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கிய அந்த இரண்டடுக்கு மாடி வீடு அன்று என்றுமில்லாதவாறு அழகின் அவதாரமாய் அலங்காரச் சின்னமாய், உருப்பெற்று நின்றது.

வாசலை வட்டமிட்டிருந்த அலங்காரப் பந்தல் வானத்தைத் தொட்டுக்கொண்டிருந்த வாத்திய கோஷம். ஓய்வொளிவற்றஒலிபெருக்கி யோசை வாசற் கேற்றிலிருந்து வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் கார்கள், சைக்கில்கள்-'கலீர் கலீர்' என்ற சிரிப்பொலி, அதை எடு இதை எடு என்ற அவசர வார்த்தைகள், எல்லாம் சேர்ந்து அதையோர் கல்யாண வீடு என்பதை எடுத்துக்காட்டின.

முக்கியஸ்தரின்விடல்லவா மேளவாத்தியம் மூச்சு விடாமல் முழங்கிக்கொண்டிருந்தது.

அப்போதுதான் எங்கிருந்தோ ஓடிவந்த மகுமூது மரைக்கார் அவ்வீட்டின் சொந்தக்காறன் ஏககாலத்தில் எத்தனையோ பேர்களுக்கு என்னவெல்லாமோ கட்டளைகள் பிறப்பித்தார். அவரின் அவசரமும் துடு-துடுப்பும், மாப்பிள்ளை ஊர்வலம் நெருங்கிவிட்டது என்பதை எடுத்துக்காட்டின. மேளவாத்தியம்கூட மிக முடுகுத்தலாய்கேட்டது எல்லோரும் மின்சாரவேகத்தில் சுழன்றனர் பட்டாசு வெடிகள் பளீர்-பளீர் என வெடித்தன. கல்யாண வீட்டாரின் அதுவும் பெரிய இடத்தாரின் மதிப்பைப்பெற்றுக்கொள்ள நாதஸ்வரக்காரர் தங்களிடமுள்ளதிறமையையெல்லாம் சேர்த்துப் பாடினார்கள். பெண்கள் கூட்டத்தின் குலவைச் சத்தம் ஒலிபெருக்கிக்குள்ளால் ஓயாமல்ஒலித்தது.

மாப்பிள்ளை ஊர்வலம் பெண் வீட்டுப் பந்தலை முகாமிட்டது. வரவேற்பு உபசாரங்கள் வெகுதடபுடலாக நடைபெற்றன. ஒன்றரை மைல் தூரத்தைச் சுற்றிய ஊர்வலப் பிரதிநிதிகள் உல்லாசமாய் வீற்றிருந்தனர். மாப்பிள்ளையை உற்றுப் பார்த்த மங்கையர் கோஷ்டி ஒன்று எதையோ கசபுசத்துக்கொண்டது. 'ஏண்டி சித்தி பரீதா பதினென்கு வயதும் நிரம்பப்பெருத ஓர் பாலகியல்லவா? மாப்பிள்ளைக்குதிட்டவட்டமாய் நாற்பது வயதிருக்குமே, இதைவிட ஒரு அறுபது வயதுக்கிழவனுக்கே கொடுத்துவிடலாமே! இதுவந்து'... 'போடி, சோடிப்பொருத்தம், வயதுப்பொருத்தம் பார்ப்பதும், வயது வந்து வாழ்க்கைப்படுவதும், நமது பகுதியிலே-அதிலும் நமது சமூகத்திலே ஆயிரத்திலொன்றுதானேடி. அதிலும் பணக்கார இடங்களிலே...' 'அது சரி நமக்கேன் இந்த வம்பெல்லாம். அவர்கள் கசபுச நின்றுவிட்டது.

'நேரம் நெருங்கிவிட்டது இனி தாலியைக்கட்டலாமே' என்ற மகுமூது மரைக்காரின் குரல் ஓய்ந்துகொண்டு போகும்போது மணப்பெண்ணின் மரணச்செய்தி முந்திக்கொண்டு வந்தது. மரைக்கார் மலைத்துப்போனார். உணர்வற்ற நிலையில் ஓ வென்று கதறினார். அந்த வீடே கதறியது! சந்தோஷத்தில் மிதந்த அவ்வீடு துக்கத்திலாழ்ந்தது, மேளவாத்தியம்பாடிய அவ் வீட்டில் மரணகீதம் பாடப்பெற்றது!

'பரீதா இறந்துவிட்டாள் மணப்பெண் மரணித்துவிட்டாள்' எப்பக்கம் நோக்கினும் இச் சொல்லே எதிரொலித்தது-திருமண வைபவத்தில் கலந்துகொண்டிருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் திடீர் மரண விசாரணை அதிகாரி மற்றும் பிரமுகர்கள் ஏழைகள் பணக்காரர்கள் பெரியவர்கள் சிறியவர்கள், எல்லோருமே ஏக-காலத்தில் மணவறைக்குள் நுழைந்தனர். அழுகையும் கூக்குரலும் வீரியால் போவோர்-வருவோரையெல்லாம் வரவழைத்துக் கொண்டிருந்தன.

பரீதாவின் மரணம் பலர் இதயத்திலும் கேள்விக்குறிகளை எழுப்பின. ஒவ்வோர் உள்ளங்களும் தங்கள் அபிப்பிராயங்களை உதறிக்கொண்டன. 'மணப்பெண்ணுக்கு மாரடைப்பு ஏற்பட்டிருக்கலாம்' இது ஒரு வைத்திய நிபுணரின் குரல், 'சேச்சே அவள் வேறு யாரையோ காதலித்திருக்கிருள். பெற்றோர்கள் பிடிவாதமாக இவ் விவாகத்தை நடத்தியிருக்கிறார்கள். காதலின் தோல்வியைச் சகிக்கமுடியாமல் தற்கொலை செய்திருக்கிறாள்? இது ஒரு காதல் தத்துவஞானியின் குரல்-இதெல்லாம் ஒன்றுமில்லையப்பா. இன்று அவள் மரணமாகவேண்டிய பலன் மரணித்துவிட்டாள். இது ஒரு வயது முதிர்ந்த குரல்.' இப்படி எத்தனையோ குரல்கள் எப்படிஎப்படியெல்லாமோ சொல்லிக்கொண்டன.

தற்கொலை மரணத்தில் தடிக்க அனுபவம் பெற்ற இன்ஸ்பெக்டர் இஸ்மாயில் அந்த அறைமுழுவதும்அலைந்தார். பிரேதத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார். ஒவ்வொரு அங்கங்களையும் உற்று நோக்கினர். பரீதாவின் உயிர் போயிருந்ததே தவிர உடலில் எவ்வித அப்பழுக்கும் இருக்கவில்லை.

விளக்கம்-விசாரணைபிரேத பரிசோதனை ஆகியவற்றிற்குப்பின் பரீதாவின் உடலில் விஷம் புகுந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. விஷமே அவள் உயிரைக் குடித்திருக்கிறது. ஆனால் தானாகவே குடித்துக்கொண்டாளா அல்லது யாராலாகுதல் ஊட்டப்பட்டாளா? அதுதான் புரியாத புதிர். இந்நிலையில் தான் புலன் விசாரணை செய்யும்படி பொலிசாரின் தலையில் பொறுப்பேற்றிவிட்டு மரண விசாரணை அதிகாரி தப்பித்துக்கொண்டார்.

இன்ஸ்பெக்டர் இஸ்மாயில் மகுமூது மரைக்காரிடம் எதையெல்லாமோ கேட்டுப் பதிந்து கொண்டிருந்தார். எல்லோரையும் விட பரீதாவின் மரண விசயத்தில் அவருக்குத்தான் மிக அக்கறையும் ஆத்திரமுமிருந்தது. பல சிக்கலான கேஸ்களிலெல்லாம் தனது அறிவாலும் ஆராய்ச்சியாலும் வெற்றியீட்டிய சூரப்புலிக்கு பரீதாவின் மரணம் மிக நில்லுமுல்லாய்த் தோன்றில. பரீதா கொலைபட்டிருக்கிறள்' என்றே அவர் பலமாக நம்பினர்.

மணவைபவம் மரணவைபவமாக மாறி மணக்கோலத்தில் காணவேண்டிய பரீதாவைப் பிணக்கோலத்தில் கண்ட மாப்பிள்ளை மஜீது அவ்வளவாகத் துக்கமோ விரக்தியோ அடைந்ததாகக் காணவில்லை எவ்வித சலனமுமின்றி வந்தவர்களில் தானுமோர் ஆளாகச் சென்று கொண்டிருந்தான், வீட்டின் நிர்வாகஸ்தர்களைத் தவிரமற்றெல்லோரும் நடையைக்கட்டிவிட்டனர்-மகுமூது மரைக்கார் சோர்ந்து சுருண்டு சோபாவுக்குள்கிடந்தார். அவரின் மனம் சுக்குநூருகச் சிதறுண்டு கிடந்தது. அவர் அந்தப் பகுதியிலேயே மிக செல்வமும் செல்வாக்குமுள்ளவர். இந்தக் காலத்துப் பணக்காரர்களுக்கு முற்றிலும் மாறுபட்டவர்-'கொடை வள்ளல் கருணைமகான்' என்றெல்லாம் போற்றப்படுபவர். தனது உள்ளநுமோர் புத்திரியின் திருமணத்தை வெகு சிறப்பாய்ச் செல்வமாய் புகழாய்ப் புதுமையாய் நடத்த வேண்டுமென்று திட்டமிட்டார். அந்தக் கிராமத்துமக்கள் அப்பகுதியில் உள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்கள்-பிரமுகர்கள்-பெரியோர்-சிறியோர்கள் அத்தனை பேருமே அதில் கலந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினார். அதனால்தான் ஓராயிரம் அழைப்பிதழ்களையும் தனது காலினலேயே வீடு வீடாகச் சென்று விநியோகித்திருந்தார். அவர் எதிர்பார்த்ததைவிடப் பன்மடங்கு சிறப்பாகவே திருமண வைபவம் நடைபெற்றது ஆனல் பரீதாவின் மரணம்...? இன்ஸ்பெக்டரின் கூற்றை எவருமே அங்கீகரிக்கவில்லை.

நாட்கள்நகர்ந்தன! இராப்பகலாக ஓய்வொளிவின்றி ஓடித்திரிந்த இன்ஸ்பெக்டரின் முகத்தில் அன்று வெற்றிப் புன்னகை தவழ்ந்தது. அதிகாலையிலேயே எழுந்த இன்ஸ்பெக்டர் அவசர அவசரமாக உடையை மாற்றிக்கொண்டு நேரே மகுமூது மரைக்காரின் வீட்டிற்குச் சென்றார். 'என்னவோ இன்று அதிகாலையிலேயே பரீதாவின் மரணவிசயமாக ஏதாவது'...மரைக்கார் பேச்சைத் தொடுத்தார். 'ஏதாவதென்ன எல்லாமே கிடைத்துவிட்டது. உங்கள் மகளின் மறைவுக்கு காரணகர்த்தா நீங்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது! பரீதாவுக்கு நடக்கவிருந்த அந்த விவாகம் எப்போது நிச்சயார்த்தம் பண்ணினீர்கள்' -இன்ஸ்பெக்டர் முடிக்கவில்லை. 'என்ன என் மகளின் மறைவுக்குநான் காரணமா'? மரைக்கார் துடித்தார். 'ஆமாம் மரைக்கார் அழுத்தம் திருத்தமாக பரீதாவின் மரணத்திற்கு நீங்களும் உங்கள் செய்கையும்தான் காரணம். கொலைகாரனையும் அதற்கான காரணத்தையும் நான் கண்டு பிடித்து விட்டேன். இந்தப் பத்துப் பதினைந்துநாள்களும் நான்பட்டபாடு வீண்போகவில்லை. இன்று நள்ளிரவு உங்கள் மாப்பிள்ளை மஜீதையும் அவன் காதலி கதிஜா என்ற ஓர் பெண்ணையும் கைது செய்து காவலில் வைத்திருக்கிறேன். மற்றும் விபரங்கள் கோர்ட்டில் சொல்லவேண்டியது. இப்போதைக்கு அது உங்களுக்குத் தேவையில்லை. இவ்வளவையும் சொல்லிவிட்டுப் போவதற்காகத்தான் விடியற காலையிலேயே வந்து உங்களுக்குச் சிரமத்தைத் தந்துவிட்டேன் மன்னித்துக் கொள்ளுங்கள் நான் வருகிறேன்.' இன்ஸ்பெக்டர் எழுந்து நின்றார். 'இன்ஸ்பெக்டர் ஸார் என் மனநிலையை அறியாதவர்போல் தாங்கள் இப்படியெல்லாம்பேசக்கூடாது. கோர்ட்டில் விபரம் பெறும் வரை என்னுல் எப்படிப் பொறுத்திருக்கமுடியும், என் மனவேதனையை மேலும் அதிகரிக்கச்செய்யாதீர்கள் நாம் நீண்டநாட்களாய் நெருங்கிய நண்பர்களாய்ப் பழகியிருக்கிறோம் எங்களின் விஷயத்தில் தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு நாங்கள் என்னதான் கைமாறு செய்யப்போகிறோமோ? உத்தியோக தோரணையைவிட்டு இருவரும் நண்பர்கள், ஒரே சமூகத்தின் பிரதிநிதிகள் என்ற முறையில் விசயத்தைச் சிறிது விபரித்துச் சொல்லுங்கள். எனக்குப் பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கிறது!' மகுமூது மரைக்காரின் கண்களிலிருந்து ஒரு பெரிய அருவியே ஊற்றெடுத்தோடிக் கொண்டிருந்தது. இன்ஸ்பெக்டரின் கண்களிலும் நீர் கசிந்தது.

மஜீதையும் கதிஜாவையும் கொலைகாரராகக் குற்றம் சுமத்தி அவர்களைக் கைது செய்திருப்பது உங்களுக்கு மட்டுமல்ல உலகத்திற்கே வியப்பாகவிருக்கலாம். உங்கள் பெண்ணின் மரணம் தற்கொலை என்று தீர்ப்புக் கூறிவிட எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லையல்லவா? எனவேதான் இவ்விசயத்தில் மிக அக்கறையும் முயற்சியுமெடுத்தேன். நான் பரீதா கொலைப்பட்டாள் என்றே நம்பினேன். அதற்கு ஆதாரம் முதன் முதலாக எனக்குக் கிடைத்த சான்று பரீதாவுக்குப் பாலயத்தில் அதாவது ஆறுவயதில் நீங்கள் பதிவுத் திருமணம் (நிகாவும்) செய்துவைத்த ஒரே ஒரு காரணமே! அதைக் கொண்டே நான் மஜீதைச் சந்தேகித்தேன். கண்காணித்தேன்.

சுமார் ஏழரை வருடங்களுக்கு முன் பரீதாவுக்கும் மஜீதுக்கும் 'நிகாஹ்' செய்து வைத்திருக்கிறீர்கள்-மஜீது உங்கள் சொந்தத் தங்கையின் மகன். உங்கள் தயவிலே வளர்ந்தவன். படித்தவன். உங்கள் முதலீட்டின் பேரிலேயே முதலாளியாயிருப்பவன் பண ஆசையினலும்உங்கள் சொல்லுக்கு மாற்றம் பகரமுடியாத தொன்றிற்காகவுமே தனது இருபத்தெட்டு வயதில் ஆறுவயதுச் சிறுமியை பதிவுத்திருமணம் செய்யச் சம்மதித்தானே ஒழிய மனப்பூர்வமாகவல்ல!

பரீதா மஜீதின் பதிவுத் திருமணம் கதீஜா மஜீதைக் கலக்கி விட்டாலும்; அவர்கள் காதலுக்குக் கட்டுப்பாடோ தடையோ விதிக்கவில்லையல்லவா? இதனால் அவர்கள் காதல் தங்குதடையின்றி அதி மும்முரமாக வளர்ந்தது! ஏறக்குறைய பத்து வருடங்களுக்குமேலாக வளர்ச்சியடைந்த காதல் இரும்பும் காந்தமும் போல் இருவர் உள்ளத்தையும் பிணைத்து நின்றது.

உங்கள் மன ஆவலைப் பூர்த்தியாக்குவதுபோல் பரீதா பன்னிரெண்டு வயதிலேயே பருவமடைந்துவிட்டாள். மறுநாளே அவளுக்கு மாங்கல்யம் போட்டுவிடத் திட்டமிட்டு விட்டீர்கள் இத்திட்டம்தான் காதலர்களுக்குள் மிகக் கலக்கத்தை உண்டாக்கிவிட்டது; மறுத்துக் கொள்ளவும் மஜீதால் வழியில்லை. மறுத்தால்தான் முதலாளிப்பதவி முடிந்துவிடுமே! காதலைக் கைவிட்டுக் கொள்ள கதீஜாவும் பணக்காரியாயில்லை. இருவரையும் பிரியவொட்டாமல் காதல் மட்டுமல்ல அதன் சின்னமாக கதீஜாவின் கருவில் நாலைந்து மாதங்களாய் வளர்ந்துவரும் சிசுவும் சேர்ந்து தடுத்தது! இதனால் செய்வதறியாது தயங்கிய காதலர்களின் திட்டம் சதித்திட்டமாய் உருப்பெற்றது!

மஜீது மாப்பிள்ளையாக மணக்கலக்கமில்லாதவனாக நடித்தான். இயற்றிவைத்த திட்டப்படி கதிஜாவே பரீதாவுக்கு நஞ்சூட்டினாள். வேறு உதவியற்ற கதிஜாவும் அவள் அன்னையும் உங்கள் தயவிலே வாழ்பவர்கள். ஆகையால் திருமண வைபவத்திற்கு இரண்டு நாள்முன் கூட்டியே அவர்கள் உங்கள் வீட்டில் குடியேறிவிட்டார்கள். கல்யாண வீட்டின் சொந்தக்காரியாகவும் மணப்பெண்ணின் தோழியாகவுமிருந்த கதிஜாவுக்கு இது ஒன்றும் அவ்வளவு சிரமமாய் சிக்கலாயிருந்திருக்காது. இரண்டுநாளாய் உங்கள் வீட்டில் சேவை செய்த கதிஜாவும் அவள் அன்னையும் மாப்பிள்ளை ஊர்வலம் வந்து சேர்ந்ததும் வெளியேறிவிட்டார்கள். நீங்கள் கவனிக்கவில்லை. நான் கவனித்துக் கொண்டேன். மணப்பெண்ணின் மரணத்தினல் மாப்பிள்ளை மஜீது எவ்வித துக்கமோ சலனமோ அடையவில்லை.

இத்தகைய காரணங்களையும் நிகழ்ச்சிகளையும் குறிப்பாக மஜீதும் கதிஜாவும் காதலர்கள் என்பதிலிருந்து ஆராய்ந்து அறிந்தபின்பே அவர்களைக் கைதுசெய்தேன். அவர்களுக்குள் போக்குவரத்துப் பண்ணிய கடிதங்களைக் கைப்பற்றினேன். அக்கடிதங்களே எல்லாவற்றிற்கும் சாட்சி பகரக்கூடியன வாயமைந்துள்ளன. இதை மஜீதோ கதிஜாவோ மறுக்கவில்லை. சட்டமும் நியாயமும் அவர்களைக் கொலைகாரராய்கண்டு குற்றம் சுமத்தினுலும் உண்மையில் 'யார் குற்றவாளி' என்பது சமூகத்திற்குத்தான் நன்கு தெரியும்?

'கோட்டில் நடத்தவேண்டிய தொகுப்புரையை உங்கள் வீட்டில் நடத்திவிட்டேன், உங்கள் மன ஆறுதலுக்காக! நான் வருகிறேன்.' இன்ஸ்பெக்டர் இஸ்மாயில் எழுந்துநின்ருர். மகுமூது மரைக்கார் உணர்ச்சியற்ற மரக்கட்டையாக உட்கார்ந்திருந்தார்.

(யாவும் கற்பனை)


KASA NASINI

காச நாசனி

"காச நாசனி" எல்லாவித மான இருமல்களையும், அவை, எவ்வளவு நாள் பட்டதானலும், கடுமையானதானலும், விரைவில் சுகப்படுத்துகிறது. பீனிசம், நெஞ்சுச் சளி (ப்றேங்கைடீஸ்) சயரோகம் முதலிய வருத்தங்களுக்கும் மிகச் சிறந்தது.

"ப்றதிச்சாய தகோகாஸ: காஸால் ஸம்ஜாயதேக்ஷய"

என்னும் பிரமாணப்படி, பீனிசத்திலிருந்து இருமலும், இருமலிலிருந்து சயரோகமும் உண்டாகிறது. ஆதலால் இருமலை வளர விடாமல், தகுந்த மருந்தை உடனே பாவிக்க எவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நீண்டகால ஆராய்ச்சியின் பயனுகக் கண்டுபிடிக்கப்பட்ட இம் மருந்தின், சீக்கிரமாயும், நிரந்தரமாயும் குணமளிக்கும் தன்மை, மற்றெரு இருமல் மருந்துக்கும் இல்லை என்பதை பாவித்தவர்கள் சொல்லுகிறார்கள்.

அளவு: 15 - 25 சொட்டுகள் விதம் தினம் மூன்று முறை.

விலை: 1 அவு. போ ரூ. 5/-

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
80, புதுச்செட்டித் தெரு
கொழும்பு - 13.

# இடதுசாரிகள் ஓட்டம்: மொரார்ஜியின் கை ஓங்குகிறது:

—————o—————

## இந்திரா காந்தியின் பதவிக்கு ஆபத்து?



பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பதவி ஏற்ற பின்னர் நாட்டிலே ஒரு கொந்தளிப்பான நிலைமை தோன்றி, அதுபடிப்படியாக ஒரு பெரிய நெருக்கடியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

நாடெங்கினும் மாணவர் கிளர்ச்சிகள், ஊர்வலங்கள், 'ஓர் ஆலை அங்கு நிறுவப்பட வேண்டுமா இங்கு நிறுவப்படவேண்டுமா' என்பதில் பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. இந்த கொந்தளிப்பான நிலைமையில் எரியும் தீயிக்கு எண்ணெயை வார்த்ததைப் போல தலைநகரில் இந்திய அரசாங்கத்தையே கிடுகிடுக்கச் செய்த பல இலட்சக்கணக்கான மக்களின் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன.

### உள்நோக்கம்

திரு. காமராஜ் வீட்டின் மீதும் படையெடுப்புநடத்தியுள்ளனர். நாசவேலைகள் பல நடத்தப்பட்டுள்ளன. புகைவண்டிகளும் தடம் புரண்டன. அதனால் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. நாடே அல்லோலகல்லோலப்படுகிறது.

நாடெங்கினும் நடந்த ஆர்ப்பாட்டங்களின் உச்சக் கட்டந்தான் டில்லியில் நடந்த பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் இந்த ஆர்ப்பாட்டங்கள் அனைத்தும்ஒரே ஒரு உள்நோக்கத்தைக் கொண்டவை என்று கூறப்படுகிறது.

இத்தகைய பலத்த ஆர்ப்பாட்டங்களுக்கும், கலகங்களுக்கும் பின்னால்ஒருபலத்த சக்திசெயல்படுவதாக ஊகிக்கப்படுவதாகப் புதுடில்லிச் செய்தியொன்று கூறுகிறது.

நாடெங்கும் ஆர்ப்பாட்டங்கள்! அதற்குச் சிகரம் வைத்ததைப்போல புது டில்லியில் ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தலைநகர் அமளிதுமளிப்பட்டது. திரு. மொரார்ஜியின் கை ஓங்குகிறது. இடதுசாரியான நந்தா ஓட்டம் பிடித்தார். பிரதமர் இந்திரா அமைச்சரவையில் சில மாற்றங்கள் செய்தார்.

ஆனால் மீண்டும் மீண்டும் ஆர்ப்பாட்டங்கள் கிளம்புகின்றன. திருமதி இந்திரா முற்றிலும் வலதுசாரியாக மாறினாலன்றி, திரு. மொரார்ஜி அரசகட்டிலேறும் நிலைமை உறுதியுடன் உருவாகி வருவதாகக் கூறப்படுகிறது.

இதற்குச் சரியான ஆதாரம் இருக்கிறதென்றே தோன்றுகிறது.

### பிரதமரை நீக்க சதியா?

டில்லி ஆர்ப்பாட்டங்கள் 'ஜனசங்' என்னும் (பழைய இந்து மகாசபையின் மறுபிறப்பு) அதி தீவிர வலதுசாரிக் கட்சியும், மற்றோர் இராணுவக் கட்டுப்பாடுள்ள அதி தீவிர வலதுசாரி ஸ்தாபனமான ஆர். எஸ். எஸ். சும் (இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவரே காந்திஜியைக் கொலைசெய்தவர்) ஏற்பாடு செய்யப்பட்டவை என்று தெரிகிறது.

'பசு-வதை தடுப்பு' என்ற போர்வையில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தும்படி பல இலட்சக்கணக்கான மக்கள் தூண்டப்பட்டார்களெனினும், அந்த ஆர்ப்பாட்டங்களின் உள்நோக்கம்' சாத்தியமானால் திருமதி இந்திரா காந்தியைப் பிரதமர் பதவியிலிருந்து அகற்றிவிட்டு திரு. மொரார்ஜி தேசாயை அரசகட்டிலேற்றுவதே—அது சாத்தியமின்றேல் அரசாங்கத்திலிருந்து இடதுசாரிகளை விரட்டிவிட்டு, அரசாங்கத்தில் வலதுசாரிகளின் கையை ஓங்கச்செய்வதே என்று தலைநகரில் பேச்சு அடிபடுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

'திருமதி இந்திராகாந்திக்கு நெருக்கடியான நிலைமையைச்சமாளிப்பதற்கான திறமையில்லை. நாட்டிலே குழப்பத்தை அடக்கி, அமைதியை நிலைநிறுத்தும் ஆற்றல் அவரிடம் கிடையாது. அதற்குத் தகுந்தவர் திரு. மொரார்ஜி தேசாயே! அவரால்மட்டுமே இக்கலகங்களை

#### உலகவலம்

அடக்கமுடியும்' என்றெல்லாம் டில்லியில் காங்கிரஸ் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறதாம்.

### அந்தச் சக்திக்கு பலியானேன்

இடதுசாரிகளை ஆதரிக்கும் உள்நாட்டு அமைச்சர் திரு. நந்தா மந்திரிசபையிலிருந்து வெளியேறிவிட்டார். 'என் முதுகுக்குப் பின்னால் ஒரு மாபெரும் சக்தி சதிசெய்தது. அந்தச் சக்திக்கு நான் பலியாகிவிட்டேன்' என்று அவர் தமது ராஜிநாமாபற்றி குறிப்பிடுகையில் கூறியுள்ளார்.

இந்த மாபெரும் சக்தி மந்திரிசபையிலிருந்து இடதுசாரி சக்திகளை அநேகமாக ஒழித்துக்கட்டிவிட்டதென்றே கருதலாம். நேருஜியின் வலதுகரமாகத்திகழ்ந்த திரு. கிருஷ்ணமேனனுக்குப் பம்பாயில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு அனுமதி மறுத்ததும் இதே மாபெரும் சக்தியின் கைவரிசைதானாம். இந்த மாபெரும் சக்திக்குப் பின்னால் மற்றொரு சக்தி இயங்குகிறதாம். ஆபிரிக்க நாடுகளிலும், இந்தோனேஷியாவிலும் இயங்கிய ஒரு வெளிநாட்டுச் சக்திதான் இந்தியாவிலும் இயங்குகிறதாம்.

### தேர்தல் நடைபெறுமா?

எப்படியும், காங்கிரஸ் வலதுசாரிகளின் முயற்சிகள் பயனளித்து வருகின்றன. இடதுசாரிகள் ஒதுக்கப்படுகின்றனர் இன்னும் கடுமையான நெருக்கடிகளை உண்டாக்கி திருமதி இந்திராகாந்தியையும் ஒதுக்கிவிடுவதற்கு ஏற்பாடுசெய்யப்படுமானால், ஆச்சரியப்படுவதற்கில்லை. அவர் தன்னைத் தான் திருத்திக்கொண்டாலன்றி, இன்று நந்தாவைச் சில சக்திகளுக்குப் பலிகொடுத்ததைப் போல, நாளை அதே சக்திகளுக்குத் தன்னைத் தானே பலியிட்டுக் கொள்வார் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

அடுத்துவரும் இந்தியப் பொதுத்தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்ற ஒரு புரளி நாடெங்கும் கிளப்பப்பட்டுள்ளது. திரு. மொரார்ஜி தேசாயை மந்திரிசபைக்குள் கொண்டுவருவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே இப்புரளி கிளப்பிவிடப்பட்டுள்ளதாம்.

நாட்டிலே பூரண அமைதி ஏற்பட்டு திட்டப்படிகுறித்த நாட்களில் பொதுத்தேர்தல் நடைபெற வேண்டுமானால், திரு மொரார்ஜி தேசாயிடம் பிரதமர் பதவி ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற பிரசாரம் தலைநகரில் சூடு பிடித்து வருவதாகப் புதுடில்லிச் செய்திகள் கூறுகின்றன.

---

# அறிஞர் அண்ணா தென் சென்னையில் போட்டியிடுவார்?



தி. மு. கழகத் தலைவர் அறிஞர் சி. என் அண்ணாதுரை இம்முறை தென் சென்னைத் தொகுதியிலிருந்து டில்லி லோகசபாவுக்கு போட்டியிடலாம் என்று இப்பொழுது நம்பப்படுகிறது. ஆரம்பத்தில் அறிஞர் அண்ணா இம்முறை தேர்தலில் போட்டியிட மாட்டார் என்று கூறப்பட்டது.

இலங்கை வந்த தி. மு. கழகப் பிரமுகர்களான சென்னை மேயர் மைனர் மோசஸ், துணை மேயர் திரு. இராசகோபன், திரு. ஏ தங்கவேலர் ஆகியோரும் இதே கருத்தினையே இங்கு வெளியிட்டிருந்தார்கள்.

தி. மு. கழகப் பொருளாளர் திரு மு கருணாநிதியும் சில மாதங்களுக்கு முன்னரே அறிஞர் அண்ணா இம் முறை தேர்தலில் போட்டியிட மாட்டார் என்பதை பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இப்பொழுது தனது பழைய முடிவை அண்ணா மாற்றிக் கொண்டதாகவும் அவர் பெரும்பாலும் தென் சென்னைத் தொகுதியில் போட்டியிடலாம் என்றும் கூறப்படுகிறது. தென் சென்னைத் தொகுதியை அறிஞர் அண்ணா தெரிவு செய்தமைக்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகிறது.

### இரண்டு காரணங்கள்

ஒன்று தென் சென்னைத் தொகுதி தி. மு கழகத்தின் கோட்டையாக இருப்பதால் எத்தகைய இடர்ப்பாடுமின்றி வெற்றி பெற்றுவிட முடியும். அதே நேரத்தில் ஏனைய தொகுதிகளில் போட்டியிடும் எதிர்க்கட்சி வேட்பாளர்களுக்காக பிரச்சாரம் செய்வதற்கும் இது சுலபமாக இருக்கும்.

இரண்டாவது பொதுத் தேர்தல் முடிவில் கழகம் சென்னை சட்டசபையைக் கைப்பற்றக் கூடியளவிற்குப் பெரும்பான்மை பெற்றிருந்தால் அண்ணா அவர்கள் தமது டில்லிப் பதவியைத் துறந்து தமிழ் நாட்டில் தங்கவேண்டியேற்படலாம். அங்ஙனம் எம். பி. பதவியைத் துறக்கும் பொழுது சாதாரண ஒருவரையும் கழகம் தனது வேட்பாளராக நிறுத்தி மீண்டும் தென் சென்னையைத் தன தாக்கிக் கொள்ளலாம். இக் காரணங்களே அண்ணாவின் முடிவுக்கு சாதகமாக இருந்தன என்று நம்பப்படுகிறது.

தென் சென்னைத் தொகுதி என்றுமில்லாத முக்கியத்துவத்தைக் கடந்த பொதுத் தேர்தலின் போது பெற்றிருந்தது. கடந்த தேர்தலின் போது தி. மு. கழகத்திலிருந்து வெளியேறிய திரு. ஈ. வி. கே. சம்பத்தும் தி. மு. கழக வேட்பாளர் நாஞ்சில் கி மனோகரனுக்குமிடையில் இங்கு நேரடிப் போட்டி ஏற்பட்டது. திரு. சம்பத் 'சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்பதாக' கூறிக் கொண்டு தனது பழைய தம்பி மனோகரனுடன்போட்டியிட்டு தமிழ் நாட்டின் முழுக்கவனத்தையும் அங்கு திருப்பி வைத்திருந்தனர். தேர்தலின் முடிவில் திரு. சம்பத் படுதோல்வி அடைந்ததுடன் தென் சென்னைத் தொகுதி தி. மு. கழகத்தின் ஒரு பெரும் கோட்டை என்பதையும் நிரூபித்துவிட்டது.

தென் சென்னைத் தொகுதி எம். பி. யாக இருக்கும் திரு. கி மனோகரன் இம் முறை தமிழ்நாடு சட்டசபைக்கு தென் சென்னை வட்டத்தில் உள்ள ஒரு தொகுதியிலிருந்து போட்டியிடுவார். திரு. மனோகரன் நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவர். பிறப்பால் அவர் தமிழர் அல்லர். ஆனால் சிறந்த தமிழ்ப் பேச்சாளர். அதே போன்று அவர் ஆங்கிலப் பேச்சாளரும் கூட.

ஜனநாயக தத்துவத்தை சிறப்பாக விளக்கக் கூடிய இந்திய அரசியல் வாதிகள் ஒரு சிலரில் திரு மனோகரனும் ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது.

தற்பொழுது டில்லி மேல் சபை (முதவை) உறுப்பினராக இருக்கும் அறிஞர் அண்ணாவின் பதவி காலம் 1968 ம் ஆண்டு மார்ச் மாதம் முடிவடைகிறது. ஆனால் அவர் தேர்தலில் போட்டியிடுவதற்காக இப் பதவியைச் 1967 ஆரம்பத்தில் இராஜினாமாச் செய்வார்.

### கலைஞர் எங்கே?

தி. மு. கழக பொருளாளர் கலைஞர் மு. கருணாநிதி அடுத்த பொதுத் தேர்தலில் தென் சென்னை நகர வட்டாரத்திலிருந்து அல்லது கோவை-2 தொகுதியிலிருந்து தமிழ் நாடு சட்டசபைக்குப் போட்டியிடுவார் என்று தெரிகிறது.

1957-ம் ஆண்டு தேர்தலில் திருச்சி மாவட்டம் குளித்தலை தொகுதியிலும் 1962 தஞ்சைத் தொகுதியிலும் போட்டியிட்டு திரு கருணாநிதி வெற்றி பெற்றார். சென்னை நகரில் திரு. கருணாநிதி போட்டியிட்டால தென் சென்னையில் உள்ள சைதாப்பேட்டை அல்லது எழும்பூர் தொகுதியில் போட்டியிடுவார் என்று தெரிகிறது.

எழும்பூர் தொகுதியில் கடந்த தேர்தலில் தற்போதைய அமைச்சர் திருமதி ஜோதி அம்மாள் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்டவர் தி மு கழக தொழிற் சங்கச் செயலாளர் பேராசிரியர் க. அன்பழகன். இருவருமே இம் முறை எழும்பூரில் போட்டியிட மாட்டார்கள்.

கோவை-2 தொகுதியிலிருந்தும் திரு. மு. கருணாநிதிக்கு அழைப்பு வந்திருக்கிறது இது பற்றியும் [illegible] பரிசீலனை செய்து வருகிறார் என்று தெரிகிறது. தேர்தல்

(14-ம் பக்கம் பார்க்க)

# "ஆண்டவன் கட்டளை"

## இலவச குறுக்கெழுத்துப் போட்டி

இப்போட்டியில் கலந்துகொள்வதன் மூலம் சினிமாஸ் நிறுவனத்தின் திரைகளில் திரையிடப்படும் ஒருபடத்தை இலவசமாகப்பார்க்க திரைப்படரசிகர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது.

**பரிசு விபரம்.**

**1 வது பரிசு—6 மேல் வகுப்பு டிக்கட்டுகள்**

**2 வது பரிசு—4 மேல் வகுப்பு டிக்கட்டுகள்**

**3 வது பரிசு—3 மேல் வகுப்பு டிக்கட்டுகள்**

**4, 5, 6 வது பரிசுகள் தலா 2 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.**

இப்பரிசுகளை வழங்க சினிமாஸ் நிறுவனத்தினரே முன் வந்துள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் கீழே கொடுக்கப் பட்டுள்ள 'கூப்பனை' நிரப்பி அனுப்பிவைக்க வேண்டியது தான்.

### முக்கிய குறிப்பு:-

1. சுதந்திரனில் பிரசுரிக்கப்படும் 'கூப்பனில்' மட்டுமே விடைகள் நிரப்பி அனுப்பப்படவேண்டும்,
2. ஒவ்வொரு விடையுடனும், சினிமாஸ் படமாளிகையொன்றில் படம்பார்த்த டிக்கட்டின் அடிக்கட்டை இணைக்கப்பட்டிருக்கவேண்டும்.
3. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

**முடிவுத் திகதி 8-12-66.**

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:-

போட்டி ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை,
சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு.

## விடைக் கூப்பன்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | னி | மா | 2 ஸ் | ■ | 3 | 4 வி | 5 |
| | ■ | ■ | 6 | 7 த் | | | ம் |
| 8 | லா | | ■ | | ■ | ■ | |
| 9 க | | | 10 | ச | 11 | ■ | ■ |
| | ■ | ■ | லி | ■ | 12 ண | 13 | ம் |
| ச | ■ | தா | | 15 ப | | பு | ■ |
| 16 | 17 ஜ | | ■ | 18 | ரு | ■ | 19 |
| ■ | | ■ | 20 | ல் | | ■ | |

முழுப் பெயர்.............................................

முகவரி.............................................

.............................................

.............................................
கையொப்பம்

## குறிப்புக்கள்

### இடமிருந்து வலம்.

1. தமிழ்த் திரைப்பட ரசிகர்களுக்கு நல்ல பல திரைப் படங்களை அளிக்கும் இந்நிறுவனமே 'ஆண்டவன் கட்டளை' யையும் அளித்துள்ளது.
3. ஆண்டவன் கட்டளையில் கதாநாயகியாக நடிக்கும் நடிகை.
6. ஆண்டவன் கட்டளையில் சிவாஜி ஏற்றிருக்கும் இது நடிப்புத் துறையில் பல புதிய உத்திகளைக் கையாள அவருக்கு வாய்ப்புக் கொடுத்துள்ளது.
8. வலமிருந்து இடமாகவாசித்தால் ஆண்டவன் கட்டளையில் நடித்துள்ள ஒரு நடிகர் அகப்படுவார்.
9. இவரது தேன் சொட்டும் பாடல்களை 'ஆண்டவன் கட்டளையில்' நிறைய காணலாம்.
12. அம்பு குறி தவறிவிட்டது.
14. ஆண்டவன் கட்டளையில் சிவாஜியின் அக்கா மகளாக நடித்திருக்கும் இவர் இடம் மாறி கிடக்கிறார்.
16. சிவாஜியின் மாணவனாக நடித்துள்ள இவர், இப்போது மளமளவென்று முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் ஒருவர்.
18. எந்தக் கதையும் நல்ல இது இல்லாவிட்டால் எடுபடாது.
20. தமிழ் எழுத்துத் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்.

### மேலிருந்து கீழ்.

1. ஆண்டவன் கட்டளையில் கதாநாயகனாக நடித்திருப்ப இவர்தான்.
2. கீழிருந்து மேலாக வாசித்தால், பரீட்சை எழுதிய மாணவன் மகிழ்ச்சியடையக்கூடிய சொல் ஒன்று வெளிப்படும்.
3. நாள்.
4. முன்னுக்கு வந்துகொண்டிருக்கும் இளைஞரான நடிகர் ஒருவர் குறுகிய நிலையில் தலைகீழாகத் தொங்குகிறார்.
5. அறுசுவையில் ஒன்று சிதறிவிட்டது.
7. மாறுபட்டுக் கிடக்கும் இது இல்லாவிட்டால் மனிதனால் எதுவும் செய்யமுடியாது.
10. இன்று வெற்றிப்பட நடிகையாகிவிட்ட இவர் இங்கு வெற்றியிழந்து காணப்படுகிறார்.
11. ஆண்டவன் கட்டளையின் கதாநாயகன் சிரசாசனம் புரிகிறார்.
13. இவர் நடித்திருக்கும் படத்தில் சிரிப்புக்குக் குறைவேது?
14. கிருஷ்ணனை நினைத்து இவள் தலைகீழாகத் தவம் புரிகிறாள் போலும்!
15. இரவின் மறுபக்கம்.
17. சங்கீதத்தில் இது சுத்தமாக இருக்க வேண்டுமென்று கூறுவார்கள்.
19. அசோகன் இந்தப் பெயரில் 'ஆண்டவன் கட்டளையில்' நடித்திருக்கிறார்.

# என் அபிமான ரோஜா

சிறு வயதிலிருந்தே எனக்கு சரோஜாதேவி என்றால் மிகவும் பிடிக்கும். பள்ளி நாட்களில் இருந்து அவர் நடித்த படங்களை ஆவலோடு பார்த்து வருகிறேன். என் அபிமான ரோஜா என்று அவரைப் பற்றி என்னுடைய தோழிகளிடமும் நான் பெருமையடித்துக் கொண்டிருக்கிறேன்.



சில ஆண்டுகளுக்கு முன்னால் 'வளர்பிறை' என்ற படத்திற்காக மைசூரிலுள்ள நந்தி மலைக்கு வெளிப்புறக் காட்சிகளில் நடிக்க சரோஜாதேவி வந்திருந்தார். கல்லூரியில் பயின்று வந்த நான் அந்தச் செய்தியைக் கேட்டதும் படப்பிடிப்பின்போது அவரைக் காண ஆசை கொண்டேன். எனவே விடுமுறை எடுத்துக் கொண்டு ஒரு காரில் என் குடும்பத்தைச் சேர்ந்த வேறு சிலரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டேன்.

சரோஜாதேவி நந்திமலைப்பகுதியில் 'கப்பன் ஹவுஸ்' என்ற ஒரு மண்டபத்தில் தங்கியிருந்தார். மண்டபத்தைச் சேர்ந்த ஓர் அறைக்கு வெளியே விலை உயர்ந்த ஒரு ஜோடிக் காலணிகள் கிடந்தன. மிக வேலைப்பாடு அமைந்த அந்தக் காலணிகளைக் கண்டதும் அங்குதான் சரோஜாதேவி தங்கியிருக்க வேண்டும் என்று யூகித்தேன். அப்பொழுது சிறுமியாக நான் இருந்ததால் திடீரென்று ஒரு குறும்புத்தனம் செய்தேன். சரோஜாதேவி 'மேக்கப் போடும் அறையை விட்டு வெளியே வரும் பொழுது சற்று நேரம் காலணிகளைக் காணாது தேடட்டுமே என்று எனக்குத் தோன்றியது. அதைச் சற்று நேரம் வேடிக்கை பார்க்க எண்ணி சட்டென்று தேவியின் காலணிகளை எடுத்து மறைத்து வைத்துவிட்டேன்.

ஆனால் என் மனம் கேட்கவில்லை. என் அபிமான நடிகையை அனுவசியமாக ஏன் அப்படிப்பட்ட அவதிக்குள்ளாக்க வேண்டும் என்று தோன்றியது. எனவே ஒளித்து வைத்த காலணிகளை மீண்டும் அதே இடத்தில் வைத்துவிட்டேன். மேக் அபபை முடித்துக்

### ஆஷா சொல்கிறார்

கொண்டு சரோஜாதேவி வெளியே வந்த பொழுது நான் அவருக்கு குறுக்கே ஓடி வந்து நின்றேன். என்னைக் கவனித்த அவர் 'யார் இந்தப் பெண்! குறும்புக் காரியாக இருப்பாள் போலிருக்கிறதே! என்று கேட்டார்.

'உங்களைப் பார்க்கத்தான் ஓடி வந்தேன்.' என்று சொல்லிவிட்டு ஓடிவந்துவிட்டேன்,. அப்பொழுது அவர் என்னைப்பற்றி என்ன எண்ணிக் கொண்டாரோ? என் முகத்தை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டார்.

சில ஆண்டுகளுக்கு பின்பு, பெங்களூரில் சரோஜாதேவிக்கு 'அமரசில்பி ஜக்கண்ணா' படத்தில் சிறந்த முறையில் நடித்ததற்காக 'அபிநய சரஸ்வதி' என்ற பட்டமளித்துக் கௌரவிக்கும் விழாவிற்கு ஏற்பாடாகியிருந்தது. அந்தச் சமயம் மீண்டும் என் அபிமான நடிகையைக் காண ஆசைப் பட்டேன்.

பட்ட மளிப்பு விழாவில் என்னை அடையாளம் கண்டு கொண்ட சரோஜாதேவி 'நீதானா? யாரோ என்னைத் துரத்திக் கொண்டு வருகிறார்கள் என்று தவறாக எண்ணிவிட்டேன்' என்று சொல்லிவிட்டு நிம்மதியாகச் சிரித்தார். சற்று நேரம் அவரிடம் பேசினேன். 'என்னுடைய அபிமான ரோஜா நீங்கள்' என்றேன். என் கணவரையும் அவருக்கு அறிமுகம் செய்து வைத்தேன். பேச்சுக்கு நடுவே, சரோஜாதேவி, 'நந்திமலைப் படப்பிடிப்பின் போது என்னைப் பார்க்க வந்திருந்தாய் அல்லவா!' என்று நினைவோடு கேட்டார். 'ஆமாம்' என்றேன்.

'இப்பொழுது என்ன செய்கிறாய்?' என்று கேட்டார் அவர்.

'விமானப்பணிப் பெண்ணாக இருந்து வருகிறேன்' என்று பதிலளித்தேன்.

'அதுதான் விமான வேகத்தில் என் காரை விரட்டிக் கொண்டு வந்திருக்கிறாய்!' என்று சொல்லி மீண்டும் சிரித்தார் சரோஜாதேவி.

இப்பொழுது நானும் சினிமா நடிகையாகிவிட்டேன் நான் நடிகையான பின்பு பி ஆர். பந்துலு தயாரித்த 'நாடோடி' படப்பிடிப்பின் போது ஸ்டுடியோவில் சரோஜாதேவியைச் சந்தித்தேன். அவருடன் பேசிய பொழுது, 'நான் சினிமா நடிகையானாலும், என்றும் உங்களுடைய அபிமான ரசிகைதான். எனக்கு என்றும் தாங்கள் அபிமானரோஜா தான்' என்று கூறினேன்.

அதைக் கேட்ட சரோஜாதேவி, 'இப்பொழுதும் அப்படியிருப்பது ஆச்சரியந்தான்' என்றார்.

# நான் விரும்புவதும் வெறுப்பதும்

**நான்** திரையில் நடிக்க விரும்புகிறேன். திரைமறைவில் நடிக்க விரும்பவில்லை.

நன்றியை மறந்து விடும் செய்கை இருக்கிறதே அதைப்போலக் கொடியது வேறு ஒன்றுமில்லை. அத்தகைய நன்றி கொல்லும் செய்கையை நான் கட்டோடு வெறுக்கிறேன். செய்த உதவி சிறிதாயினும், நன்றியுடன் இருப்பதை நான் விரும்புகிறேன்.

என்னைக் கஞ்சன் என்று சிலர் சொல்வதைக் கேட்கும் போது எனக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்துவிடும். கஞ்சனு நான்? அதே சமயம் நான் செய்யும் பல உதவிகள், விளம்பரம் செய்யாமல் செய்வதால், பலருக்குத் தெரியாமற் போய் என்னைத் தவறாக மதிப்பிட்டு, கஞ்சன் என்று கூப்பிடுகிறார்களே என்பதை நினைக்கும் போது எனக்கு வருத்தமாக இருக்கும்.

நேர்மைக்குத் தலை வணங்குபவன் நான். அதாவது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது எனக்குப் பிடிக்காது. ஆள் இருக்கும் போது ஒரு மாதிரியாகப் பேசுவது, ஆள் இல்லாத சமயம் வேறு மாதிரியாகப் பேசுவதும் எனக்குப் பிடிக்காது.

பலர் என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே என்ற கவலை எனக்கு இருந்தாலும், ஆண்டவனுக்காவது என்னைப் புரிகிறதே என்ற மகிழ்ச்சி எனக்கு இருந்து வருகிறது.

வாயில்லாப் பூச்சிகளாக வாழும் மனிதர்களைக் கண்டு நான் பச்சாத்தாபப்படுகிறேன். அதே சமயம் வஞ்சனையாக மிரட்டிஉருட்டி காரியத்தைச் சாதித்துக் கொள்ள நினைப்பவர்களை காணும் போது மனம் கொதித்து எழுவேன்.

நான் மதிப்பது எனது எஜமானர்களான ரசிகர்களை. ஆம், அவர்கள் தான் எனக்கு படி அளக்கும் முதலாளிகள். அதே சமயம், காக்காய் பிடித்து வாழும் ஈன ஜன்மங்களை நான் ஏறெடுத்தும் பார்க்கமாட்டேன். அதுவும் ஒரு பிழைப்பா?

நேர்மையான முறையில் எழுதப்படும் விமரிசனங்களை நான் வரவேற்கிறேன். அவை தான் என் போன்ற கலைஞர்கள் முன்னேறவும், எங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ளவும் உதவும். அதே சமயம் முகஸ்துதியை நான் வெறுக்கிறேன். நேர்மையான விமர்சனம் எப்படி ஒருவனை வாழ்விக்குமோ, அதேபோல அளவுக்கு மீறிய முகஸ்துதி ஒருவனை கிழே தள்ளி விடவும் செய்யும். இதை நான் புரிந்து கொண்டிருக்கிறேன்.

சுறு சுறுப்பாக எறும்பு போல எப்போதும் இயங்கிக் கொண்டிப்பதை நான் விரும்புகிறேன். நேரத்தை வீணாக்குபவர்களையும், சோம்பேறிகளையும் நான் வெறுக்கிறேன்.

நான் பெருமைப்படுவது என மனைவியர்களைப் பற்றி. இருவரும் எனக்கு இரு கண்கள்.



ஜெமினி கணேசன் எழுதுகிறார்


படவுலகில் நேர்மை குறைந்து வருவது கண்டு நான் சிறுமைப்படுகிறேன்; நான் இந்த உலகைச் சேர்ந்தவன் என்பதனால்;

நான் இரக்கப்படுவது புலித் தோல் போர்த்த பசுக்களைக் கண்டு; நான் எச்சரிக்கையாக இருக்க நினைப்பது பசுத் தோல் போர்த்த புலிகளைக் கண்டு. கலையின் வளர்ச்சியை நான் வரவேற்கும் அதே சமயம், கலை கொலைசெய்யப்படுவது கண்டு மனம் புழுங்குகிறேன்.

பெரியோர்கள் நல்லவர்களின் ஆசிகளை நான் பெற விருமபுகிறேன். அதே போல என்னால் முடிந்த அளவுக்கு நல்ல காரியத்துக்கும் எனது ஒத்துழைப்பையும் உறுதியையும் தர விரும்புகிறேன்.

நான் சொல்ல விரும்புவது உண்மையை. ஆனால் அது உலகுக்கு தீமையாக மாறிவிடுமானால் அதனைப் பேச நான் விரும்பவவில்லை.

மேற்படி எனது கருத்துக்கள் எனது உள்ளத்தை உங்களுக்குஓரளவு படம்பிடித்துக் காட்ட உதவும் என்று நினைக்கிறேன்.



எம். ஜி ஆர் — ஜெயலலிதா, படம்: முகராசி. தேவர் பிலிம்ஸ் தயாரித்த இப்படம விரைவில் சினிமாஸ் திரைகளில் வெற்றிப் பவனி வரக் காத்திருக்கிறது.

# ஜெய்சங்கர்-விஜயலட்சுமி போட்டா போட்டி

## சிறுவர்களுக்கு அடித்தது 'சான்ஸ்'

**பா**லன் பிக்சர்சாரின் பெயரிடப்படாத படத்தில் நடிக்க வந்திருந்த எல். விஜயலட்சுமியும், ஜெய்சங்கரும் தனியாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.



அச்சமயம் அவர்களினருகே இரு சிறுவர்கள், நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் சுமார் 10 வயது இருக்கும்.

விஜயலட்சுமி, ஜெய்சங்கரிடம் 'யார் இந்தச் சிறுவர்கள்?' என்று கேட்டார்.

'இவர்களா? 'பயில்வான்கள்,படத்தில் குஸ்திபோடுவதற்கென்று வந்திருக்கிறார்கள்' என்றார் ஜெய்சங்கர்.

'பயில்வான்கள்ா? இவர்களா??' என்று கேட்டுவிட்டு அலட்சியமாகச் சிரித்தார் விஜயலட்சுமி.

'என்ன அலட்சியமாகச் சிரிக்கிறாய்? பையன்களின் தோற்றத்தைக்கண்டா? என்றார் ஜெய்சங்கர்.

'ஆமாம்' என்று தலையை அசைத்தார் விஜயலட்சுமி.

'இந்தப் பையன்களிடம் ஸ்டண்ட் மாஸ்டர்கள் எல்லாம் கூட ஒன்றும் செய்ய இயலாது.'ரியலிசம்' என்றால் இவர்களுக்கு அப்புறம் தான் எல்லாரும்' என்றார் ஜெய்சங்கர்.

'அப்படியா?' என்ற விஜயலட்சுமி' அதையும் தான் பார்ப்போமே' என்றார்.

'சேச்சே, விளையாட்டு விபரீதமாகப் போய் விடும்!' என்று தடுத்தார் ஜெய்சங்கர்.

'அதையும் பார்ப்போமே!' என்ற விஜயலட்சுமி 'தம்பி, எங்கே குஸ்திபோடுங்கபார்ப்போம்' என்றார்.

உடனே சிறுவர்கள் இருவரும் தமது சட்டைகளைக் கழற்றிப் போட்டு விட்டு குஸ்தி போட ஆரம்பித்துவிட்டார்கள்.

பெரியவர்கள் கூடப்பயப்படும் குத்துக்களையும், பிடிகளையும் அடிதடிகளையும் பார்த்துக் கலவரமடைந்த விஜயலட்சுமி 'போதும் தம்பிகளே, போதும்' என்று சத்தம் போட ஆரம்பித்தார்.

ஆனால் அவ்விரு சிறுவர்களும் அதைக்காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை- தொடர்ந்து சண்டையிட்டனர். சிறிது நேரத்தில் ஒரு சிறுவனின் காலில் இரத்தம் கசியத்தொடங்கியது.



உடனே ஜெய்சங்கர் 'சொன்னேனே, கேட்டியா?' என்று விஜயலட்சுமியிடம் சொல்லி விட்டு, இருவரையும் தடுத்து நிறுத்தினர். தம் பையில் இருந்த ஐம்பது ருபாய் பணத்தை யெடுத்து அன்பளிப்பாக வழங்கினர்.

அதைப்பார்த்திருந்த விஜயலட்சுமியும்,தம்மிடமிருந்த பணத்தில் ஐம்பது ருபாவை அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினர்.

ஒரு மணி நேரத்தில் 100 ருபா சம்பாதித்து விட்ட மகிழ்ச்சி சிறுவர்களுக்கு ஏற்பட்டது.

## விஜயா போட்ட போடு

**சா**ரதா புரடக்சன்சாரின் 'பட்டணத்தில் பூதம்' படப்பிடிப்பு இடைவேளையில் ஜெய்சங்கர், கே. ஆர்.விஜயா டைரக்டர் எம். வி. ராஜன், ஆகியோர். விஜயா ஸ்டுடியோவில் பேசிக்கொண்டிருந்தனர்.

அச்சமயம் ஸ்டுடியோ வேலையாள் ஒருவர் 'ராமு' படத்தில் சிறப்புற நடித்துள்ள விஜயாவை பாராட்டி விட்டு 'உங்கள் படங்கள் எல்லாம் சக்சஸ் தான்' என்று புகழ்ந்தார். இடையே குறுக்கிட்ட ஜெய்சங்கர், 'விஜயான்னு என்ன தெரியுமா? ஜயம் என்றால் வெற்றி. விஜயா என்றால் வெற்றி நடிகை, பேரிலேயே தெரியல்லை? என்று கிண்டல் செய்தார்.

விஜயா சும்மா விடவில்லை. 'ஓகோ, அப்படியா! இந்தக் குருட்டுநம்பிக்கையால்தான் சங்கர் என்ற பெயருக்கு முன்னலே 'ஜெய், என்று சேர்த்து வைச்சுக்கிட்டிருக்கீங்க போலிருக்கு' என்று போட்டாரே ஒருபோடு, அங்கிருந்தவர்கள் எல்லோருமஅதைக் கேட்டு கொல்லென்று சிரித்தனர்.



விஜயா வெண்முத்துப் பற்களைக் காட்டிச சிரிக்க முத்துராமன் அந்தச் சிரிப்பில் மயங்கி இப்படி நிற்பது ''பஞ்சவர்ணக்கிளி''க் காகத்தான். பஞ்சவர்ணக் கிளி'யை விரைவில் சினிமாஸ் திரைகளில் கண்டு மகிழலாம்.

கோச்சிக்காய்க்கா வந்தது இந்தப் பஞ்சம்? கள்ளச் சந்தையில் மிளகாய் றுத்தல் விலை என்ன தெரியுமா? முழுரூபாய் நான்கு! சில இடங்களில் ரூ. 3.50 க்கும் கிடைக்கிறதாம். ஆனால் கூட்டுறவுச் சங்கக் கடைகளில் குறிக்கப்பட்டுள்ள விலை ரூ. 1.15 முதல் 1.50 வரைதான். ஆதலின் மிளகாய்க்கும் வந்தது பங்கீடு! இனி தலைக்கு கால் றுத்தல் கிடைக்குமாம். நம் நாட்டு மக்கள் திடீரென மிளகாய்ப் பிரியர்களாகிவிட்டனர். இல்லையேல் ஆண்டுதோறும் ரூ. 3 கோடிக்கு மிளகாய் இறக்குமதி செய்தும் ஏன் இந்தத் தட்டுப்பாடு?

# கிழங்கு-வெங்காயம்-மிளகாய் உற்பத்திக்கு மூன்றாண்டு திட்டம்

## அரசாங்கம் செய்யுமா?

இவ்வாரம் உள்நாட்டு விவகார அமைச்சர் டாக்டர் தகநாயக்கா வடபகுதிக்கு விஜயம் செய்தாரல்லவா? அவர் அங்கு மிளகாயைப்பற்றி பேச மறந்துவிட்டாலும் உருளைக் கிழங்கைப்பற்றி பேசியிருக்கிறார். இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கிலும் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கு சிறந்தது என்று அவர் சான்றிதழ் வழங்கியுள்ளார்.

அது மட்டுமா? உருளைக் கிழங்கு உற்பத்தியில் நாட்டைத் தன்னிறைவு பெறச் செய்யுமாறு யாழ்ப்பாணவிவசாயிகளுக்கு அமைச்சர் ஒரு வேண்டுகோளும் விடுத்துள்ளார்.

நாட்டின் தேவையைப் பூர்த்திசெய்யுமளவுக்குச் சின்னவெங்காய உற்பத்தியை பெருக்கிப் பெருமை கொண்டவரல்லவா யாழ்ப்பாணக் கமக்காரர்கள்? சின்னவெங்காய உற்பத்தியில் நாட்டைத் தன்னிறைவு பெறச் செய்யவேண்டுமானால், வடபகுதிகமக்காரர்களால்மட்டுமே அதனைச் செய்ய முடியுமென்பதை நாடே உணர்ந்தது.

இன்று அது உண்மையாகிவிட்டது. இதைக்கண்டுதான் அமைச்சர் மேற்கண்ட 'உருளைக்கிழங்கு வேண்டுகோளை'யும் விடுத்திருக்கலாம். உருளைக்கிழங்குஇறக்குமதிக்காக ஆண்டுதோறும் ரூ. ஒரு கோடி 80 இலட்சம் ஏற்றுமதி செய்யப்படுகிறதே!

இந்தப் பெருந்தொகைப் பணத்தைத் தடுத்துநிறுத்த வட இலங்கை விவசாயிகளால் மட்டுமே முடியுமென்பது அமைச்சரின் கருத்து போலும்! ஆனால் வெறும் வேண்டுகோளால் மட்டும் உருளைக்கிழங்கு உற்பத்தி பெருகிவிடுமென்று அமைச்சர்கூட எதிர்பார்க்கமாட்டார்.

## வசதிகள் வேண்டும்

கமச்செய்கைக்கு அவசியமான பசளை, விவசாயக் கருவிகள், உற்பத்தி முறைகளைப் பற்றி தெளிவான விளக்கங்கள், கடன்வசதி, நீர்ப்பாசன வசதி முதலிய அத்தியாவசியமான வசதிகள் அனைத்தும் கமக்காரர்களுக்கு தாராளமாகச் செய்துகொடுக்க வேண்டாமா?

அத்துடன் உற்பத்திப் பொருளை விற்பனவுசெய்வதற்கான வசதிகளும் வேண்டுமே!

இந்த வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்படுமானல், உருளைக்கிழங்கில் மட்டுமென்ன, எந்தக் கிழங்கின் உற்பத்தியிலும் நாட்டைத் தன்னிறைவுபடுத்த வடபகுதி விவசாயி பின்தங்கமாட்டான்.

போதியகாணிகளும், கமத்தொழிலுக்கு அவசியமான வசதிகளும் ஊக்கமும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டால் மிளகாய் உற்பத்தியிலும் தன்னிறைவு பெறுதல் கடினமன்று.

பருத்தி, புகையிலை உற்பத்தியிலும் இதே பிரச்சினை தான்.

நாடெங்கிலும் கைத்தறி நிலையங்கள் திறக்கப்படுகின்றன. திறமான துணிகளைக் கைத்தறியில் நெசவுசெய்யத் தொடங்கிவிட்டனர். ஆனல் அதற்கு மூலப்பொருளான பஞ்சு இங்கு போதியளவு உற்பத்திசெய்யப்படவில்லையே.

இந்நாட்டில்உற்பத்திசெய்யக்கூடிய மூலப்பொருளாக இருந்தும் அதை ஏன் இறக்குமதி செய்யவேண்டும்? தென்கோடியிலும் வடகோடியிலும் அதற்கான சுவாத்திய நிலை உண்டு. ஆனல் முடிந்ததைச்செய்வதற்கும் நம்நாட்டில் முடியவில்லையே!

## பாராமுகம் ஏன்?

புகையிலை ஏற்றுமதி விடயத்தில் அரசாங்கம் போதிய அக்கறை செலுத்தவில்லை என்று வடபகுதி புகையிலை உற்பத்தியாளர்கள் அரசாங்கத்தின்மீது குற்றஞ் சுமத்துகிறார்கள்.

வடக்கில் மட்டுமின்றி தெற்கிலும் புகையிலை ஒரு முக்கியமான விளைபொருள். ஆனல் அதற்கு அரசாங்கத்தின் ஆதரவுதான் போதியளவு இல்லை. வடபகுதியிலிருந்து கேரள ராஜ்யத்துக்கு அனுப்பிவந்த புகையிலை ஏற்றுமதி நின்றுவிட்டது. மீண்டும் புகையிலை ஏற்றுமதியைத் தொடர்ந்து நடத்த அரசாங்கம் என்னசெய்தது? இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவசியமானல் வேறு எதையாவது விட்டுக்கொடுத்தாவது புகையிலை ஏற்றுமதிக்கான ஏற்பாடுகளை இலங்கை அரசாங்கம் செய்திருக்க வேண்டாமா? இதற்கு ஒரு ஆக்கபூர்வமான ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமாகும்.

கடைசியாக ஒரு யோசனை! பெரிய (பம்பாய்) வெங்காயம், உருளைக் கிழங்கு, மிளகாய் ஆகிய மூன்றிலும் இன்னும் மூன்றே மூன்று ஆண்டுகளில் நாடு தன்னிறைவுபெற வேண்டும். அதற்கு 1970ல் முடிவடையும் ஒரு குறுகிய கால மூன்றாண்டுத் திட்டம் தீட்டி, புத்தாண்டில் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். தேசிய அரசாங்கம் செய்யுமா?

# எச்சரிக்கை! தமிழினத்தை....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பால் குடிக்கிறது. இத் தினசரி.

இதனுடைய முதற் தாக்குதலுக்கு இலக்காகியிருப்பது தமிழரசுக் கட்சி. ஈழம் வாழ் தமிழ்ப் பேசும் மக்களின் ஒரே குரலாக ஒலித்த இக் கட்சியை ஆட்டம் காணச் செய்து விட்டால், பிற்பாடு தமிழ்ப் பேசும் மக்களை எளிதாகச் சிதறடித்து விடலாம் என்று பகற் கனவு காணும் இவ் வேட்டுக்குத் தமிழ் மக்கள் தகுந்த பாடம் படிப்பிக்கத் தவற மாட்டார்கள்.

சிங்கள ஆசிரியர் பிரச்சினை, தமிழ் அரசாங்க ஊழியரும்-சிங்களமும், தமிழரசு அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் பற்றிய கற்பனைச் செய்திகள், இவற்றை அடிப்படைகளாக வைத்து பொய்மையும், கற்பனைகளையும் புனைந்து, துணிந்து வெளியிடுவதில் ஒரு புரட்சியை உண்டு பண்ணியிருக்கிறது இத்தினசரி. அதற்கிடையில் தன்னை 'மக்கள் தினசரி' என்றும் தம்பட்டமடித்துக் கொள்வதிலும், பெருமையடைகிறது. தமிழரசுக் கட்சியைத் தரைமட்டமாக்க நினைக்கும் இத்தினசரியின் விபரீத புத்தியினல், பெரும்பான்மையான தமிழ்ப் பேசும் மக்களின் வெறுப்பைத் தேடி வரும் இதற்குப் பெயர் 'மக்கள் தினசரி'. எப்படியிருக்கிறது பார்த்தீர்களா?

எத்தனையோ எதிர்ப்புக்களுக்கும், இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும் மிடையில் எதிர் நீச்சலடித்து, லட்சிய வெறி கொண்டு தியாகப் பாதையில் அடிமேல் அடி வைத்து மலர்ந்த தமிழரசுக் கட்சியிலிருக்கு—அதில் அங்கம் வகிக்கும் தியாகச் செம்மல்களுக்கு இத்தகைய எதிர்ப்புகளெல்லாம் வெறும் தூசிகளே?

ஒன்றை மட்டும் இங்கு முக்கியமாகக் குறிப்பிட விரும்புகிறேன். ஈழத்தில் நடமாடும் இன்றைய தமிழ்த் தினசரிகளில் ஒரு தினசரிதானும், தமிழ்ப் பேசும் மக்களின் சுபிட்சத்துக்காக—எதிர்கால நல்வாழ்வுக்காக— பரிந்து பேசத் தயாராக இல்லை என்பதை ஆணித்தரமாகக் குறிப்பிட விரும்புகிறேன். அப்படியான ஒரு நல்லெண்ணம் ஒரு தினசரிக்கும் அணுவளவேனும் இல்லை. இருந்திருந்தால், எல்லாத் தினசரிகளும் ஒன்று சேர்ந்தாற் போல், தமிழரசுக் கட்சியை எதிர்த்திருக்க வேண்டிய அவசியமே நேரிட்டிராது. எமக்கு ஆதரவு தாருங்கள் என்று கேட்கவில்லை. செய்திகளை உள்ளபடியாவது பிரசுரிக்கக் கூடாதா என்றுதான் வேதனையுறுகிறோம்.

இதற்கு ஒரேயொரு வழிதான் உள்ளது. சிங்கள முதலாளிகளின் ஆதிக்கத்தில் இருந்து வெளிவரும் தமிழ்த் தினசரிகளில், தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல் வாழ்வு பற்றிய செய்திகள் நிச்சயம் தமிழ் மக்களுக்குப் பாதகமாகவே முடியும். அவர்கள் மத்தியில் பிரிவினைகளை மேன் மேலும் வளர்ப்பதற்கே, அவை சாதகமாக அமையும். எனவே வருங்காலச் சந்ததியினரில் அக்கறை கொண்ட பணம் படைத்த தமிழ்ப் பெரியார்களில் சிலர் ஒன்று சேர்ந்து, தமிழன் நல்வாழ்வு பேண ஓர் தினசரியை உருவாக்க முயல வேண்டும். வேறொரு இனத்தைச் சேர்ந்த மக்களின், மேற்பார்வையில் வெளிவரும் தினசரிகள் எம்மை வேரோடு களைந்தெறியவே முயலும், தமிழனுல் தான், தமிழன் குறையை தெளிவாக எடுத்துரைக்க முடியும். இத்தகைய புனிதப் பணியில் ஈடுபடுவோரை தமிழ்ப் பேசும் மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள்.

'மதிவாதனன்' மன்றுர்.

# அறிஞர் அண்ணா....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

உடன் பாட்டின் பிரகாரம் கம்யூனிஸ்டுகளுடன் தொகுதி உடன்பாடு உறுதியானல் கோவை-2 தொகுதியில் அவர் பெரும்பாலும போட்டியிடவாய்ப்புஉண்டு.

## வட சென்னைக்கு யார்?

வட சென்னை —தில்லி பார்லிமெண்ட் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் திரு. எஸ். சி. சி. அந்தோனிப் பிள்ளை (இவர் இலங்கை அமைச்சர் திரு. பிலிப்குணவர்தனவின் மைத்துனர்) அல்லது திரு. விநாயகமூர்த்தி (சென்னை நகரசபை காங்கிரஸ் கட்சித் தலைவர்) வேட்பாளராக நிறுத்தப்படலாம் என்ற பேசப்படுகிறது. திரு. அந்தோனிப் பிள்ளை நிறுத்தப்பட்டால் தி. மு. கழகத்தின் சார்பில் தொழிற்சங்கத் தலைவர் திரு. ராகவானந்தம் போட்டியிடுவார்.

அமைச்சர் திரு.ராமையா இம் முறை புதுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிடலாம் என்றும் அவரை எதிர்த்து தற்போதையதி.மு. கழக எம். எல். ஏ. திரு. ஏ தியாகராசன் தி. மு. கழக வேட்பாளராகவே போட்டியிடுவார். என்றும் நம்பப்படுகிறது. அமைச்சர் திரு. சர்க்கரை மன்றுடியாரை எதிர்த்து குட்டபாளையம் திரு. சுவாமிநாதனை தி.மு.க. நிறுத்தலாம் என்றும் பேசப்படுகிறது.

## தில்லி செல்வார் எஸ். எஸ். ஆர்.

திரைப்பட நடிகர் திரு. எஸ். எஸ். இராஜேந்திரன் இம்முறை பெரிய குளம் தொகுதியிலிருந்து தில்லி சட்டசபைக்கும் போட்டியிடலாம் என்றும் நம்பப்படுகிறது. கடந்த தேர்தலில் மதுரை மாவட்டத்தில் உள்ள தேனித் தொகுதியிலிருந்து தமிழ் நாடு சட்டசபைக்கு தேர்ந்து எடுக்கப்பட்ட அவர் இம் முறை தில்லி சட்டசபைக்குப் போட்டியிட விருப்பம் தெரிவித்திருக்கிறார். பெரியகுளம் தாலுகாவிற்தான் இருக்கிறது தேனி.

பேராசிரியர் க. அன்பழகன் வந்தவாசி தொகுயிலிருந்து தில்லி சட்டசபைக்குப் போட்டியிடுவார் என்றும் கடந்த தேர்தலின் போது மாணவர்களாக இருந்த சிலரும், கடந்த இந்திக் கிளர்ச்சியின் போது சட்டக்கல்லூரியிலும், சர்வகலாசாலையிலும் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் சிலரும் கூட இம்முறை தி. மு. க. வேட்பாளர்களாகப் பல தொகுதிகளில் தமிழ் நாடு சட்டசபைக்கும், தில்லி பாராளுமன்றத்திற்கும் போட்டியிடுவார்கள். அடுத்த மாத ஆரம்பத்தில் சகல கட்சிகளினதும் வேட்பாளர் பட்டியல் வெளியாகிவிடும்.

—பூ.

# தமிழரசு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்களை வைது கொள்வதன் மூலம் தமிழர்களுடைய உண்மையான பற்றை எங்களுடைய தோம்பே பிரதிநிதி போன்றவர்கள் பெற முடியாதென்பதை நான் கூறவிரும்புகிறேன். ஓர் இனத்துடைய நட்புறவை நட்புறவாலேதான் பெற முடியும், அன்பைக் கொடுத்துத்தான் அன்பைப் பெற முடியும்.

## இரண்டு டயஸ்கள்

'முன்னர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தமிழரசுக் கட்சியுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை முறியடிப்பதற்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி பண்டாரநாயக்கா அவர்கள் செய்ய முன் வந்த நற்பணிகளைத் தடுத்து வைப்பதற்கும் பொறுப்பாயிருந்தவர்கள் இரண்டு 'டயஸ்கள்' தாம் என்பதை சுட்டிக் காட்டவிரும்புகிறேன்.

## என்றும் தயார்

'நான் இந்தச் சபைக்கு வெளியேயுள்ள சிங்கள மக்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன்; இந்த நாட்டிலே சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளாகவாழ்ந்து வந்திருக்கிறார்கள். பழைய வரலாற்றிலே அவர்கள் அன்பாக, இணைந்தும் வாழ்ந்திருக்கிறார்கள். அதனைப் போன்று இனிமேலும் ஒன்றாக இந்நாடு முன்னேற ஒத்துழைப்போம். அவ்வித ஒத்துழைப்பை எந்தத் தலைவர்களுக்கும் நல்க தமிழ் மக்கள் என்றும் ஆயத்தமாக இருக்கிறார்கள்.


## விளம்பரம்

வடமாகாண புத்தகக்கடை வியாபாரிகளுக்கு ஒரு முக்கிய அறிவித்தல்

உங்கள் புத்தக தேவைகளுக்கு கொழும்பு அப்போதிக்கரிஸ் கொம்பனியார் அச்சிடும் பள்ளிக்கூட மாணவர்களுக்குரிய (சிங்களம் - தமிழ் - ஆங்கிலம்) புத்தகங்களுக்கு கீழ் சொல்லப்பட்ட ஏஜெண்டுக்கு ஓடர் செய்யவும்.

சந்நிதிவாசா,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
5-11-1966.

எஸ். கே. சந்திரசேகரம்
வடமாகாண சோல் ஏசண்டு
கொழும்பு
அப்போதிக்கரிஸ் கொம்பனி

# ஓடிப்போனவன்

நவசோதி

## (20) நெஞ்சில் நிறைந்தவன்

வசந்தனைக் காணவில்லை. ஆஸ்பத்திரியிலுமில்லை; வீட்டிலுமில்லை. ஆபத்தான நிலையில் இருந்த வசந்தன் சொல்லாமலே சென்றுவிட்டான் என்று ஆஸ்பத்திரியே பரபரப்பில ஆழ்ந்தது. வீட்டிலோ, வசந்தன் எப்பொழுது வருவான் என்று அனைவருமே ஏங்கித் தவித்தனர்.

விமலநாதனுக்கு ஏற்பட்ட விபத்து வலது பெருவிரலைக் கொண்டு போயிற்று. அதனால் அருத் துயரில் ஆழ்ந்த அன்னையைப் பிடித்துக் கொண்ட தீராத இருமலும் காய்ச்சலும் அவளின் உடலை வாட்டி எலும்புந் தோலுமாக உருமாறியிருந்தாள். எனக்குக் கூட அண்ணன் சொல்லாமலே போய்விட்டாரே என்று வெளியேறிய நாளிலிருந்தே கவலையைக் கண்ணீராக வடித்து வந்தாள் மாலதி. விமலநாதனுக்கு ஏற்பட்ட துன்பமும் உருக்குலைந்த அன்னையின் நிலையும் அவளை மேலும் வாட்டியது.

இவர்களுக்கெல்லாம் ஆறுதல் மொழி கூறி தேற்றுவதற்காக அடிக்கடி வீட்டிற்கு வந்துபோன வேலுப்பிள்ளை வாத்தியார் கூட துயரத்தைத் தாங்காது வாய்விட்டு அழுத நாட்கள் பல. உண்மை நண்பனை இழந்துவிட்ட செல்வமோ தன் நெஞ்சம் நிறைந்த கவலையை எவருக்குமே வெளிக்காட்டாமலே அடக்கி வந்தான்.

வசந்தன் வீட்டை விட்டு வெளியேறி இரண்டு மாதங்களாகிவிட்டது.

அன்று காலை—

விபத்தினால் மூன்று கிழமைகளாக கல்லூரிக்குப் போகாதிருந்த விமலநாதன் மாலதியுடன் கல்லூரிக்குப் புறப்பட ஆயத்தமானான். அவனால் இன்னும் நொண்டாமல் நடக்கமுடியவில்லை. எழுந்து நடக்கும் நிலையில் அன்னை இருந்தாலும் காய்ச்சல் சரியாக விடாதபடியால் படுக்கையிலேயே இருந்தாள். ஏழரை மணி அடித்து ஓய்ந்தது...

விமலநாதனும் மாலதியும் அன்னையிடமும் அப்பாவிடமும் விடைபெற்றனர். மாலதியின் தோளைப் பிடித்து நொண்டிக் கொண்டே வாசலை நோக்கி நடந்தான் விமலநாதன்.

தலைநிமிர்ந்து வாசலைப் பார்த்த அவர்கள் அதிர்ச்சியடைந்த அப்படியே சிலையாகி நின்றனர்.

நெஞ்சம் பொங்கி வழியும் வேதனையால் வாய் துடிக்க நின்றான் வசந்தன்.

ஏதோ சொல்வதற்கு மூவரின் வாய்களுமே துடித்தன.

'மாலதி... தம்பி...'

நீண்ட பிரிவின்பின் வசந்தனின் பாச நெஞ்சம் வெடித்துக் கதறியது.

'அண்ணா...!'- துடித்த இரு இள நெஞ்சங்கள் ஒரே சமயத்தில் ஒலித்தது.

வசந்தனின் குரலைக் கேட்டு படுக்கையில் இருந்து வாசலுக்கு ஓடி வந்த சின்னம்மாவை பின் தொடர்ந்தார் சித்தப்பா.

'அம்மா... என்னை மன்னித்து விடம்மா, என்னை மன்னித்து விடுங்க...' சின்னம்மா என்ற உறவுக்கு சமாதி கட்டிவிட்டு அம்மா என்ற உணர்வோடு அவளின் கால்களிலே விழுந்தான் வசந்தன்.

'எழுந்திரு வசந்தா. இது என்ன கண்ணே. இந்தக் கோலம். உனக்கு என்ன நடந்தது...' வசந்தனை அணைத்துத் தூக்க அவள் குனிந்தாள். கண்ணீரால் அன்னையின் கால்களை நீராட்டிய வசந்தன் மெதுவாகத் தலையைத் திருப்பினான்.

'ஐயோ... இதென்ன தம்பி இது. உன் காலுக்கு என்ன தம்பி நடந்தது...' அன்னைக்கு அருகில் நின்ற விமலநாதனின் வலது காலைக் கட்டிப் பிடித்து தடவிக் கொண்டான் வசந்தன்.

'அதெல்லாம் ஆறுதலாகப் பேசலாம். நீ ஏன் வீணா மனதை அலட்டிக் கொள்கிறாய். நீ வந்து சேர்ந்ததே எங்களுக்குப் போதும்' என்று வசந்தனைப் பிடித்து கட்டிலுக்கு அழைத்துச் சென்றார் அப்பா.

தனக்கு நடந்தது எதையுமே கூற மறுத்த வசந்தன் தம்பியின் காலுக்கு நடந்ததைக் கூறும்படி வற்புறுத்தினான். அதை அன்னை கூற முயன்றபோது துக்கம் அவளின் வாயை அடைத்து மௌனமாக்கிக் கண்ணீரைச் சொரிந்தது. நடந்ததை அப்பா கூறி முடிக்கும்போது வசந்தன் மயங்கிவிட்டான். ரெயில் விபத்திலே சிக்கி அபாயகரமான நிலையில் அவன் இருந்ததை அவர்கள் எப்படி அறிவார்கள்.

வசந்தனின் மயக்கத்தைக் கண்டு பதைபதைத்துப் போனார்கள். டாக்டர் வந்து மயக்கம் தெளிவித்த பின்னர் தான் அவரிடம் உண்மையைக் கூறினான். உடனே ஆஸ்பத்திரிக்குச் செல்லும்படி அவர் கண்டித்தாலும் அதற்கு அவனா உடன்படுவான். தன்பாட்டில் ஏதோவெல்லாம் பிதற்றத் தொடங்கினான்.

வசந்தன் வந்துவிட்ட செய்தி கல்லூரிக்கும் எட்டியது. பாடத்தை இடையில நிறுத்திவிட்டு வசந்தனைக் காணும் ஆவலில் பாய்ந்தோடி வந்தார் வேலுப்பிள்ளை வாத்தியார். அவரைக் கண்டதும் 'ஓ' வென்று அழுதான் வசந்தன். ஆனந்தக் கண்ணீர் சொரிந்த ஆசிரியர் அவனை ஆஸ்பத்திரிக்கு வருமாறு வேண்டினார்.

'ஆஸ்பத்திரிக்குப்போனால் நான் எப்படித் திரும்பி வருவேன்... உங்க எல்லாரையும் பார்த்துக் கொண்டே நான் சாக...'— அவனை மேலும் பிதற்றாமல் தடுத்தார் வாத்தியார்.

அவனின் கரங்களைப் பிடித்துத் தடவிக் கொண்டிருந்தாள் மாலதி.

'அம்மா... மாலதி, உன்னை நான் நாவலப்பிட்டி மாதா கோவிலிலே பார்த்தேனம்மா...' வசந்தன் கூறுவதை விளங்காது கண்ணீர் சொரிந்தாள் மாலதி.

'ஏனம்மா அழுறாய்... கடவுள்தானம்மா மேரியின் வடிவில உன்னைக் காட்டினாரு. மேரியை பார்த்திருக்காட்டா இங்குநான் வந்தே இருக்கமாட்டேன். ஆனால் அவளோடை பேசக் கொடுத்து வைக்காத பாவி நான்...'— தூய்மையான அன்புச் சக்தி மத வேறுபாட்டை அழித்துவிட்டதை வசந்தனின் வார்த்தைகள் வெளியிட்டன.

வசந்தனின் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் மாலதி. அமைதி நிலவியது.

அவனையே அனைவரும் பார்த்தனர். அழுகையுடன் தொடர்ந்து பேசினான் வசந்தன்.

'அப்படி நான் ஆஸ்பத்திரியிலை இருக்கும் பொழுது என்னைப் பெற்ற அம்மா என்னட்டை வந்து அம்மாவின் சொல்லை மீறி நான் மீறு நடந்திட்டேனாம்... அம்மா கோவிச்சுக் கொண்டு போயிட்டாங்க...'

'அதையெல்லாம் இப்ப ஏன் வசந்தா நினைச்சு கவலைப்படனும். வீட்டிற்கு வந்தாச்சு என்று சந்தோஷப் படுறதை விட்டிட்டு...'— என்று இடையிலே குறுக்கிட்டார் வேலுப்பிள்ளை வாத்தியார்.

'அப்படிச் சொல்லாதீங்க சேர். வீட்டை விட்டே போனதுக்கு அம்மா அப்பா நீங்க தம்பி மாலதி எல்லோருமே என்னை மன்னிச்சிடுங்க...' என்ற வசந்தனின் கால்களைப் பிடித்து தடவிக் கொண்டார் ஆசிரியர்.

'எனக்கு எத்தனைபேர் உதவி செய்தாங்க தெரியுமா. கண்டியிலே இரத்தினம். அன்புத் தங்கை விமலா. நாவலப்பிட்டியிலே நண்பன் சந்தானம்... அவங்களுக்கெல்லாம் எதுவுமே செய்யமுடியாமல் பிச்சைக்காரனாகவே சாகப் போறேன்...' இதைக் கேட்டதும் மாலதி விக்கி விங்கி அழுதாள்.

'ஏன் வசந்தா... மாலதி அழுவதைத்தானா நீ பார்க்கணும்...'— அன்னை அவனை அன்பாகவே கடிந்து கொண்டாள்.

'அழாதை மாலதி அழாதை... எல்லாரும் சிரித்த முகத்தோடை இருக்கணும் ...சிரி மாலதி... நானும் சிரிக்கிறேன்...' என்ற வசந்தன் சிரிக்கிறான்.

கன்னத்தில் உருண்டோடும் கண்ணீரைத் துடைத்து அழுகையை அடக்கி அண்ணனுக்காக மாலதியும் சிரிக்கிறாள். ஒரு கணம், நெஞ்சம் நிறைந்து வழிந்த துயரத்தை சிரிப்பாகவே எல்லாரும் சிந்தினார்கள்.

இந்த நேரத்தில் அவனைப் பார்ப்பதற்கு இரத்தினம் விமலா இருவரையும் ஏற்றிக் கொண்டு அசுர வேகத்தில் தன் காரில் சந்தானம் வந்து கொண்டிருப்பதை வசந்தன் எப்படி அறிவான.

அவன் சிரிக்கிறான்.

கண்களை விரித்து எல்லாரையும் ஒரு முறை பார்த்தான் வசந்தன். மன்னிப்பைத் தாருங்கள் என்று கேட்பதைப் போன்றிருந்தது அந்தப் பார்வை.

மாலதியின் உள்ளத்தில் இனம் தெரியாத பயம் குடிகொண்டது. வசந்தனின் கரத்தை இறுக்கிப் பிடித்தாள். மாலதியையும் விமலநாதனையும் மாறி மாறிப் பார்த்தான் வசந்தன். மாலதியின் கண்கள் கண்ணீர் முத்துக்களை உதிர்த்தது.

—'மாலதி நீ ஏனம்மா அழுறாய் இனி உன் கன்னத்திலை உன் அண்ணன் அடிக்கவே மாட்டான்—' என்றான் வசந்தன்.

—'ஐயோ அண்ணா, நான் ஏன் மாலதியை அடிக்கப் போறேன். நான் எப்பொழுதோ திருந்திவிட்டேனே—' இதயம் விம்மி வெடித்துக் கதறினான் விமலநாதன்.

அதைக் கேட்டு சிரித்துக் கொண்டே மீண்டும் விழிக்காத கண்ணை இறுதியாக திறந்து மூடுகிறான் வசந்தன்.

கரங் குவித்துக் கும்பிடுகிறார் வேலுப்பிள்ளை வாத்தியார். கண்ணீர் 'பொல பொல' வென்று சொரிகின்றது.

சிரித்தவர்கள் அழுகின்றார்கள். தேற்றுவார் எவருமே இல்லாமல் தேம்பித் தேம்பி அனைவருமே அழுகின்றார்கள்.

வசந்தனோடு உறவாடிய நெஞ்சங்களை விட்டு ஓடிப் போனவன் ஓடிப்போய்விடவில்லை. அங்கு அவன் உறைந்து விட்டான். அதனால—சிரிப்பைச் சிந்திய அனைவரும் கண்ணீர் சொரிந்து ஓவென்று கதறி அழுது கொண்டே இருக்கின்றார்கள்.

வசந்தனின் பெற்றோர்களே மண்ணுலகத்திலிருந்து ஓடிவரும் செல்வ மகனை அன்புக் கரங்களை நீட்டி அணைத்துக் கொண்டார்கள்.

அவர்களின் ஆனந்தக் கண்ணீரில் நீராடி மகிழ்ந்தான் வசந்தன்.

(முற்றும்)



'ஓடிப் போனவனைக்' கண்டு பிடித்துத் தந்த திரு. க. நவசோதி இளைஞர் இலங்கைப் பல்கலைக் கழக சிறப்புப் பட்டதாரி. 'பல்லவர் காலமும் பக்திக் கோலமும்' என்ற அவரது ஆராய்ச்சிக் கட்டுரை பேராசிரியர்கள் பலரதும் பாராட்டைப் பெற்ற ஒன்று. பழந் தமிழிலக்கியத்தில் நிறைந்த ஈடுபாடுடையவராக திரு. நவசோதி இருந்த போதிலும் புதுமை இலக்கியத்திலும் அவ்வப்போது சில புதுமைகளைச் செய்து வருகிறார்.

குழந்தை இலக்கியம் என்ற பெயரில் 'பேய்'க் கதைகளைக் 'கூறி' வரும் இந்நாளில் திரு. நவசோதி இளைஞர் இலக்கியத்திற்கு ஒரு முன் மாதிரியையே 'ஓடிப் போனவன்' மூலம் வகுத்துவிட்டார். இவர் குழந்தைக் கவிதைகளும் எழுதியுள்ளார். நல்ல இலக்கியப் பேச்சாளரும் கூட.

## முடிவுரை

ஈழத்தில் மாணவர்களுக்காக இதுவரையிலும் எழுதப்படாத முறையில் இவ்வாறானதொரு குறு நாவலை எழுத வேண்டும் என்பது எனது நீண்டகால ஆசை. இவ்வாறான எண்ணம் அடிமனத்திலிருந்த போது ஈழத்தில் குழந்தை இலக்கிய வளர்ச்சி பற்றியும் உரைத் தலைப்பட்டேன்.

'பாரதியின் ஓடி விளையாடு பாப்பா' [illegible] குழந்தைப் பாட்டைப் போல நிறைந்து வழியும் ஈழத்து எழுத்தாளர்கள் என்பவர்கள் எத்தனை கதைகளைப் படைத்திருக்கிறார்கள்?

குழந்தை இலக்கியத் துறையில ஈழத்தில், தலைநிமிர்ந்து ஆறுமுகநாவலரும், சோமசுந்தரப் புலவரும் ஆனால் அவர்களுக்குப் பின்னால்—?

தமிழகத்தில் மாணவர்களுக்காக ஒரு ஏடு உண்டு. இலங்கையில் ஒன்று எதுவுமே இல்லை. அந்தளவு சென்றவர் போனபாதையே தெரியவில்லை. தமிழகத்தில் 'குழந்தை இலக்கியப் பணிமனை' என்று ஒரு நிலையமும் கூட குழந்தை இலக்கியத் துறையில் ஆராய்வுகளை மேற்கொண்டு வளர்ச்சிக்கு உதவ நிறுவப்பட்டுள்ளது. இலங்கையில்...?

தமிழ்ச் சினிமாவின் இருப்பிடமாகிய இந்தியாவிலேயே 'ஒரு சிறுவர் ஏடு' நீடித்து நின்று மாணவர் கரங்களில் தவழுகின்றன. ஆனால் தமிழகச் சினிமாப் பட செய்திகளை நிறைத்து ஆபாச மெருகூட்டி வெளிவரும் சஞ்சிகைகள்தான் ஈழத்துச் சிறுர்களின் கரங்களில்.

இதனால், குழந்தை உள்ளத்தில ஏன் பெரியோர் உள்ளத்தில் கூட சாதி சமய இன வேறுபாடின்றி உலகத்திற்கே பொதுவாக இருக்கக் கூடிய அன்பு-பாசம் என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு ஓடிப்போனவனை எழுத எண்ணினேன்.

ஒரு மாணவன் தன் தந்தையை, தாயை உறவினரை இழந்த நிலையில் தனக்காகப் பிறர் துன்பப் படுவதைத் தாங்காத நிலையில்; இரத்த உறவு அல்லாத உலகத்தோடு உறவாடிய நிலையில்; பிரியும் நிலையில்; பிறரின் [illegible] கண்டு இரங்கும் நிலையில் எத்தகைய மனத்துடிப்பில் இருப்பான் என்பதை இதில் காட்ட எண்ணினேன். கண்களில் நீர் சொரிய வாய் வார்த்தைகளை வெடித்துக் கொண்டிருக்கும் போது தான் பெரும்பாலான பகுதிகளை எழுதி முடித்தேன்.

'இவை எமக்கு ஏற்பட்ட அனுபவங்களே—' என்று மாணவ சமுதாயம் கூறினால் எழுதும்போது நான் வடித்த கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக மாறும்.

ஈழத்தில் குறிஞ்சி நிலமாகிய மலைநாட்டில் இருக்கும் பொழுதுதான் இக் கதை என் உள்ளத்தில் உருவாகியது. மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளரின் துன்பமே நிறைந்த வாழ்வு என் நெஞ்சை ஈர்த்தது. இதனால்தான் வசந்தனை அங்கு அழைத்துச் சென்றேன். வசந்தனின் வாழ்க்கையினையே நெறிப்படுத்தி விட்டு நினைவை ஏற்படுத்திய மாதா கோவில் 'மேரி'யின் சந்திப்பும் இதனால் தான் மலைநாட்டிலேயே ஏற்பட்டது.

இவ்வாறு பல புதுமையான அனுபவங்களை அடக்கியதால், ராஜா வீட்டுப் பிள்ளையாக இல்லாவிட்டாலும் தமிழ்ப்பட்டதாரியான துர்ப்பாக்கிய நிலையில் நிரந்தர வேலையற்றதினால் ஏழ்மையின் தாக்குதலுக்குள்ளாகிய ஒரு மனநிலையில் ஓடிப்போனவனை எழுதினேன், மாணவ சமுதாயத்திற்காக எழுதினேன். அவர்களின் உள்ளத்தில் நிலையான இடத்தை ஓடிப்போனவன் பெற்றிருந்தால் இதைப்போல இன்னும் பலவற்றைப் படைக்க அதே ஏழ்மை நிலையை இறைவன் என் வாழ்க்கைச் சொத்தாக விட்டு விடட்டும்.

—க. நவசோதி

# இப்பொழுது நடைபெறுகிறது! சென்ட்ரல்

(மருதானை)

மக்கள் திலகம்
**எம். ஜி. ராமச்சந்திரன்**
**சரோஜா தேவி**
**எம். என். நம்பியார்**
**எம். என். ராஜம்**
**கே. ஏ. தங்கவேலு**
**எம். சரோஜா**
ஆகியோர் திறம்பட நடித்த



வெற்றிக்குமேல் வெற்றி பெற்றுப் ஆயிரமாயிரம் அன்பர்களின் உள்ளங்களில் அழியா இடம் பெற்று விளங்கிய இந்த உன்னத திரைச் சித்திரம் அநேகரின் ஏகோபித்தவேண்டுகோளுக்கிணங்க மீண்டும் திரையிடப்படுகிறது!

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்

டைரெக்ஷன்: ப. நீலகண்டன்

# திருடாதே

(புத்தம் புதிய பிரதி)

கதை வசனம் கண்ணதாசன்


---

# வெற்றிகரமான 2-வது வாரம்

| | | | |
|---|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | நவா (கும்பனித்தெரு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) |

| | | | | |
|---|---|---|---|---|
| விஜயா (மட்டுநகர்) | ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) | மொடேன் (பண்டாரவளை) | மொடேன் (பதுளை) | விஜிதா (அட்டன்) |

ஆகிய திரைகளில்



**சிவாஜி கணேசன், தேவிகா, சந்திரபாபு**
**அசோகன், பாலாஜி, ராஜன், புஷ்பலதா,**
**நாகேஷ், வீரப்பா நடித்த**

பி.எஸ். வி. பிக்சர்சாரின்

# ஆண்டவன் கட்டளை

டைரக்சன்: சங்கர் இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி பாடல்: கண்ணதாசன்

---



## ஜனத்திரள் மிகுந்த திரைகளில் 3-வது வாரமாக காட்சி தருகிறது

| | | |
|---|---|---|
| எம்பயர் (கொழும்பு) | செல்லமகால் (கொழும்பு) | வின்சர் (யாழ்ப்பாணம்) |

| | | | | |
|---|---|---|---|---|
| இம்பீரியல் (மட்டக்களப்பு) | நெல்சன் (திருமலை) | கிங்ஸ் (பதுளை) | றீகல் (கண்டி) | றீகல் (நாவலை) |

★ கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய 'ஆயிரத்தில் ஒருவன்' நட்சத்திரங்களான

● **எம். ஜி. ஆர்.** ● **ஜெயலலிதா**
நடித்த

தேவர் பிலிம்ஸ் அளிக்கும்

# கன்னித்தாய்

---

**கெபிட்டலில் 3-வது வாரம்**

எம். ஜி. ஆர். சாவித்திரி, வீரப்பா, சந்திரபாபு நடித்த

# மகாதேவி

இப்பத்திரிகை ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஆம் இலக்கத்தில் 1966-ம் வருடம் நவம்பர் மாதம் 19-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.